கல்கி

KALKI 26.3.89 ரூ. 2









திர்க்கட்சிகள் ஒற்றுமை: ஹெக்டே நிலை என்ன ?



கேட்கும் ஸின்த்தால்
எதுவோ, கிடைக்கும்
ஸின்த்தால் அதுவே
Godrej
CINTHOL
ஒரிஜினல்
Godrej
CINTHOL
NEW
Godrej
CINTHOL
AND COMPLEXION SOAP
புதிது
CINTHOL
விருப்பமானதை தேர்ந்தெடுப்பீர்
கோத்ரெஜ்
MADISON-C-39-TM

ராஜாதி ராஜா



சீமையிலே படிக்கிற ராஜா, இரண்டு நாளுக்கு முன்னாலே தம்மோடு போனில் பேசிய தகப்பனாரைப் பார்க்க ஆசையோடு வந்தால், அவர் செத்துப் போய் விட்டார் என்றும் வீட்டுக்குள் புது உறவாய் வந்து ஒட்டிக் கொண்டிருக்கும் மூன்று பேர் தான் அவர் சாவுக்குக் காரணம் என்றும் அறிகிறார். அந்த நேர் வாரிசு நேரிடை நடவடிக்கையில் இறங்க வேண்டியது தானே?

அப்படி இறங்கினால் இரட்டை வேட ரஜினிக்கும் இரட்டை நாயகிகள் ராதா, நதியாவுக்கும் வில்லன் கோஷ்டி ராதா ரவி, ஒய். விஜயா போன்றோருக்கும் ஆர்ப் பாட்ட அமர்க்கள ஜனகராஜுக்கும் உங்கள் பாட்டனாரா வந்து வேலை கொடுப்பார்?

அதிமேதாவி ரஜினிகாந்தைக் காட்டிலும் ஆக்டிங் அப்பாவி ரஜினியோ, அசல் அப்பாவி ரஜினியோதான் அப்படியே மனசுக்குள் உட்கார்ந்து கொள்கிறார்.

நவ வீரர்களை நாசமாக்கி விட்டு வந்த ஹீரோ ரஜினி, நன்றி சொல்ல வந்த காதலி ராதாவிடம் 'தாம்' மானாவாரியாய் அடி பட்டு வந்திருப்பதாய்ச் சொல்ல, அவர் தோள் புறத்தை இதமாய் அழுக்கி விட, அந்த சுகத்தை ஆனந்தமாய் ரஜினி அனுப விக்க, பேச்சு சுவாரஸ்யத்தில் ராதா கையை விலக்கும்போதெல்லாம் ரஜினி பக்குவமாய் அந்தக் கையை எடுத்துத் தோள் பட்டையில் வைத்துத் தடவ விடுகிறாரே — அந்தத் திருட்டுச் சுகம் நம்மைத் தொற்றிக் கொள்ள வில்லை?

ராதாவுக்கு ரொம்பக் குறும்பு. உள்ளூரக் கொள்ளை ஆசையைப் பூட்டி வைத்துக் கொண்டு மேலுக்கு ரஜினியுடன் பிணங்கிக் கொள்ளும் அடிப் பார்வையில் குறுஞ் சிரிப்பில் கிளுகிளுக்க வைக்கிறார். சிறையில் கண்ட சின்னராசுவைத் தம் ராஜா என்று தப்பாகப் புரிந்து கொண்டு மனம் வெதும்பித் திரும்பியவர், எதிரில் அசல் ராஜா தோன்றும் போது அந்த மூகத்தில் பளிரிடும் பிரகாசம், ஓடி வந்து அணைத்துக் கொள்ளும் பரவசம் சூப்பர்!

ஊருக்கே கேலிப் பொருளாய் இருக்கிற அத்தை மகன் சின்னராசு ரஜினியிடம், 'மாமா... மாமா...' என்று உயிரையே வைத் திருக்கிறாரே நவநாகரிக நதியா, அதிலேயே அவர் உசத்தியான இடத்துக்குப் போய் விடுகிறார். சுற்றி நிற்கும் பெண்களைப் பார்த்து, 'எதுக்குடி சிரிக்கறீங்க? செருப்புப் பிஞ்சி போயிடும்,' என்று சீறும் வேகம், ரஜினியின் மடியில் உட்காராத குறையாய் நெருக்கி அமர்ந்து கொண்டு அவர் தலையில் அடித்துக் கண்டிக்கும் உரிமை, தாயத்து மகிமையால் தம் மாமன் படு வீராகி எதிர்ப்பைப் புரட்டியெடுக்கும் போது பூரித்து உற்சாகமூட்டும் பரவசம் — அத்தனையிலும் இளமை கொப்புளிக்கிறது.

வேலைக்காரியாய்ப் புகுந்த ஒய். விஜயா, தம் கூட்டாளி ராதா ரவியுடன் வீட்டுக்காரியாய்ப் புகுந்தாராம். வில்லத் தரம் படு அடித்தட்டு. புத்திசாலித்தனமாய் எதுவும் சாதிக்கவில்லை. காட்டான் மோட்டான் ரகம்.

ஜனகராஜ் தூள். அந்த உருவத்தைப் பார்க்கும்போதெல்லாம் கண்ணையும் காதையும் ரொம்பக் கூர்மையாய் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எந்தச் சமயத்தில் எதற்காக என்ன வால்யூமில் வெடிப்பார், ரகசியம் சொல்வார், வீரிடுவார் என்று அனுமானிக்க முடியாது. அந்த அமெரிக்க இங்கிலீஷும் ஏக அமர்க்களம், கலகலப்பு.

இளையராஜா இயற்றி இசையமைத்த 'ஆத்துக்குள்ளே அத்திமரத்திலே' பாடல் மட்டுமல்ல; காமெராவும் குளுமையாய் பாவம் பிடித்திருக்கிறது.

கதை அமைப்பு 'ஓபன் ஸஸ்பென்ஸ்' ஆக இருப்பதால் அடுத்து நடக்கப் போவது தெரிந்திருந்தாலும் அதையும்தான் பார்த்து விடுவோமே என்ற ஆவலைத் தூண்டும்படி ஏதோ ஓர் அபின் தடவப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

— பி. எஸ். எஸ்.

எதிர்க்கட்சிகள் ஒற்றுமை; ஹெக்டே நிலை என்ன?

இன்னும் ஒன்பதே மாதங்களில் பாராளுமன்றத் தேர்தல் வரப் போகிறது. ஆயினும் காங்கிரஸுக்கு மாற்றாக நினைக்கும் வகையில் இன்னும் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்ததாகத் தெரியவில்லை. யார் தலைவர், யார் பெரியவர் என்கிற பூசலே எதிர்க்கட்சிகளிடம் பிரதானமாக இருக்கிறது. இந்நிலையில் வரப் போகும் தேர்தலை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள்? எதிர்க் கட்சிகள் ஒற்றுமை பற்றி ராமகிருஷ்ண ஹெக்டே புதுதில்லியில் நமக்களித்த சிறப்புப் பேட்டி:

கேள்வி: ஜனநாயகம் ஆரோக்கியமாக வளர வேண்டுமானால் பலமான ஓர் எதிர்க்கட்சி தேவை. எனவே, ஜனதா தளத்தின் அமைப்பும் தேசிய முன்னணி கோஷமும் மக்களிடையே பெரிய பரபரப்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தின. ஆனால் சமீப காலமாக ஜனதா தளத்தில் ஏற்பட்டிருக்கும் உட்பூசல்கள் ஜனங்களிடையே பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இந் நிலையில் இ. காங்கிரஸுக்கு மாற்றாகக் கட்சியைப் பலப்படுத்துவதும் மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்துவதும் சாத்தியம் என்று நினைக்கிறீர்களா?

பதில்: இதன் சரித்திரத்தைச் சற்று விளக்க வேண்டும். 1979—ஆம் ஆண்டு ஜனதா ஆட்சி துரதிருஷ்டத்தின் சோதனையாகத் தோல்வியுற்று 80—ல் காங்கிரஸ் (மைனாரிட்டி ஓட்டுடன்) வெற்றி பெற்றதும் ஒரே விதமான சிந்தனையுடைய எதிர்க் கட்சிகள் எல்லாம் மறுபடியும் கூட்டுச் சேர வேண்டிய அவசியத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தன. அக் கட்சிகளிடையே, அடிப் படைக் கொள்கைகளில் அதிக வித்தியாசமில்லா விட்டாலும் கட்சிக்குக் கட்சி அதன்



“காங்கிரஸை முறியடிப்பதே புனிதமான பணி”



தனித் தன்மை என்ற ஒன்று இருப்பதால் சில கருத்து வித்தியாசங்கள் இருக்கத்தான் இருக்கும். ஆகையால் எதிர்க் கட்சிகளிடையே முழுமையானதோர் ஐக்கியமேற்படுவது சிரமம். உதாரணத்துக்கு ஒரு பக்கம் பாரதீய ஜனதாவும், இன்னொரு பக்கம் இடதுசாரிக் கட்சிகளும் இருக்கின்றன. இருப்பினும், காங்கிரஸுக்கு மாற்றாக ஓர் ஐக்கிய முன்னணி உருவாக வேண்டுமென்கிற தீவிரமான எண்ணம் '80 தேர்தலுக்குப் பிறகு எதிர்க் கட்சிகளிடையிலே வலுப்பெற்றது. அதன் காரணமாக நிறையக் கூட்டங்கள் போட்டோம். கொள்கைகளையும், திட்டங்களையும் அலசினோம். இருந்தாலும் எல்லாம் தோல்வியாகவே முடிந்தன. சிறந்த தலைவர்கள் நிறைய இருந்தார்கள் என்றாலும் ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லை. அதற்குக் காரணம், இந்த ஐக்கிய முன்னணியின் கட்சிக்கு யார் தலைவர் என்பதில் ஓர் ஒற்றுமையான முடிவிற்கு யாரும் வரவில்லை என்பதுதான். இந்த நிலையில்தான் ஹரியானா தேர்தல் ஒரு திருப்பத்தைக் கொண்டு வந்தது; நம்ப முடியாத அளவுக்கு வெற்றி பெற்ற லோக்தள வேட்பாளர் தேவிலால் திடீரென்று தலைவர் ஸ்தானத்துக்கு உருவானார்!

அதைவிட முக்கியமான திருப்பமாக மத்திய அமைச்சரவையிலிருந்து வி.பி. சிங்கின் ராஜினாமாவும் காங்கிரஸ் கட்சியிலிருந்து அவரது வெளியேற்றமும் நாட்டில் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கின. வெகு சீக்கிரத்தில் வி.பி. சிங் எதிர்க் கட்சிகளின் மையப் புள்ளியானார். மக்களிடையே அபிமானத்தைப் பெற்றார். மேலிடத்தில் இருக்கும் ஊழலை அவர் வெளிப்படுத்த முயன்றதாலேயே அவர் வெளியேற்றப் பட்டார் என்கிற எண்ணம் மக்களுக்கு அவர் மேல் அதிக மரியாதையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியா முழுவதிலும் பரவலாக மக்கள் அவரை அங்கீகரித்தார்கள். அவர் ஜனமோர்ச்சாவை ஆரம்பித்ததும் எதிர்க் கட்சிக் கூட்டுக்கு ஒரு புதிய பலம் கிடைத்தது போல் ஆயிற்று. கடந்த ஒன்றரை வருஷ முயற்சியில் ஜனதா கட்சி, ஜனமோர்ச்சா, லோக்தள்—ஏ, லோக்தள்—பி, எல்லாமாகச் சேர்ந்து, ஜனதா தளமாக உருவாயிற்று. இப்போது இருக்கும் ஒரே கேள்வி, காங்கிரஸுக்கு எதிரான பலமான கட்சியாக, வருகிற பொர்துத் தேர்தலில் காங்கிரஸை முறியடிக்கக் கூடிய கட்சியாக ஜனதா தளம் உருவாகுமா என்பதுதான். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய ஒற்றுமையான ஐக்கிய கூட்டாக அது உருவம் பெற்றால் நிச்சயம் அது சாத்தியமே.

கேள்வி: யார் பெரியவர் என்பதுதானே பிரச்னையே?

பதில்: அதேதான்! அதனால்தான் ஜனதா கட்சி வீழ்ந்தது. தலைவர்களிடையே உள்ள தப்பபிப்ராயங்களும் அவநம்பிக்கைகளுமே தோல்விக்குக் காரணம். அந்த மாதிரி ஒரு நிலை மறுபடியும் இன்றைக்கு வரக் கூடாது. இன்றைய ஜனதா தளத்துக்கு ஒரு லாபம் இருக்கிறது. அதன் தலைவர் யார் என்று மக்கள் அடையாளம் காட்டியிருக்கிறார்கள். மற்ற கட்சிகளாலும் அவர் ஏற்கப்பட்டிருக்கிறார். ஆம்; மக்கள், எதிர்க் கட்சிகள் ஆகிய இரு தரப்பினர் பார்வையிலும் ராஜீவ் காந்தியின் தலைமைக்கு மாற்றாக வி. பி. சிங்கின் தலைமைதான் இருக்க முடியும் என்கிற எண்ணம் வலுத்திருக்கிறது.

கேள்வி: தேசிய அளவில் வி. பி. சிங்குக்கு ஆதரவு இருக்கிறது என்கிறீர்களா?

பதில்: இருக்கிறது.

கேள்வி: தெற்கிலும்?

பதில்: ஆமாம். நீங்கள் பத்திரிகைகளில் கூட பார்த்திருப்பீர்கள். நடந்து முடிந்த தமிழகப் பொதுத் தேர்தலின் போது, வி. பி. சிங் சென்ற பிறகுதான் தி.மு.க.வுக்கு இருந்த ஆதரவு இன்னும் உயர்ந்து மேலோங்கியது!

கேள்வி: நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா?

பதில்: ஆமாம். சில தி.மு.க. தலைவர்களே என்னிடம் அதைச் சொன்னார்கள். ஆக, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், வி.பி. சிங்கின் பாப்புலாரிட்டி இப்பொழுது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் மக்களிடையே கணிசமான அளவுக்கு அவருடைய மதிப்புக் கூடி வருகிறது;

இன்னும் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

கேள்வி: இதில் தேசிய ஐக்கிய முன்னணியின் பணி என்ன? ஒரே சின்னத்தில் அனைவரும் போட்டியிட முடியுமா? சாத்தியமா?

பதில்: அகாலிதளம், தேசிய மாநாட்டுக் கட்சி (ஃபாரூக் அப்துல்லா) ஆகியவற்றைத் தவிர்த்து, மூன்று மாநிலக் கட்சிகள் இருக்கின்றன. மாநிலக் கட்சிகளானாலும் அடிப்படையில் ஜனதா தளத்தின் கொள்கைகளுக்கும் அவர்களுடைய கொள்கைகளுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது. அதனால் கூட்டுச் சேருவதில் விரோதம் வராது. ஒரே அரசியல் மேடையிலிருந்து போட்டி போடுவதிலும் பிரச்னையிருக்காது. இந்த மூன்றையும் சேர்த்துக் கொண்டு பின்னால் அகாலி தளத்தையும் சேர்த்துக் கொள்வோமானால் இந்தியாவின் முக்கால் பாகம் இணைந்த மாதிரி!

கேள்வி: முரண்பாடான கருத்துக்கள் கொண்ட இடது சாரியும், பாரதீய ஜனதாவும் உள்ளனவே? என்ன செய்வீர்கள்?

பதில்: பாரதீய ஜனதா இல்லாத மூன்று மாநிலங்களில் இடதுசாரிக் கட்சி வலுவாக இருக்கிறது. அதே போல இடது சாரி வலுவில்லாத ம. பிரதேசம், ராஜஸ்தான், இமாசல பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் பாரதீய ஜனதா பலமாக உள்ளது. அதனால் அந்தந்த மாநிலங்களில் எந்த மோதலும் இல்லாமல் அவர்கள் தேசிய முன்னணியுடன் பங்கு பெறலாம். தொகுதி உடன்பாடுகள் செய்து கொள்ளலாம். இல்லாவிட்டால் ஓட்டுகள் சிதறிக் காங்கிரஸுக்குச் சாதகமாகப் போய் விடும். காங்கிரஸை முறியடிக்க வேண்டுமென்றால் எல்லாக் கட்சிகளிடையேயும் ஓர் ஒற்றுமை உருவாக வேண்டியது மிக மிக அவசியம். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எல்லாக் கட்சிகளுக்கும் காங்கிரஸை முறியடிக்க வேண்டியது ஒரு புனிதமான பணி என்று நான் நினைக்கிறேன். இந்த அடிப்படையில் தான் ஜனதாதளமும் தேசிய முன்னணியும் மற்ற கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட முடியுமென்று நம்புகிறேன்.

கேள்வி: மன்னியுங்கள்... காங்கிரஸை முறியடிப்பது ஒன்றுதான் எதிர்க் கட்சிகளின் குறியே தவிர, மற்றபடி ஓர் ஒற்றுமை கூட இல்லை. இந் நிலையில் ஒருவருக்கொருவர் கூட்டுச் சேருவதே வெறும் சந்தர்ப்பவாத அரசியல்தானோ என்ற சந்தேகம் மக்களுக்கு வருகிறது.

பதில்: இல்லை; சந்தர்ப்பவாதம் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். கட்சிகளின் பெயர்களில் வேறுபாடு இருந்தாலும் அடிப்படைக் கொள்கைகளில் விரோதமில்லை. ஜனநாயகத்திலும் சமத்துவத்திலும் நம்பிக்கையில்லாத கட்சியே கிடையாது. பாரதீய ஜனதாவின் அடிப்படைத் தத்துவங்கள் கூட, காந்தீய சோஷலிஸத்தைச் சார்ந்தவைதாம். அடிக்கடி எழுப்பப்படும் கேள்வி, ஆர். எஸ். எஸுடன் பாரதீய ஜனதா கொண்டுள்ள உறவு பற்றியதுதான். வேறு எதுவும் இல்லை.

கேள்வி: பம்பாயில் நீங்கள் சிவசேனாவைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்...

பதில்: ஆமாம். சிவசேனாவின் கொள்கை முற்றிலும் எங்கள் கொள்கைக்கு மாறானது. அதனால் அது எங்களுடன் சேர முடியாது.

கேள்வி: ஜனங்களின் ஏமாற்றத்துக்குக் காரணம் ஒன்று உண்டு. அதாவது நல்ல அரசியல் நெறிமுறைகளை வளர்ப்பதற்கும் தேசப் பணிகளுக்குமான கடமை தங்களுக்கிருப்பதாக அரசியல்வாதிகள் உணர்ந்து செயல்படுவதாகத் தெரியவில்லை.

பதில்: அது எனக்கும் வருத்தமாகவே இருக்கிறது. சுதந்திரத்துக்கு முன்பும் அதன் பிறகு கொஞ்ச காலம் வரையிலும் இருந்த கொள்கைப் பற்றும், கடமையுணர்வும் இன்றைய தலைமுறையினரிடம் இல்லை. இன்றைய காங்கிரஸில் எத்தனை பேருக்கு அப்படிப்பட்ட மனோபாவம் இருக்கிறது! அதற்காக எதிர்க் கட்சிகளில் உள்ள எல்லாரும் உத்தமர்கள் என்று நான் சொல்லவில்லை. அரசியல் என்பது கொள்கைகளுக்கும் நடைமுறையிலுள்ள யதார்த்த நிலைக்கும் இடையிலானதொரு சமரச நிலைதான். ஓரளவு விட்டுக் கொடுத்துத் தான் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் அரசியலில் செயல்படுவது கடினம். அந்த நிலையிலும் அடிப்படைக் கொள்கைகள் அடிபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியம்.

கேள்வி: தேர்தலுக்கு இன்னும் ஒன்பது மாதங்களே இருக்கின்றன என்னும் நிலையில் எதிர்க் கட்சியினர் அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்பட முடியும் என்று நம்புகிறீர்களா?

பதில்: நிச்சயமாக அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. செயல்பட்டாக வேண்டும். அது காலத்தின் கட்டாயம்.

கேள்வி: முதலில் உங்கள் உட்பூசல்களைத் தீர்த்துக் கொண்டு, ஒற்றுமையான கட்சியாக தோற்றம் கொடுத்தால்தானே மக்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை பிறக்கும்!

பதில்: நிஜமான வார்த்தை. அதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம். மக்கள் இருமுறை எதிர்க் கட்சிகளால் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். மறுபடியும் ஏமாற விரும்ப மாட்டார்கள். தேசிய முன்னணியில் பிரதானமாக இருக்கும் ஜனதா தளம், மக்களை மறுபடியும் ஏமாற்றத்திற்கு ஆளாக்குமானால் அது மன்னிக்க முடியாத குற்றமாக இருக்கும்; நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் பெரிய நாசம் விளைத்ததாக

YOU CAN WIPE-OFF THIS CHILD'S TEARS.

This child knows the pain of hunger, the cold of loneliness and the fear of being unwanted. This child can have all the love and care it needs to feel wanted at UDAVUM KARANGAL.

UDAVUM KARANGAL is a secular organisation aligned to neither sect nor creed or receiving aid from the Government or Abroad. We depend on the general Public– AND THAT MEANS YOU. Remember no donation is too small – It's the love that goes with it that matters. Our children need Food, Medicine, Clothing and Education.

You can help us in more ways than one. Write to us and tell us about yourself. We need volunteers too.

DONATONS ARE EXEMPTED UNDER SEC 80 (G) OF THE INÇOME-TAX ACT.



UDAVUM KARANGAL (REGD)

(CENTRE FOR HUMAN SERVICES)

460, NSK NAGAR
MADRAS - 600 106
PHONE : 426141.

SPACE DONATED BY JAYABHARATHAM GROUP OF COMPANIES, ROYAPETTAH MADRAS - 14.

ALKA'S


உங்கள் நம்பகமான ∴பாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம்
ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க
∴பாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4
தேக்கரண்டி வெதுவெதுப்பான நீரில் ஒரு
தேக்கரண்டி ∴பாரெக்ஸ் கலந்து
கொடுங்கள். ∴பாரெக்ஸ் சுவை மிக்கது,
பாலாடை மிக்கது, முன்னைவிட
ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex
CEREAL WITH MILK
• பாலாடை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
∴பாரெக்ஸ்®-
சுவையுடன் வளரும் வழி.

GX/63/213 TML

ஆகும். இதைப் பற்றிய பிரக்ஞை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியம்.

கேள்வி: இப்போதே தலைவர் யாரென்று எல்லாரும் ஒத்துப் போகவில்லையானால் தேர்தலில் வெற்றி பெறும் போது அதுவே பெரிய உட்பூசலுக்கு வழிவகுத்து விடுமே?

பதில்: தலைவரைப் பற்றி இப்பொழுதே பேசுவது சரியில்லை என்றாலும், மக்கள் ஏற்கெனவே வி. பி. சிங்தான் தலைவர் என்று தேர்ந்தெடுத்து விட்டதாக நான் நினைக்கிறேன். அலகாபாத் இடைத்-தேர்தலிலேயே அது தெரிந்து விட்டது. அவர் எங்கு சென்றாலும் திரளாகக் கூட்டம் வருகிறது. ராஜீவ் காந்திக்கு மாற்றாக வி. பி. சிங்தான் வர முடியும் என்ற எண்ணம் மக்களிடையே வந்து விட்டது. ஜனதா தளத்தின் மற்ற தலைவர்களும், மாநிலக் கட்சிகளின் தலைவர்களும் இதை உணர்ந்து, எல்லாருமாகச் சேர்ந்து அவர் நிலையை பலப்படுத்த வேண்டும். சின்னச் சின்ன உட்பூசல்களினால் அவருடைய கவனமும் நேரமும் கலையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் இன்றைய முக்கியமான பணியாகவும் கடமையாகவும் கருதுகிறேன்.

கேள்வி: ஒரு பொதுவான தேர்தல் அறிக்கையைத் தயாரித்து ஒரு பொதுவான சின்னத்தில் அனைவரும் போட்டியிடச் செய்ய தேசிய முன்னணியால் முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: நிச்சயமாக. தேசிய முன்னணி பொதுவான தேர்தல் அறிக்கையை ஏற்கெனவே வெளியிட்டு விட்டது. சின்னத்தைப் பற்றி யோசனை நடக்கிறது.

கேள்வி: சுப்பிரமணியம் சுவாமி உங்களைப் பற்றி வெளியிடும் குற்றச்சாட்டுகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: அவர் மேல் நான் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருப்பதால் இதைப் பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. பொதுவாகச் சொன்னால் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைத் தொடுப்பது சிலரது பழக்கம்.

கேள்வி: அதற்கு என்ன காரணம்?

பதில்: எனக்கு நிச்சயமாகத் தெரியாது. எனக்கும் புரியவில்லை. கோவிலில் சிற்பங்கள் இருக்கும். அவற்றை பங்கப்படுத்துவதில் சிலருக்குத் திருப்தி. அந்தச் சிற்பத்தைச் செதுக்க சிற்பி எத்தனை காலமும் சிரத்தையும் செலவழித்திருப்பான் என்று அவர்களுக்குத் தெரியாது. நம் நாட்டில் இது போன்ற பங்கங்கள் நடந்து கொண்டேயிருக்கும். அதற்குத் தர்க்க ரீதியான விளக்கம் கிடையாது. நான் முதல்வர் பதவியை ஏன் ராஜினாமா செய்தேன்? டெலிஃபோன் உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன என்பதற்காக நான் ராஜினாமா செய்தேன். செய்ய வேண்டிய கட்டாயம்



ஆதாரமில்லாத அவதூறுகள் எனக்கு சங்கடத்தையும், துக்கத்தையும் தருகின்றன.

ஏதும் இருக்கவில்லை. சட்ட விரோதமான காரியம் ஏதும் நடந்து விடவில்லை. ஆனால் கொள்கை ரீதியாக அதில் எனக்கு உடன்பாடு இல்லை. கொள்கை காரணமாகவே ராஜினாமாச் செய்தேன். பதவி மோகம் கொண்டவனாக இருந்திருந்தால் செய்திருக்க மாட்டேன். இந்த மாதிரி வேறு மாநில முதல்வர்கள் யாராவது தங்களுடைய தார்மீகப் பொறுப்பை ஏற்று யாரோ செய்த தவறுக்காக ராஜினாமாச் செய்திருக்கிறார்களா?

நான் ஆட்சியில் இருந்த போது பங்காரப்பா மிகக் கடுமையான புகார் ஒன்றை என் தம்பி மீது சுமத்தினார்... கோவாவுக்கு அரிசி கடத்தல் செய்கிறார் என்றும் மாநில அரசுக்கு அதனால் ஒன்பது கோடி நஷ்டம் என்றும் சொன்னார். நான் அப்பொழுது பெங்களூரில் கூட இருக்கவில்லை. இருப்பினும் சேதி கேட்டவுடனேயே சட்டசபை சபாநாயகருக்கு எழுதினேன். 'இரண்டு சபை விசாரணைக் கமிட்டிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; விசாரணைக் கமிட்டியில் எனது கட்சி ஆட்கள் இருக்கக் கூடாது; எதிர்க் கட்சிக்காரர்கள்தாம் இருக்க வேண்டும்' என்றேன். புகார்களுக்கு ஆதாரமேயில்லையென்றும், புகாருக்கு அரசியல் தூண்டுதல்கள்தாம் காரணம் என்றும் விசாரணைக் கமிட்டி தீர்ப்

பளித்தது.

பிறகு என் மகனைப் பற்றி ஒரு குற்றச்சாட்டு. மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி, இரண்டு லட்சம் வாங்கிக் கொண்டதாக! உடனே நான் விசாரணைக்கு ஏற்பாடு செய்தேன். எனக்கிருப்பது ஒரே மகன். இதனால் அவன் எத்தனை மனக் கஷ்டத்துக்கு ஆளாகியிருக்கிறான் என்று சொல்ல முடியாது. வழக்கு இன்னும் நடக்கிறது. அவன் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்படும் வரை அவனை எல்லாரும் சந்தேகக் கண்ணோடுதானே பார்ப்பார்கள்!

இதைப் போல் எத்தனையோ புகார்கள்! வேண்டுமென்றே அரசியல் காரணங்களால் தூண்டப்பட்டுச் செய்யப்பட்டவை. என்னைக் கவிழ்க்க வேண்டும் என்கிற ஒரே காரணத்தால் செய்யப்பட்டவை.

கேள்வி: இந்தப் புகார்களின் பின்னால் இ. காங்கிரஸின் தூண்டுதல் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: எனக்கு அதைப் பற்றி சந்தேகமே இல்லை. மாநில நிலையிலும் சரி, தேசிய நிலையிலும் சரி, நான் ராஜீவ் காந்திக்கு மிகப் பெரிய ஆபத்து (threat) என்று இ. காங்கிரஸ் நினைக்கிறது. இந்த பயம் எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. அரசு நிர்வாகத்தில் நியாயத்தையும், தர்மத்தையும், கண்ணியத்தையும் கடைப்பிடிப்பது பாவமான காரியமா? நான் சற்று கர்வமாகவே என் ஆட்சிக் காலத்தைப் பற்றிச் சொல்லிக் கொள்ளலாம். திட்டக் கமிஷனின் கணிப்புப்படி கர்நாடகா மாநிலம் எல்லாத் துறைகளின் முன்னேற்றத்திலும் முதல் இடம் வகித்தது. இதை நிறையப் பேரால் ஜீரணிக்க முடியாது! அதனால்தான் என் பெயரை எப்படியாவது களங்கப்படுத்த வேண்டும் என்று பார்க்கிறார்கள்.

கேள்வி: இந்தப் பிரசாரமெல்லாம் வருகிற தேர்தலில் உங்களுடைய இமேஜை பாதிக்கும் என்கிற கவலை உங்களுக்கு இருக்கிறதா?

பதில்: இல்லை. மக்களுக்கு என்னைத் தெரியும். என்னுடைய சரித்திரம் தெரியும். அவ்வளவு எளிதாக அவதூறுகளை நம்பி விட மாட்டார்கள். ஆனால் கொஞ்சங்கூட ஆதாரமில்லாத இந்த அவதூறுகள் எனக்கு சங்கடத்தையும் துக்கத்தையும் கொடுக்கின்றன.

கேள்வி: நீங்கள் மாநில அரசியலிலிருந்து இப்போது தேசிய அரசியலுக்கு வந்திருப்பது எப்படியிருக்கிறது? திருப்தியாக இருக்கிறதா?

பதில்: திருப்தி என்கிற கேள்விக்கே இடமில்லை. நான் கடமையைச் செய்கிறேன் என்பதுதான் முக்கியம். தேசிய அரசியலுக்கு நான் புதியவனும் இல்லையே! ஜனதா கட்சியின் செயலாளராக ஆறு வருஷங்கள் பணியாற்றியிருக்கிறேனே!

கேள்வி: கர்நாடகாவில் இப்பொழுது உங்கள் செல்வாக்குக் குறைந்து விட்டது என்கிற உணர்வினால்தான் தேசிய அரசியலுக்கு வந்திருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள்...

பதில் (பெரிதாகச் சிரித்து): செல்வாக்குக் குறைந்து விட்டதா? அங்கு போய் விசாரியுங்கள். என்னுடைய செல்வாக்கில் ஓர் அணுவும் அங்கு குறையவில்லை என்பது புரியும். என் மேலிருக்கும் புகார்கள் எல்லாம் ஆதாரமற்றவை என்பது மக்களுக்குத் தெரியும். நெருப்பில்லாமல் புகையாது என்று ஒரு சிலர் நினைக்கக்கூடுமே என்பதற்காகத்தான் என் நிலையைத் தெளிவுபடுத்த நான் சுவாமியின் மேல் வழக்குப் போட்டிருக்கிறேன். இப்பொழுது என் சிந்தனையெல்லாம் கட்சியையும் தேசிய முன்னணியையும் பலப்படுத்துவது தான். அது எனது புனிதமான பணி என்று கருதுகிறேன்.

பேட்டி: **வாஸந்தி**

அட்டையில்:
ஹெக்டே, அஜீத்சிங், வி. பி. சிங், தேவிலால்.

அட்டை வண்ணப்படங்கள்:
யோகா, சுபா

படங்கள்: **வி. எஸ். ராமநாதன்**



அடுத்த இதழில்

* டி. ராஜேந்தர் பரபரப்பான பேட்டி

* ***மீன் பண்ணையில் பணம் பண்ணலாம்!***
— கவர் ஸ்டோரி




இறவா வரம் பெற்றவர்!


இன்றையக் குழந்தைகள் நாளை இந்நாட்டின் சிறந்த குடிமக்களாக விளங்க வேண்டும் என்று விரும்பி, அதற்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கற்பூரமாக மணம் வீசிக் கரைந்து போனவர் அழ. வள்ளியப்பா.


ஒழுக்கசீலர், தம்மை வந்து அடைந்த விருதுகளுக்கும் பட்டங்களுக்கும் பெருமை சேர்த்தவர், சலியா உழைப்பாளி, பண்பாளர். அவரே குழந்தை உள்ளத்தைப் பெற்றிருந்ததால்தான் அவரது குழந்தை இலக்கியங்கள் இறவா வரம் பெற்று, இல்லங்களில் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பெற்றும், படிக்கப் பெற்றும் வருகின்றன.

அவரது பிரிவால் குழந்தைக் குலம் வாடுகிறது; அன்பரை இழந்து நண்பர்கள் வருந்துகின்றனர்; குடும்பத்தினர் கண் கலங்குகின்றனர்; கல்கி நிறுவனத்தினர், கோகுலத்தின் கௌரவ ஆசிரியரை — வணக்கத்துக்குரிய ஒரு பெரியவரை — இழந்து துக்கத்தில் ஆழ்ந்து போயிருக்கின்றனர்.

காலம்தான் ஆறுதல் அளிக்க முடியும். குழந்தைக் கவிஞரின் சிமிட்டும் கண்களும், சிரித்த முகமும் எடுத்துக்காட்டான வாழ்க்கையும் என்றும் நமது நினைவில் நிலைத்து, உள்ளங்களைப் பண்படுத்தி, வழி நடத்திச் செல்லட்டும்!


வி.பி.சிங்
நாடாளு மன்ற ஜனநாயகம்
மத்திய அரசு
தாக்கர் கமிஷன் அறிக்கை விவகாரம்


எஸ்.என். சின்ஹா
பீகார் அமைச்சரவை
அதிருப்தியாளர்கள்


காளை பிடிக்கப் போய் வாலைப் புடிக்கறது வழக்கமாப் போச்சு
ரெட்டை இலை பாரு.. பா.. பா..
சென்னை, கோவை, மதுரை மாநகராட்சித் தேர்தல்கள்



கல்கி

1989 மார்ச் 26
மலர் 47 இதழ் 34
விபவ பங்குனி 13



தக்கர் அறிக்கையும், தர்மசங்கடத்தில் பிரதமரும்

தக்கர் கமிஷன் அறிக்கை இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் வெளியானதும் அது தொடர்பாக நாடாளுமன்றம் அமளி துமளிப்படுவதும் ஒரு முக்கியமான அம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அதாவது ஜனநாயகத்தில் மக்களிடமிருந்து எதையும் மறைக்கக் கூடாது என்பதுதான். பாதுகாப்பு முயற்சிகள் ரகசியமாகக் காக்கப்படலாம் என்பதாக முன்பு கருதப்பட்டது. இப்போதோ ஒற்றாடல் செய்து விண்வெளியில் சுற்றிவரும் செயற்கைக் கோள்கள் புகைப்படங்கள் எடுத்து விடுவதால் அந்த எண்ணமும் அர்த்தமற்றதாகிவிட்டது. இந்திய ராணுவத்தின் — முப்படைகளின் பலம் இந்திய மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அமெரிக்கருக்குத் தெரியும்; ருஷ்யருக்குத் தெரியும்! அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் தனக்குத் தேவையான விவரங்களைப் பெறுவதும் சிரமமில்லை! எனவே, ஒளிவு மறைவு அற்ற வெளிப்படையான அரசுதான் நல்ல ஜனநாயக ஆட்சியை மக்களுக்கு அளிக்க முடியும். ரகசியங்கள் அற்ற அரசுதான் யோக்கியமாக நடந்து, மக்களிடம் நற்பெயர் எடுக்கும்.

முன்பு பால் கமிஷன் அறிக்கையை எம். ஜி. ஆர். அரசு மறைக்க முயன்றதும், அது அம்பலமானதும், அதனால் ஏற்பட்ட பரபரப்பும் அனைவருக்கும் தெரியும். எதையாவது ஒளிக்க முயலும் போது இந்த அரசுக்கு வேண்டப்படாத ஒருவன் தருணம் பார்த்திருந்து அதனை 'லீக்' செய்து அரசுக்கு அவப்பெயரைத் தேடித் தருவான். யார் மூலம் விஷயம் வெளிவந்தது என்று ஆட்சியில் உள்ளவர்கள் மூளையைக் குழப்பிக் கொண்டு, சந்தேகிப்பவரையெல்லாம் பழிவாங்கிக் கொண்டிருப்பார்கள்.

தக்கர் கமிஷன் அறிக்கை வெளியானதில் இதைவிடவெல்லாம் பெரிய விபரீதம் ஒன்று உண்டு! நாட்டின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி கொலையுண்டது தொடர்பான நிகழ்ச்சிகளையெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து தமது முடிவுகளைத் தக்கர் அந்த அறிக்கையில் தந்திருக்கிறார். அதில் ஆர். கே. தவன் மிகவும் சந்தேகப்படக் கூடிய விதமாக நடந்து கொண்டிருப்பதாகத் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். இந்த விஷயங்களை மூடி மறைத்துவிட்ட பிரதமர், ஆர். கே. தவனைச் சில காலம் முன்பு ஏதோ காரணம் கூறி பதவி பறித்து வீட்டுக்கு அனுப்பி விட்டார். இப்போது மீண்டும் அவருக்குப் பதவி கொடுத்துக் கௌரவித்திருக்கிறார்! தவன் பதவி ஏற்றதும் இதுவரை ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த இந்த அறிக்கை அம்பலத்துக்கு வந்துவிட்டது! யார் இதனை 'லீக்' செய்தது, ஏன், என்பன பற்றிப் பலவித வதந்திகள் அடிபடுகின்றன; கற்பனைகள் கொடி கட்டிப் பறக்கின்றன. என்றாலும், தவனைப் பிடிக்காத ஒருவர் செய்துவிட்ட காரியம் இது என்று நம்பவே அதிக இடம் இருக்கிறது.

தமது தாயாரின் — நாட்டின் பிரதமராக இருந்தவரின் — கொலைக்கும் தவனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று ராஜீவ் மெய்யாலுமே நம்பியிருக்கலாம். ஆனால் அவரது நம்பிக்கையைவிட விசாரணை நடத்திய நீதிபதியின் முடிவுகள் முக்கியமானவை. அறிக்கையை ஏற்று, தவன் மீது தக்க நடவடிக்கை எடுக்க ராஜீவ் உத்தரவிட்டிருக்க வேண்டும். நீதி விசாரணைக்குப் பிறகு தவன் குற்றமற்றவராக நிரூபிக்கப்பட்டிருந்தால் அவருக்கு மீண்டும் பதவி தந்திருக்கலாம். எவ்வளவோ கௌரவமாக இருந்திருக்கும். ஆனால் பிரதமர் குட்டை குழப்பியதோடு, தக்கர் அறிக்கையைத் தமது அமைச்சரவையில் உள்ள இதர மந்திரிகளிடம் கூடக் காட்டவில்லை! மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்பு என்ற அம்சமே இதனால் அடிபட்டுப் போவதைப் பார்த்து நாம் அதிர்ச்சி அடைகிறோம்! அறிக்கையை வெளியிடாமலிருக்கப் புதிய சட்டம் இயற்றி, அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் வேண்டியிருந்தது. அந்தச் சட்டத்தை நிறைவேற்றி வைத்த அமைச்சருக்குக் கூட, எதற்காக இதைச் செய்கிறோம் என்பது தெரிந்திருக்கவில்லை! இதை அறிய நமது அதிர்ச்சி பன்மடங்காகிறது!

ஒரு மாபெரும் ஜனநாயகத்தின் பிரதமராக விளங்கி, மக்களை வழிநடத்திச் செல்லக் கூடிய மனமுதிர்ச்சியையோ அல்லது அறிவு முதிர்ச்சியையோ ராஜீவ் இன்னும் பெறவில்லை என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

மருங்காபுரித் தேர்தல் மர்மம்!

செம்பியன்

எல்லா நிருபர்களும் தேர்தல் நடப்பதற்கு முன் தொகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்வார்கள். ஆனால் எனக்கு மருங்காபுரிக்கும் மதுரை கிழக்குக்கும் தேர்தல் முடிந்த பிறகு போக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது! ஏனென்றால் அங்கே இடைத் தேர்தலில் தி. மு. க. தோற்றதற்கும் அ. தி. மு. க. ஜெயித்ததற்கும் பலரும் பலவிதக் காரணங்களைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? எது உண்மைக் காரணம் என்று தெரிந்து கொள்ளா விட்டால் எனக்கு மண்டை வெடித்து விடும் போலாகி விட்டது! அதனால் கிளம்பி விட்டேன்.

மதுரையில் மீனாட்சி — சுந்தரேசுவரரை ஒரு வலம் வந்து விட்டு வேலையை ஆரம்பித்தேன்.

''உங்க பேரு என்ன? யாருக்கு வோட்டுப் போட்டீங்க?''

''வேலம்மா: இரட்டை இலைக்குத் தான்.''

''சங்கரய்யான்னு இங்கே ஒருத்தர் வோட்டு கேட்டு நின்னாரே தெரியுமா?''

''ஏன் தெரியாம? அவர் கம்யூனிஸ்ட் கட்சி ஆச்சுங்களே, தி. மு. க. அவரைத் தானே ஆதரிச்சுது.''

''தி. மு. க. அவரை ஆதரிச்சாலும் ஆட்சியில நடக்கிற தவறுகளை எடுத்துக் காட்டி நல்ல எதிர்க் கட்சிப் பணி ஆற்றுவார் என்று தி. மு. க. காரங்களே சொன்னாங்களே அதுலே குழப்பம் அடைஞ்சுட்டீங்களா?''

''முதல்ல கொஞ்சம் குழப்பமாகத்தானுங்க இருந்துச்சு. ஆனாலும் யோசிச்சாப் புரிஞ்சு போச்சுங்க. தி. மு. க. இப்ப ஆட்சி அமைச்சாச்சு. இனிமே அவங்களுக்குச் சங்கரய்யா ஆதரவு தேவையில்லே. ஆனா ஆட்சியில இருக்கிறவங்க செய்யற தப்பை எடுத்துக் காட்டித் திருத்த எதிர்க்கட்சி அவசியம். அந்த வேலையைச் சங்கரய்யா செய்வாருன்னாங்க. இப்ப இரட்டை இலை சின்னத்திலே ஜெயிச்சிருக்கிற ராதாவும் அதைத்தானுங்களே செய்யப் போறார்?''

''அது சரி, ஆனா ராதாவை விட சங்கரய்யா நல்லபடியாச் செயல்படுவார்னு சொல்லியிருப்பாங்களே....''

''ஆமாங்க... வயசானவரு; அனுபவம் உள்ளவரு; நல்லவரு; புத்திசாலி என்கிறதாலேதான் அப்படி சொன்னாங்க... அதுல என்னங்க தப்பு?''

''அப்ப ஏன் சங்கரய்யா ஜெயிக்கலே?''

''அதுதாங்க எனக்கும் புரியலே...'' என்ற வேலம்மா முகவாயைக் கையில் பிடித்துக் கொண்டு, ''என்னை இப்படி ஒரு குழப்பத்திலே ஆழ்த்தறதுக்காகவா பட்டணத்துலேருந்து இவ்வளவு தூரம் வந்தீங்க?'' என்று கேட்டுத் தன் தோளால் கன்னத்தை ஒரு இடி இடித்தாள்.



அதற்கு மேல் அங்கு நின்றால் சிண்டைப் பிய்த்துக் கொள்ள நேரலாம் என்பதால் நேரே மருங்காபுரிக்குச் சென்றேன். இங்கேயாவது தெளிவு பிறக்காதா என்ற ஆசையுடன் பஸ்ஸை விட்டு இறங்கினேன். ஒரு டீ கடையில் போய் உட்கார்ந்து, அங்கே சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தவர்களுடன் நானும் கலந்து கொண்டேன்.

''பத்திரிகைக் காரருங்களா?''

''ஆமாம்'' என்று பதிலளித்து, ஆளுக்கொரு டீ போடச் சொன்னேன். அவர்கள் எல்லோருமே இரட்டை இலைக்குத்தான் வோட்டுப் போட்டிருப்பதாகத் தெரிய வந்தது.

''அ. தி. மு. க. இணைஞ்சுட்டதாலும் இரட்டை இலை கிடைச்சுட்டதாலும்தான் அ. தி. மு. க. ஜெயித்து விட்டதா?'' என்று கேட்டேன்.

''அதெப்படிங்க? இது காலம் கடந்த ஞானோதயம் இல்லையா? இதுக்காக நாங்க அந்தக் கட்சித் தலைவருங்களுக்கு தண்டனைல்ல கொடுக்கணும்...! இவங்க முதல்லயே ஒழுங்கா நடந்துக்கிட்டிருந்தா விஷயமே வேற. எம். ஜி. ஆர். அனுதாப அலை முழுசுமா செயல்பட்டிருக்கும். இப்ப கருணாநிதி உட்கார்ந்திருக்கிற இடத்துலே எங்க தலைவி உட்கார்ந்திருப்பாங்க... போச்சே...! எல்லாம் போச்சே...! அதனால எங்களுக்கு ரெண்டு தலைவிங்க பேரிலும் கோபம்தான்.''

''அப்படீன்னா எம். ஜி. ஆர். மேல கருணாநிதி களங்கம் கற்பிச்சாருங்கறதாலேதான் நீங்க உதய சூரியனுக்கு வோட்டுப் போடலை இல்லியா?''



அதொண்ணும் இல்லீங்க; எம்.ஜி.ஆர். நல்லவரா இருந்திருக்கலாம். ஆனா அவர் ஆட்சியிலே ஊழல் நடந்திருந்தா அதைச் சொல்றதிலே என்னங்க தப்பு? அட, எம்.ஜி.ஆரே ஏமாந்துட்டாரு. இல்லே, தப்புப் பண்ணிட்டாருன்னாலும் அது உண்மைன்னா அது வெளியே வந்துதா னுங்களே ஆகணும்?''

''ஜெயலலிதா தொகுதிப் பக்கமே வரலை...''

''உடம்பு சொகமில்லேன்னு சொல்லிக் கிட்டாங்க...''

''முன்னே எம்.ஜி.ஆர். இப்படித்தான் ஆஸ்பத்திரியிலே இருந்தபடியே ஜெயிச் சார்...

''இந்தம்மாவும் அவரும் ஒண்ணாகிட முடியுமா? அவர் விஷயமே வேற... ஜெய லலிதாவுக்கு உடம்பு சுகமில்லாததாலே பரிதாபப்பட்டு வோட்டு விழுந்ததாச் சொல்ல முடியாது...''

''கருணாநிதி நேரிலே வந்தார். தெருத் தெருவா போனார். மணமகளுக்கு அலங் காரம் பண்ணியாச்சு; திலகம் வைக்கணும் னார்....''

''வைச்சிருக்கலாமுங்க; அவரை நினைச்சா பாவமா இருக்கு; மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு...

''பிறகு ஏன் வோட்டு விழலை? ஒரு வேளை, ஏகப்பட்ட 'ரிக்கு'கள் வந்து அடி பம்புகள் போட்டதும், நல்ல அரிசி விநி யோகமானதும், மந்திரிகள் டேரா போட் டதும் தப்புன்னு நினைச்சீங்களா? தேர்த லுக்கு முன்னாடி ஆளும் கட்சி இப்படி மக்கள் வரிப்பணத்தைச் செலவு செய்யறது தர்மமில்லேன்னு முடிவு செஞ்சீங்களா?''

''தர்மமில்லேங்கிறது உண்மைதானுங்க. ஆனா அதைத் தானே எல்லா ஆளும் கட்சி களும் எல்லா தேர்தல்களின் போதும் செய்துக்கிட்டிருக்காங்க? எங்களுக்கு நல் லதுதானே நடந்திருக்கு? அதனாலே நாங்க கோபப்பட்டதாகச் சொல்ல முடியா துங்க...''

'''இந்த இடைத் தேர்தல்கள் பொதுத் தேர்தலோடு சேர்ந்து நடந்திருந்தாலும் இதே முடிவுதான் கிடைத்திருக்கும்'னு கருணாநிதி சொன்னாரே அதுதான்



நிஜமா?''

அதெப்படிங்க சொல்ல முடியும்? இவரு ஆட்சிக்கு வந்து வெற்றி விழாக் கொண்டாடி, ஏகப் பரபரப்பு ஏற்பட் டிருக்கு... ஆனானப்பட்ட பிரதமருக்கே தண்ணி காட்டியிருக்காரு... கருணாநிதி இமேஜு ஏகமாக உசந்திருக்கு... அந்தச் சூட்டோட இங்க வந்து பேசியிருக்காரு... ஆக மொத்தம் முன்னே பொதுத் தேர்தல்ல அவருக்கு வெற்றி வாய்ப்பு இல்லைன்னா லும் இப்ப இருந்திருக்கணுமில்லையா?''

இதற்கு மேல் அவர்களுடன் பேசி னால் அங்கேயே சட்டையைக் கிழித்துக் கொண்டு தெருவில் புரள ஆரம்பித்து விடு வோம் என்று பயம் தோன்றவே தோல் வியை ஒப்புக் கொண்டு பஸ் நிலையத்தை நோக்கி நடந்தேன்.

''என்ன தம்பி, ரொம்ப வருத்தமா இருக் கிங்க, போல...'' என்று ஒரு குரல் கேட் டது. திரும்பிப் பார்த்தேன். ஓர் ஆட்டின் கழுத்தில் கயிறு கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார் ஒரு கிழவர்.

''ஆமாம் தாத்தா! இந்த இடைத் தேர்தல் முடிவுகள் இப்படி அமைந்ததற்கு நிஜமான காரணம் என்ன என்று தெரிந்து கொள்ள வந்தேன். புரியலை. குழப்பம்தான் அதிக மாயிருக்சு. அதனாலதான் வருத்தமாயிருக் கேன்'' என்றேன்.

''இவ்வளவுதானே தம்பி! நான் சொல் றேன் காரணம், எழுதிக்கிடுங்க'' என்றார் பெரியவர். நான் பென்சிலையும், நோட்டை யும் எடுத்துக் கொண்டேன்.

பெரியவர் சொன்னார்: ''தம்பி! ஜனங்க வோட்டுப் போட்டாங்களா? அதிகாரிங்க ஸீல் உடைச்சு பெட்டிகளைத் திறந்து வோட்டுக்களை எண்ணினாங்களா...

''ஆமா.... ஆமா....! மேலே சொல் லுங்க'' என்றேன், பரபரப்புடன். ''இல்லு முல்லுவா?''

''அதொண்ணும் இல்லே, தம்பி! வோட் டுக்களை எண்ணிப் பார்க்கையில இரட்டை இலைக்கு அதிக வோட்டுக்கள் விழுந்திருந்தது; அதனால அ. இ. மு. க. ஜெயிச்சுருச்சு! மத்த கட்சிக்காரங்க தோத் துட்டாங்க! இதுதான் இந்த இடைத் தேர்தல் கள் இப்படி முடிஞ்சதுக்குக் காரணம்'' என்றார் பெரியவர்.

''தாத்தா! என்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகாமல் காத்த புண் ணியவானே! நீ வாழ்க!'' என்று கூறி, அவர் கரங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டு விடைபெற்று பஸ் ஏறினேன்.

கல்லூரியின் தமிழ் மன்ற ஆரம்ப விழாவுக்குப் பிரபலமான ஒருவரை அழைப்பது என்று முடிவாயிற்று. யார் என்பது கேள்வி. தங்களுக்குத் தெரிந்த பிரபலங்களை எல்லோரும் கத்தினார்கள். மன்றத்தின் செயலாளர் தாரிணி நிதானமாய் யோசித்தாள். யாரைக் கூப்பிட? சட்டென்று ஸ்ரீதரன் ஞாபகம் வந்தது. அவன் எழுத்துக்கு ரசிகையாய் அறிமுகமாகி இன்று ஆரோக்கியமான சிநேகிதியாகி விட்ட நெருக்கம்.

"ஸ்ரீதரனைக் கூப்பிடலாமா?"

"எந்த ஸ்ரீதரன்?"

"எழுதுவாரே...."

ஒரு கூட்டம் ஆவேசமாய் எழுந்தது. "அவன்லாம் வேணாம். எழுத்தாளனே வேணாம். யாராச்சும் விளையாட்டு வீரரைக் கூப்பிடலாம்."

"ஏன் எழுத்தாளர்கள் வேணாம்?"

"அத்தனை பேருக்கும் சுயநலம். இங்கே வந்தால் ஏதாச்சும் கதை கிடைக்குமான்னு அலைவாங்களே தவிர, உருப்படியா எதுவும் நடக்காது."

தாரிணிக்குச் சுருக்கென்று நெஞ்சுக்குள் குத்திற்று. ஸ்ரீதரனிடம் சுயநலமா? கதைக்காக அலைகிற சுயநலமா? தெரியவில்லை. அவன் கதைகள் நிஜக்கதைகள் தாம்; 'எனக்குச் சரடு விடத் தெரியாது தாரிணி' என்றிருக்கிறான். ஒருவேளை..... யார் கதையையாவது எழுதிப் பணம் சம்பாதித்து, மனைவிக்கு நகை வாங்குகிற சுயநலமா? இருக்காது. கனகா கழுத்தில் தாலி தவிர வேறு நகை கிடையாது. பின் என்ன சுயநலம்?

தலைவர் நிரம்ப நேரம் யோசித்தார்.

"செகரட்டரியின் முடிவுதான் இறுதியானது..." என்றார்.

முடிவு சொன்னதும் முனகல்களோடு சம்மதித்தார்கள் மற்றவர்கள். "கிழிச்சான்.... பாரேன், என்ன ஆகுதுன்னு. வந்து நல்லா காப்பி, டிஃபன் சாப்பிட்டுட்டுப் போவான். அடுத்த நாளே நாலு பக்கத்துக்கு இத வச்சுக் கதை எழுதித் துட்டு வாங்கிடுவான்....."

தாரிணி எது பற்றியும் கவலைப்படாமல் ஸ்ரீதரன் வீடு போய்ச் சொன்னாள். முகம் விரிய சந்தோஷப்பட்டான்.

"கட்டாயம் வர்றேன் தாரிணி. பொருள் என்ன?"

"உங்க இஷ்டம்."

"என் இஷ்டம்னா ஆச்சா? உங்க கூட்டம் எப்படி? அதைச் சொல்லு. அந்த மெண்டாலிடிக்கு ஏத்தாற் போல பேசறேன்."

சட்டென்று நெஞ்சுக்குள் ஏதோ பொங்கச் சொன்னாள். கண் விரியக் கேட்டான். எழுதுவது சுயநலம் என்று சொல்லப்பட்டதைச் சொன்னதும் "கடவுளே..." என்று கண் மூடிக் கொண்டான்.

"இது பத்தியே பேசட்டுமா தாரிணி?"

"ம்.... ஆனா...." நிஜமாவே எழுதுவது சுயநலமா ஸ்ரீதர்?"

"அதான் பேசறதைக் கேக்கப் போறியே.



வெயிட் அண்ட் ஸீ....."

தாரிணி சந்தோஷமாய் டீக்கு ஆர்டர் கொடுத்தாள். பேக்கரிக்குப் போய் ஆள் கணக்குப் பார்த்து, எழுபது பேருக்குப் பாதுஷா, பப்ஸ் அனுப்பச் சொன்னாள்.

விழாவுக்கு நாலு நாட்கள் முன்னால் தலைவர் கூப்பிட்டார். "நெறையப் பேருக்கு ஸ்ரீதரனைக் கூப்பிட்டதுல இஷ்டமில்ல தாரிணி."

"அடுத்த ப்ரோக்ராமுக்கு அவங்களுக்கு இஷ்டமானவர்களைக் கூப்பிடுவோம் ஸார். இப்ப எல்லாத்தையும் அரேஞ்ச் பண்ணிட்டேன்."

"அது வந்தும்மா...."

"ஸ்ரீதரனைக் கூப்பிட்டுட்டேன் ஸார். இனிமே வேணாம்னா நமக்கும் சேர்த்துத் தான் அவமானம்."

"எதிர்ப்புத்தெரிவிக்கிறபசங்கல்லசெல்வ கணேஷ் நம்பர் ஒன்னாம்... பசையுள்ள திமிர்ல அடாவடித்தனம் பண்றவன்... அதான்..."

தாரிணி எழுந்தாள் நெஞ்சுக்கு நேராய்க் கை உயர்த்தினாள்.

"எம் மேல நம்பிக்கையிருக்கா ஸார்? அப்படின்னாச் சரி சொல்லுங்க."

தலைவர் "சரி" என்றார்.

நாலு மணிக்குக் கூட்டம் மெதுமெதுவாகச் சேர்ந்தது. மைக் செட் நாலரைக்கு வந்தது. கூட்டம் அதிருப்தி சுமந்த முகத்தோடு காத்திருந்தது.

"செல்வகணேஷ்.... யாராச்சும் கிரிக்கெட் ஆட்டக்காரரைக் கூப்பிட்டிருக்கலாம்டா. இவன் யாரு?"

"எவனோ எழுதிக் கிழிச்சவனாம். தாரிணியின் சிநேகிதர்...!"

அடுத்தவன் கண்ணடித்து அசிங்கமான ஆபாசத்தோடு சிரித்தான். "சிநேகிதர்ன்னா...?"

செல்வகணேஷ் பெரிதாய்ச் சிரிக்க, தாரிணியோடு கூடப் படிக்கிற காசி மனசலற நிமிர்ந்தான்.

"பார்த்துப் பேசுடா நாயே.... உருப்படியாப் பேசு. நாலு வார்த்தை பேசினா



னும்.....''

''நீ யார்டா பேச? நீயும் அவள் சிநேகிதனா?''

''ஃப்ரெண்டுன்னா உடனே உன்ன மாதிரி அற்பப்புத்திக்காரனுக்குத் தப்பார்த்தப் தாண்டா தோணும். உனக்கெல்லாம் ஏது கல்ச்சர்? ஸ்வீட், காரம், டீன்னவுடனே வாய்ப் பொளந்துகிட்டு வந்துட்டே....''

செல்வகணேஷ் அவன் சகாவோடு சேர்ந்து காசியைத் தாக்கினான். மேடையில் மேஜை தூக்கிப் போட்டுக் கொண்டிருந்த தாரிணிக்கு யாரோ பதற்றமாய்ச் செய்தி சொன்னார்கள்.

வெளியே வருவதற்குள் வெளிக்கூட்டம் இரண்டு அணிகளாகப் பிரிந்திருந்தது. கல் எறியப்பட்டுப் புழுதி கிளம்பிற்று.. அசிங்க வார்த்தைகள் வெகு இயல்பாய்ப் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

''பிரின்ஸ்பாலைக் கூப்பிடு.... சீக்கிரம்... சீக்கிரம்...''

யார் யாரோ எங்கேயோ ஓடினார்கள். தாரிணி வாசல் பக்கமாய்த் தவித்துப் போய் நின்றாள். நெஞ்சுக்குள் வியர்த்தது. இப்படி ஆகும் என்று நினைக்கவில்லை. கடவுளே... ஏன் இப்படி ஆயிற்று... ஏன்?

சரியாய் நாலு ஐம்பத்தைந்துக்கு ஸ்ரீதரன் ஸ்கூட்டரில் உள்ளே வந்தான். தாக்க வந்த கல்லுக்குத்தலைதாழ்த்திக்குனிந்துநின்றான்

ஸ்ரீதர்.....''

மன்னிப்பானா? கூப்பிட்டு விட்டு இதென்ன அசிங்கம் என்று கோபத்தில் நினைந்து வெறுத்துப் போவானா? ஏன்... இப்படி ஆயிற்று? பொசுக்கென்று கண்ணில் நீர் கட்டியது.

''திடீர்னு ஆயிடுச்சி ஸ்ரீதர்... நான்.... நா.. நினைக்கலை... ஸாரி... புரியுதா ஸ்ரீதர்?''

பிரின்ஸிபால் வந்ததும் கிடைத்த திசைகளில் கூட்டம் சிதறி ஓடியது. நிமிஷத்தில் நிசப்தம் பரவியது. காசியும் தாரிணியும் நண்பர்களும் ஸ்ரீதரனைச் சூழ்ந்தார்கள்.

''ஸாரி ஸார்...''

ஸ்ரீதரன் வெறுமனே சிரித்தான். ஒன்றுமே சொல்லாமல் ஸ்கூட்டரில் ஏறிக் கால் தரையில் தேய வட்டமடித்து வேகம் கூட்டி மறைந்து போனான்.

நிருபர்: உங்க படத்திலே பிச்சைக்காரன் வேடத்திலே நீங்க நடிக்கிறதுக்கான காரணம் என்ன...?

தயாரிப்பாளர்: எதுக்கும் முன் அனுபவமா இருக்கட்டுமேன்னுதான்...!''

— இம்ரான்கான்.



அடுத்த நாள் காலைலேயே முதல் பஸ் பிடித்து ஸ்ரீதரன் வீட்டுக்குப் போனாள். முன்னறையில் கனகா குழந்தையோடு உட்கார்ந்திருந்தாள்.

''வாங்க... எப்படியிருக்கீங்க...?''

''அவர் இருக்காரா?''

சப்தம் கேட்டு ஸ்ரீதரன் எட்டிப் பார்த்தான். யதார்த்தமாய்ச் சிரித்ததாகத் தோன்றியது. அவமானப்பட்டிருப்பானோ... கடவுளே! அன்றைக்கே வேறு ஆளைக் கூப்பிட்டிருக்கலாம்.

''கனகா... டீ கொண்டாயேன்.''

கனகா உள்ளே போனாள். என்ன பேச என்று குழப்பமாயிருந்தது. எதுவும் பேசினால் மனசுடைந்து போகுமோ என்கிற பயம். தாரிணி சுவரோரம் கிடந்த என்ஜின் ஒட்டின பொம்மை வீரனை வெறித்தாள்.

''காலைலேயே என்ன தாரிணி?''

''ரொம்பக் கஷ்டமாயிடுச்சு ஸ்ரீதர். ராத்திரி ஒரு பொட்டு தூக்கமில்லை.''

''பரவாயில்லை. இதுல உன்தப்பு என்ன தாரிணி!''

''என் தப்பு இல்லை தான். ஆனால் எதிராளிக்குத் தப்பாய்ப் பட்டிருக்குமோ என்கிற ஹிம்சை சாதாரணமில்லை ஸ்ரீதர்.''

''உன்னை வச்சு... நேற்றைய சம்பவம் வச்சு ஒரு கதை எழுதிட்டேன் தாரிணி.''

''சுயநலம். பக்கா சுயநலம் ஸ்ரீதர் இது.''

''யாருக்கு? எழுதினா நூறு ரூபாய் கெடைக்கும். நாலஞ்சு ரசிகர் கடிதங்கள் வரும். அதுக்கா தாரிணி எழுதுறது?''

''பின்னே எதுக்கு ஸ்ரீதர்? சுயநலமில்லைன்னு உங்களையே ஏமாத்திக்கறீங்க. நாலு இடம் நுழைஞ்சு க தை தேடிட்டு இல்லைங்கிறீங்க.''

''நேத்து நீ கண்கலங்க, என்ன செய்யறதுன்னு தடுமாறுனது அலைக்கழிச்சிடுச்சு தாரிணி. 'ஸ்ரீதர்....'னு என்னைப் பார்த்ததும் நீ மேல்மூச்சு வாங்கத் தவிச்சது என்னைத் தொத்திக்கிடுச்சு. வீடு வர்ற வரைக்கும் படபடனு தவிப்பு. ஈஸ்வரா... இ ந் த ப் பொண்ணுக்கு எத்தனை ஹிம்சைனு வேதனை. எழுதாம இது தீராது தாரிணி.''

ஸ்ரீதரன் நன்றாகச் சாய்ந்து கொண்டான். ஏன் நேற்றைய தவிப்பு இவனிடம் தெரிகிற மாதிரி பட்டது.

''இது நெஜமா சுயநலம் இல்லைங்கறீங்களா ஸ்ரீதர்?''

''சுயநலம்னா எதுன்னு புரியலை தாரிணி. நாளைக்கு இது பத்திரிகைக்கு அனுப்பிப் பிரசுமானா வாசிக்கிற ஒவ்வொரு மனசும் தவிக்கும். கடவுளே! இந்த மாதிரி யாரையும் திரிசங்கு மாதிரி அந்தரத்தில் தவிக்க விடக் கூடாதுன்னு தீர்மானிச்சிக்கும். நேத்து அடிச்சிக்கிட்டவன் வாசிச்சா எப்படி ஒரு பொண்ணை நோகடிச்சிட்டோம்னு அலறிப் போவான். இனிமே செய்யக் கூடாதுன்னு அவனுக்குத் தோணிப் போகும். புரியுதா தாரிணி?''

கனகா டீ கொண்டு வந்தாள். சீனி கலந்த டீ சூட்டோடு உள்ளிறங்கிய போது, புரிந்த மாதிரி தோன்றிற்று.



இன்று இறப்பு விழா

21

விவேக் உடம்பின் சகல பாகங்களி லும் மூச்சிரைத்துக் கொண்டு ஏர்போர்ட் லௌஞ்சுக்குள் நுழைந்து, கண்ட்ரோல்ரூமை நோக்கிஓடினான். லௌஞ்சுக்குள் சாவதான மாய் நின்று கொண்டிருந்தவர்கள், நடந்து கொண்டிருந்தவர்களின் மேல் தவிர்க்க முடி யாமல் மோதி, 'ஸாரி' சொல்லி, கொஞ்சம் பெரிய சைஸ் ஆங்கிலோ இந்தியப் பெண் ணைத் தோள்பட்டையில் உச்சபட்ச வேகத் தில் 'நெக்'கென்று மோதிக் கெட்ட வார்த் தையில் அவளைத் திட்டச் செய்துவிட்டு, கண்ட்ரோல் டவரின் படிகளை நான்கு நான் காய் விழுங்கி, அறைக்குள் நுழைந்து மூச்சு வாங்கினான்... மேஜையைப் பற்றிக் கொண்டு!

டீயை உறிஞ்சிக் கொண்டிருந்த கண்ட் ரோல் ஆபீஸர் திகைப்பாய் நிமிர்ந்தார். சாஸரில் டீ ததும்பிக் கொண்டிருக்க, அதை அப்படியே மேஜையின் மேல் வைத்துவிட்டு எழுந்தார்.

''மிஸ்டர் விவேக்!''

ஏறக்குறைய கத்தினான் விவேக். ''ஸார்! ஃப்ளைட்டைத் திரும்பவும் ஏர் போர்ட்டுக்குத் திருப்பச் சொல்லுங்கள். ரொம்பவும் அவசரம்...''

''ஏன்...?''

''அந்த ஃப்ளைட் எந்த நிமிஷமும் வெடிக் கலாம்... அதில் டைனமைட் பொருத்தப் பட்டிருக்கிறது...''

ஆபீஸரின் முகம்வியர்வைக்குப்போனது.

''டைனமைட்?''

''எஸ். தகவல் இப்போதுதான் வந்தது. அது ஒரு அநாமதேயப் போன் கால். அதை நாம் இக்னோர் செய்வதற்கில்லை...''

நெற்றியில் கவலைக்கோடுகள் விழ, கண்ட்ரோல் ஆபீஸர் பக்கத்திலிருந்த ராடார் திரையைப் பார்த்தார். விமானம் இன்னமும் ராடாரின் எல்லைக்குள் இருப்பதற்கு அடை யாளமாய் ஒரு வெளிச்சம் புள்ளி மாதிரி தத்திக் கொண்டிருந்தது. ஆபீஸர் ஹெட் போனை மாட்டிக் கொண்டு கத்தினார்.

''திஸ்... ஈஸ் கண்ட்ரோல் டவர்...! காப்டன்... காப்டன்...!''

ஃப்ளைட்டிலிருந்து அலெக்சாண்டரின் குரல் வந்தது.

''சொல்லுங்கள் ஸார்.''

''விமானத்தை உடனடியாக லாண்ட் செய்ய வேண்டும். ஏர்போர்ட்டுக்குத் திருப் பிக் கொண்டு வாருங்கள்.''

''லாண்டிங்...?''

''ஆமாம்... ஃப்ளைட்டில் வெடிகுண்டு இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. எந்த நிமிஷமும் அது வெடிக்கலாம்...''

''டைனமைட்...? விமானத்தை மெட்டல் டிடெக்டர் வைத்து, இரண்டு மணி நேரம் அலசிப் பார்த்திருக்கிறேன் ஸார்...''

''இருந்தாலும் இந்த வார்னிங்கை நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை... விமா னத்தை ஏர்போர்ட்டுக்குக் கொண்டு வாருங் கள். அட் எனி காஸ்ட் ஒலிம்பிக் வீரர்கள் பத்திரமாய் லேண்ட் ஆக வேண்டும்...''

''அது என்னுடைய பொறுப்பு ஸார்...''

அடுத்த சில விநாடிகளுக்குள் ராடார் திரையில் விமானத்தின் திசை மாறுவது தெரிந்தது. வெளிச்சப் புள்ளி அரைவட்டம் அடித்து, ஏர்போர்ட் இருந்த திசையை மோப்பம் பிடித்துக் கொண்டு ஊர்ந்தது.

விவேக், போலீஸ் கமிஷனர் ஹரிஸ், கண்ட்ரோல் ஆபீஸர், மூன்று பேரும் கவலை யான பார்வைகளோடு ராடார் திரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெளிச்சப் புள்ளி தத்திக் கொண்டிருந்தது. அறைக்குள் அதி நிசப்தம். கண்ட்ரோல் ஆபீஸர் மட்டும் அவ்வப்போது ஹெட்போனோடு ''காப் டன்... காப்டன்...'' என்று கரகரத்தார். ஏர் லாங்க்வேஜில் பேசினார்.

விமானம் ஏர்போர்ட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

விவேக் கேட்டான்.

''விமானம் இப்போது ஏர்போர்ட்டிலி ருந்து எவ்வளவு மைல் தூரத்தில் இருக் கிறது...?''

''லாண்ட் ஆவதற்கு இன்னும் ஐந்து நிமிஷ தூரம்...''

விவேக் வாட்சைப் பார்த்தான். எலக்ட் ரானிக் குவார்ட்ஸில் செகண்ட்ஸ் ஸ்கொய ரில் 41, 42 என்று விநாடிகள் அழிந்து கொண்டிருந்தது. ராடாரில் வெளிச்சப் புள்ளி ஊர்ந்தது. கமிஷனர் அடிக்கடி கர்ச் சீப்பை உபயோகப்படுத்தி முக வியர்வையை ஒற்றினார். கண்ட்ரோல் ஆபீஸர் நகம் கடித்துத் துப்பினார்.

விவேக் பெருமூச்சுவிட்டுச் சொன்

ராஜேஷ்குமார்

னான். ''திட்டத்தில் எங்கேயோ நாம் தப்புப் பண்ணிவிட்டோம்.''

கமிஷனர் ஹில் எரிட்டார். ''விஷயம் யார் மூலமாகவோ வெளியே கசிந்திருக்கிறது...''

''எப்படி சாத்தியம்...?''

மறுபடியும் விவேக் வாட்சைப் பார்த்தான். விமானம் ஏர்போர்ட்டை நெருங்க — இன்னும் நான்கே நிமிஷம்! ராடாரில் புள்ளி சமீபித்திருந்தது.

'இந்த நான்கு நிமிஷங்களில் விமானம் வெடித்து.' யோசிக்கவே பயப்பட்டான் விவேக். கண்கள் பயமாய் விநாடி எண்களையே பார்த்தது. கண்ட்ரோல் ஆபீஸர் அடிக்கடி, ''காப்டன்... காப்டன்...'' என்று மைக்ரோ போனில் கூப்பிட்டுத் தொடர்பை உயிரோடு வைத்துக் கொண்டார்.

மூன்று நிமிஷம்!

கமிஷனர் ஐஸ் வாட்டர் ஜக்கை எடுத்துத் தம்ளரில் நீரை வார்த்துத் தொண்டைக்குக் காட்டினார். பின்னங்கழுத்தில் வியர்வை பெருகி : காக்கிக் காலரை நனைத்தது.

இரண்டு நிமிஷம்!

விமானம் ஜன்னலுக்கு வெளியே கறுப்பு வானத்தில் வால் பாகத்திலும், இறக்கைகளிலும், நீலம், பச்சை, சிவப்பு விளக்குகளோடு தெரிய, விவேக் எழுந்து ஜன்னலை நோக்கிப் போனான்... வேகமாய்... ஆர்வமாய்... பதற்றமாய் வானத்தைப் பார்த்தான்.

கண்ட்ரோல் ஆபீஸர் விமானம் லாண்ட் ஆவதற்கான இன்ஸ்ட்ரக்ஷன்களைக் கொடுக்க ஆரம்பித்தார்.

ஒரு நிமிஷம்!

விமானம் கீழே தாழ்ந்து, ரன்வேயின் கோடியில் இரை எடுக்கக் கீழே இறங்கும் பறவை மாதிரி... உயரம் இழந்தது. ரன்வே, யில்சக்கரம்பதித்து' ஜ்ஜ்க்ர்ர் ரென்றுவந்தது.

கமிஷனர் ஹில் வியர்ப்பதை நிறுத்தி, 'வீ... ஆர்... சேஃப்'' என்று சொல்லிப் புன்னகை செய்தார். விவேக் ஜன்னலை விட்டு அதே புன்னகையோடு நகர்ந்தான்.

''லௌஞ்சுக்குப் போயிடலாமா ஸார்?''

''வாங்க...''

ஆபீஸரிடம் திரும்பினான் விவேக். ''ஏர் செக்யூரிடி ஃபோர்ஸுக்குத் தகவல் கொடுத்திட்டீங்களா...?''

கண்ட்ரோல் ஆபீஸர் சொன்னார்: ''ஆல்ரெடி... இன்ஃபார்ம்ட்... ஃபயர் சர்வீஸ் வாகனங்கள் தயாராய்க் காத்திருக்கின்றன.''

கமிஷனர் ஹில்லும் விவேக்கும் டவரின் படிகளில் இறங்கி, லௌஞ்சுக்கு வந்தார்கள். விமானம் ரன்வேயில் கைதேர்ந்த 'ஸ்கேட்டர்' மாதிரி வந்து கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் குறைந்தது.

'ர்ர்ர்ர்ர்ர்ர்' என்ற ரீதத்தோடு வாலைத் திருப்பிக் கொண்டு நின்றது விமானம்.



கோகுலம்

ஏப்ரல் '89

இதழில்...



* சிறையில் வாடும் தலைவருக்குப் பெரிய பெரிய விருதுகள்!

— ஜானகி மணாளன்

* மோசமான காய்ச்சல்

— டாக்டர் கு. கணேசன்



* விருத்திராசுரனை வென்ற வஜ்ராயுதம்!

— 16 பக்க வண்ணப் படக்கதை



* உங்களுக்காக ஒரு திரைப்படம்!



தீயணைப்பு வண்டிகள் அரைவட்டம் போட்டுத் தயாராக, விமானத்தின் இடுப்போடு ஸ்டேர்ஸ் போய் ஒட்டிக் கொண்டது. கதவு திறக்கப்பட்டு கஷ்மா பட்டேலும் அர்ஜுன் கிருஷ்ணாவும் கலவரமாய்க் கீழே இறங்கினார்கள். தொடர்ந்து அலெக்சாண்டர். அதே கலவர முகம்.

மூன்று பேரும் வேகமான ஓட்டத்தில் லௌஞ்சை நோக்கி வந்தார்கள். அவர்கள் லௌஞ்சுக்குள் நுழைந்து விவேக்கை நோக்கி நகர்ந்த அதே வினாடி —

''டொம்ம்ம்ம்...'' லட்சக்கணக்கான டெஸிபல் அளவோடு காற்று மண்டலமே அதிர்கிற மாதிரி ஒரு சத்தம்... பின்பக்கமிருந்து எழுந்தது.

திடுக்கிட்ட மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்த பாரதீய வாயு சேனா விமானம் சின்னச் சின்னத் தீப்பிழம்புகளோடு உற்சாகமாய் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. அபாரமான உயரத்துக்குக் கரும்புகை சுழன்றது.

நேரம் நடுநிசி ஆன பின்பும் அந்த ரன்வே பரப்புப் பூராவும் விமானத்தின் பாகங்கள் சிதறிப் புகைந்து கொண்டிருந்தது. விவேக்கும், கமிஷனர் ஹில்லும், விமான நிலைய அதிகாரிகளோடு இடிபாடுகளுக்கு மத்தியில் நடந்தார்கள். கூடவே ஃபிளைட் பைலட் அலெக்சாண்டர்.

விவேக் அதிகாரிகளிடம் கேட்டான்.

''செக்யூரிடி ஃபோர்ஸ் ரிப்போர்ட் என்ன...?

அதிகாரி ஒருவர் சொன்னார்: ''ஃபிளைட் புறப்படுவதற்கு முன்பு மெட்டல் அண்ட் டைனமைட் டிடெக்டரால் இரண்டு மணி நேரம் சுத்தமாய்த் தடவப்பட்டிருக்கிறது. டைனமைட் நிச்சயமாக இல்லை என்று சொல்கிறார்கள்...''

''இப்போது விமானம் வெடித்திருக்கிறதே...?''

அதிகாரிகள் மௌனமாய் வந்தார்கள். செக்யூரிடி ஃபோர்ஸைச் சேர்ந்த சிலர் இடிபாடுகளைக் கிளறிப் பரிசோதனைக்காக விமானத்தின் உறுப்புகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

அலெக்சாண்டர் சொன்னார்: ''ஃபிளைட்டை லாண்ட் செய்ய ஒரு நிமிஷம் தாமதமாகியிருந்தாலும் ஆகாயத்திலேயே... நாங்கள் மூன்று பேரும்... சிதறியிருப்போம்... வெடித்தது... அநேகமாய் ஒரு டைமிங் டைனமைட்தான்... வெரி பவர்ஃபுல்...''

விவேக்கும் கமிஷனர் ஹில்லும் இடிபாடுகளில் அலைந்து, விமான நிலைய அதிகாரிகளிடம் ஒரு விசாரணையை நடத்திவிட்டு லௌஞ்சிற்கு வந்தார்கள். போலீஸ் செக்யூரிடி ஆட்களுக்கு நடுவில் – கலவரமாய் நின்றிருந்த அர்ஜுன் கிருஷ்ணாவும், கஷ்மா பட்டேலும், விவேக்கை நெருங்கினார்கள். கண்களில் இன்னமும் பயம் அதிர்ச்சி ஒட்டியிருக்க அர்ஜுன் சொன்னான்:

Godrej®

செலவிடும் பணத்திற்கு சிறந்த மதிப்பு!



புதிய கோத்ரெஜ் 165 லிட்டர் ரெஃப்ரிஜிரேட்டர்,
செலவிடும் பணத்திற்கு சிறந்த மதிப்பு

Godrej®

165 லிட்டர் ரெஃப்ரிஜெரேட்டர்.

இதற்கு இணையேது !

HTA 2364 R

''ஸார்... இனிமேல் இந்த விஷப்பரிசோதனை வேண்டாம். நாம் எந்த வழியை மேற்கொண்டாலும் அந்த இந்தியக் கழுகுகளுக்கு வியர்த்து விடுகிறது. மற்ற வீரர்கள் எப்படியோ... நானும் சுஷ்மா பட்டேலும் இந்த ஒலிம்பிக்கை பாய்காட் பண்ணப் போகிறோம்.''

''அவசரப்படாதீர்கள்!'' என்று விவேக் கையமர்த்த —

''நோ ஸார்... வீ காண்ட்! நாம் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளோடு காற்றில் கையையும் காலையும் வீசிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு ரகசியமாய்த் திட்டம் போட்டாலும் அது எதாவது ஒரு பக்கம் கசிந்து விடுகிறது. ஓட்டைப் பாத்திரத்தில் நாம் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கிறோம்'' — அர்ஜுன் பேச்சைக் கையமர்த்திய விவேக், ஏதோ சொல்ல முயன்ற விநாடி —

''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்.'' பின்பக்கம் குரல் கேட்டது.

விவேக் திரும்பிப் பார்த்தான்.

விமான நிலையச் சிப்பந்தி ஒருவர் நின்றிருந்தார்.

''எஸ்...''

''ஸார்... உங்களுக்கு போன். லைனில் உங்கள் மனைவி காத்திருக்கிறார். விஷயம் அவசரம். உடனே பேசச் சொன்னார்கள். என்கொய்ரி கௌண்டரில் டெலிபோன் இருக்கிறது...'' — சொல்லிவிட்டு அவர் நகர —

விவேக் அவசர நடையில் என்கொய்ரி கௌண்டரை நோக்கிப் போனான். மல்லாந்திருந்த ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்.

''ஹலோ... ரூபலா...''

ஆண் குரலொன்று கரகரத்தது. ''ஸாரி விவேக். எனக்குப் பெண் குரலிலும் பேச வரும். நான் பேசிக் கொண்டிருக்கிற... டெலிபோன் லைனை நீ ட்ரேஸ் அவுட் செய்வதற்குள் ஒரு செய்தியைச் சொல்லி விடுகிறேன். ஏர்போர்ட் லௌஞ்ச் ஜெண்ட்ஸ் டாய்லெட் ஸெல்லுக்குள் நிலைக் கண்ணாடிக்குப் பின்னால் உனக்கு ஒரு மெஸேஜ் வைக்கப்பட்டிருக்கிறது. போய்ப் படி...''

''டொக்!'' — ரிஸீவர் சாத்தப்பட்டது.

விவேக் பட்டனைத் தட்டி 'ஹலோ... ஹலோ...'' என்று கத்திப் பார்த்துவிட்டு, லௌஞ்சில் இருந்த ஜெண்ட்ஸ் டாய்லெட்டை நோக்கி ஓடினான். ஃப்ளாஷ் டோர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போக, நிலைக் கண்ணாடிக்குப் பின்னால் அந்த கவர் சொருகப்பட்டிருந்தது. பிரௌன் கவர்.

விவேக் பதற்றமாய் அந்தக் கவரை எடுத்து அதன் வாயை உடைத்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்தான். டைப் அடித்த ஆங்கில வாசகங்கள்... கண்ணுக்குச் சிக்கின.

'விவேக்! ஒரு நிமிஷ நேர வித்தியாசத்தில் இரண்டு ஒலிம்பிக் வீரர்களையும், பைலட் அலெக்ஸாண்டரையும் காப்பாற்றிய உனக்கு இந்தியக் கழுகுகளின் சார்பில் பாராட்டுக்கள். ஆனால் இந்தப் பாராட்டுக்கள் உனக்கு நிரந்தரமானவை அல்ல. நீ எந்த வழியில் எப்படி திட்டம் போட்டாலும் எங்களுக்கு அது தெரியாமல் போகாது. எங்களுடைய இரண்டு கோரிக்கைகளுக்கும்... இந்த அரசு பணிந்து போவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. உன்னுடைய துப்பறியும் திறமையை எல்லாம் ஓர் ஓரமாய் மூட்டை கட்டி வைத்து விட்டு, மந்திரி காமோத்தோடு பேசு. அவர் பிரதம மந்திரியோடு கலந்து பேசட்டும். ஒரு நல்ல முடிவுக்கு வரட்டும்... பாராளுமன்றத்தைக் கலைத்த பிறகுதான் ஒலிம்பிக் வீரர்கள் இந்திய எல்லையைத் தாண்ட முடியும்.

— இப்படிக்கு இந்தியக் கழுகுகள்.

கடிதத்தைப் படித்து யோசனையாய் அதை மடித்து கவருக்குள் மறுபடியும் நுழைத்த விவேக்கின் பார்வை –

சட்டென்று –

கவரின் இடது பக்க மூலையில் மையம் கொண்டு நின்றது.

அந்த இடத்தை உற்றுப் பார்த்தான். ஓர் இன்ஸ்டண்ட் பிரகாசம் முகத்திற்கு வந்தது.


(தொடரும்)

'''டி. வி. மசமசன்னு தெரியுது. தெளிவே இல்லை'ன்னு கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கீங்களே... நல்லாத்தானே தெரியுது...!''

''ஸாரிங்க... நான் ஞாபகமறதியா இரண்டு நாளாக் கொசு வலைக்குள்ளேயிருந்து பார்த்துக்கிட்டிருந்தேன்!''

— ரா. ரகோத்தமன்.





''எப்பா! இப்படித் தாறுமாறா கார் ஓட்டுறியே... டிரைவிங் லைசென்ஸ் எடுத்திருக்கியா...?''


''அவசரத்துல கார் மட்டும்தான் எடுக்க முடிஞ்சதுங்க!''

— கடுவை கோபால்சாமி.



சாலிடெர் தரம்
Solidaire
சர்வதேசப் புகழ் பெறுகிறது
சாலிடெர் CAT 1000DX... இப்போது யூகோஸ்லாவியாவுக்கு (கிழக்கு ஐரோப்பா) ஏற்றுமதி செய்வதற்கான மதிப்புமிக்க ஆர்டரைப் பெற்றுள்ளது. ஏற்றுமதிக்கு இது ஓர் ஆரம்பமே... இன்னும் பலப்பல ஏற்றுமதி ஆர்டர்கள் வர இருக்கின்றன.
சாலிடெர் CAT 1000 DX— இந்தியாவில் பெரிதும் விரும்பி வாங்கப்படும் டீலக்ஸ் கலர் டிவி... விரைவில் வெளி நாடுகளிலும் இதன் புகழ் கொடிகட்டிப் பறக்கப்போகிறது.
சாலிடெர்

என் தலை எழுத்து



கிருஷ்ணா

"அம்மா, ஆபீஸ்லேயி ருந்து அப்பா வந்தாச்சு."

நான் வராந்தாவில் செருப் பைக் கழற்றும் போதே என் கடைக்குட்டி கமலா ஒலிபரப்பி னாள்.

"அந்தச் சனியனை எடுத்து அவர் கையில் கொடு" என்று



உள்ளேயிருந்து அசரீரியாய் என் மனைவியின் ஒலிபெருக் கிக் குரல் முழங்கவும் திடுக்கிட்டேன்.

'அதை எடுத்து அந்தச் சனியனிடம் கொடு' என்று சொல்ல வந்ததை மாற்றிச் சொல்லி விட்டாளோ என்று சந்தேகமாக இருந்தது.

கமலா இரண்டு தபால் கவர்களை என் கையில் கொண்டு வந்து கொடுத்தாள்.

'கடன் கொடுத்தார் நெஞ்சம் போல்' என் இதயம் படபடவென்று அடித்துக் கொள்ள, கவரைப் பிரித் தேன்.

கதைகளேதான்!

நான் கஷ்டப்பட்டு, கற்பனைக் குதிரையை ஓட விட்டு எழுதியவை. போன பிரதர்-இன்-லா (மச் சான்) திரும்பி வந்த கதையாகி என்னைப் பார்த்துச் சிரித்தது.

"எத்தனை தரம் சொல்லு, மண்டையில் ஏறுவதே யில்லை. சோத்துல இந்து மகா சமுத்திர உப்பு எல்லாத் தையும் போட்டாலும் உறைக்காது. தண்டச் செலவு, தண்டச் செலவு. இந்தாங்க காப்பி" — என்று அர்ச் சித்தபடி என் மனைவி அடுப்புக்கரி ஏறிய தம்ளருடன் காப்பியை என் முகத்தில் இடிக்கும்படி நீட்டினாள்.

"யாரைத் திட்டறே?" என்று நுனி நாக்கு வரை வந்த கேள்வியைக் குறுக்கே வந்த சைக்கிளைக் கண்ட பஸ் டிரைவர் போல் சடன் ப்ரேக் போட்டு நிறுத்தி னேன்.

அவள் பொதுவாகச் சொன்னாலும் அது என்னைத் தான் என்பது ட்யூப் லைட்டாய்ப் புரிந்தது.

"என்ன ராஜம், இப்படிப் புடைவையெல்லாம் ஒரே கரியும், அழுக்குமாய்..."

நான் முடிப்பதற்குள், "என்ன பண்றது, கரி அடுப்பை விட்டுட்டு காஸ் வாங்கலாம்னா அனாவசி யச் செலவும்பீங்க. நல்ல நாளும் அதுவுமா புதுசாப் புடைவை கேட்டால் காக கொட்டியா இடக்கும்பீங்க. அதுவும் சரிதான், வாங்கற சம்பளத்துல பாதியைத் தானமா கொடுத்துட்டாக் கஷ்டமில்லாம குடும்பம் நடத்த முடியுமா? பேரு பெத்த பேரு தாக நீலு லேதுங் கற மாதிரி சம்பளக் கவர்லதான் நாலு இலக்கம் இருக்கு. வீட்டுக்குக் கொடுக்கறது கொஞ்சம்தானே. உங்க ஆபீஸ் ப்யூன் பொன்னுசாமி பொண்டாட்டி கூட என்னை விட நல்லா வசதியா மினுக்கிண்டு அலையறா" என்று 'ஸ்டென்மெஷின் கன்'னாய் வார்த்தைகளைக் குதறினாள்.

"நீ வேணா பாரு அம்மா... போற போக்கைப் பார்த்தால் இந்த வருடம் தபாலாபீஸுக்கு அதிக வரு மானம் தேடித் தந்தவர்னு அப்பா படத்தை ஸ்பெஷல் ஸ்டாம்பா போட்டுடப் போறாங்க பாரேன்!"

இது என் கனிஷ்ட புத்திரன் இளங்கோ. என் மனைவியின் தணல் அடுப்புக் கோபத்துக்கு ஆடிக் காற்றாய் விசிறினான்.

விஷயம் வேறு ஒன்றுமில்லை.

என் ஆபீஸ் நண்பன் ஸ்ரீனிவாசன் பத்திரிகைகளில் நிறையக் கதைகள் எழுதுவான். அவனுடன் ஒரு சமயம் பேசிக் கொண்டிருந்த போது "நீ கூட கதை எழுதலாமே கண்ணா. உன் பேச்சுலேயிருந்தே உன் கற்பனா சக்தி தெரியுதே" என்று அவன் கிண்டலடித்தானோ, நிஜ மாகச் சொன்னானோ, ஆனால் நான் அதை அப் படியே நம்பி 'ஞானபீடப் பரிசை'யே வாங்கி விட்டது போல் அகமகிழ்ந்து போனேன்.

அன்று பிடித்த பைத்தியம்தான். தினமும் ஒரு கதை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்புவதும், போன சில நாட்களிலேயே திரும்பி வருவதும் வா(வே)டிக்கை யாகி விட்டது.

ஸ்டாம்புக்கும், கவருக்கும் காசை அழுவதும், ஆனால் ஒரு கதை கூடப் பிரசுரம் ஆகாமல் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதும், அதில் எரியும் நெருப்பில் எண்ணெயாக நண்பர்களின் கேலிப் பார்வையும்... என் குடும்பத்தினருக்கு வி. பி. சிங்கின் வெற்றி ராஜீவுக்கு ஏற்படுத்திய எரிச்சலைவிடப் பன்மடங்கு எரிச்சலைக் கொடுத்தது.

அதுவும் இப்போதெல்லாம் ஒரு கதையோ, இரு கதைகளோ திரும்பி வருவது சகஜமாகிவிட்டது.

''என்னப்பா காப்பியைக் குடிக்காமல் கையில் வைச்சுண்டு சிந்தனை. கதையைப் பற்றியதா இல்லை அம்மா கொடுத்த காப்பியைப் பற்றியதா?''

இளங்கோ கேட்டவுடன் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து வைத்தேன்.

''குடிக்கிறது காப்பியா, மயான்னுகூட உங்கப்பாவுக்குத் தெரியப் போறதாக்கும். உங்கப்பா கற்பனைக் குதிரையில் சஞ்சாரம் பண்றாராக்கும்'' — இது நக்கலாக என் மனைவி.

''அப்பாவோட குதிரை கற்பனைக் குதிரை இல்லேம்மா. நொண்டிக் குதிரை'' இளங்கோ என் மனத்தை நொறுக்கினான்.

''நொண்டிக் குதிரைன்னு சொல்லாதேடா. கதைகள் போன வேகத்துலேயே திரும்பி வருவதைப் பார்த்தால் பறக்கும் குதிரையாகத்தான் இருக்கும்.''

''ஆகமொத்தம் அது காசைப் பிடுங்கற சண்டிக் குதிரை. அதுசரி, விடும்மா. நம்ம ஏ. எஸ். எல். வி. ராக்கெட் பறந்தாலும் பறக்கும். நம்ம அப்பாவோட கதை மட்டும் பிரசுரத்துக்கான சாத்தியமே வராது போலிருக்கு.

''அவருக்கு எழுதறது அலுத்துப் போகலையேடா. அவர் எப்பத்தான் திருந்தப் போகிறாரோ! அட, அங்கே பாரு. நம்ம நாயோட வாலு எப்படி வளைஞ்சிருக்கு...!'' என்று சூட்சுமமாகப் பேசியபடி உள் அறைக்குள் புகுந்தாள்.

இளங்கோ ஒரு நமுட்டுச் சிரிப்புடன் வெளியே கிளம்பினான்.

''சே! ஒருவனரும் எழுத்தாளனுக்கு ஆதரவுதான் கொடுக்க முடியலைன்னாலும் கொட்டாமலாவது இருக்கலாமில்லையா? நல்ல குடும்பமய்யா இது! ம், எனக்குக் கொடுத்து வைக்கலை. இவங்க மூக்கை உடைக்கிற மாதிரி ஒரு கதையை எழுதி நாளைக்கே போஸ்ட் பண்ணனும்'' என்று மனத்துக்குள் குமைந்தபடி சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டினேன்.

இன்று சுதந்திர தினம்.

ஆபீஸ் லீவானதால் ஹாய்யாகப் புரண்டு, புரண்டு படுத்தபடி பேப்பரை நோட்டமிட்டேன்.

''அம்மா இன்னிக்கு நல்ல நாள் தெரியுமா?'' — ஷேவ் பண்ணியபடி இளங்கோ சொல்லவும் அப்பாவியாய், ''உண்மைதாண்டா. நம்ம நாட்டுச் சுதந்திர தினமாச்சே...'' என்றேன்.

''அட, அதைச் சொல்லலை அப்பா. இன்னிக்கு 'போஸ்டல்' ஹாலிடே'ங்கிறதுனாலே உங்க கதை ஒண்ணும் திரும்பி வராது; கேலிச் சிரிப்புச் சிரிக்கும் போஸ்ட்மேனின் தரிசனமும் கிடையாது.''

அவன் சொல்லவும் ஏதோ லாட்டரிச் சீட்டில் லட்சம் விழுந்தது போல் 'ஹைய்யா' என்று அனைவரும் குதித்தார்கள்.

அப்போது, ''ஸார் போஸ்ட்'' என்ற குரல் கேட்கவும் நான் உள்பட அனைவரும் திகைத்தோம்.

தேதியை அவசரமாகப் பார்த்தேன், ஆகஸ்ட் பதினைந்துதான், ஏப்ரல் ஒன்று அல்ல.

''லீவு நாளே ஆனாலும் பழக்க தோஷத்தில் போஸ்ட்மேன் மறந்து போய் வந்துவிட்டாரா?'' — இளங்கோ கமெண்ட் அடித்தான்.

''போஸ்ட்மேன் இல்லை சார், நான்தான்'' என்றபடி காவிக்கலர் வேஷ்டியை மடித்துக் கட்டியபடி உள்ளே நுழைந்தார் பக்கத்து வீட்டு மாதவன்.

''இவருக்கும் நான் கதை எழுதுவது கிண்டலாகி விட்டதா?'' என்ற 'சுரு சுரு' கோபத்துடன் நான் அவரை முறைக்கும் போதே கையிலிருந்த போஸ்டல் கவரை என்னிடம் நீட்டினார்.

''நேற்று தவறுதலாகப் போஸ்ட்மேன் இதை ஊரிலிருந்து வந்திருக்கும் என் மச்சினன்கிட்டே கொடுத்துட்டுப் போயிட்டார் சார். இராத்திரி அவன் என்கிட்டே இதைக் கொடுக்கும் போதுதான் உங்களோடதுன்னு தெரிஞ்சது. முக்கியமான லெட்டரா இருந்தா சரி, கதைதானேன்னு இராத்திரி வந்து தொந்தரவு பண்ணலை'' என்றார் மாதவன்.

''கதைதானே'' என்று அவர் சொல்லும் போது அவர் முகத்தில் ஒரு சிரிப்புத் தோன்றி மறைந்தது அப்பட்டமாகத் தெரிய வெகுண்டேன்.

''சரி சார், தேங்க்ஸ்'' என்று போகலாம் என்பது போல் கைகூப்பினேன், முகத்தைத் திருப்பிக் கொண்டு.

''அப்புறம் சார்... ஹி... ஹி... அது... டியூ ஒரு ரூபாய் என் மச்சினன் இதுக்குக் கொடுத்திருக்கான். அதைக் கொடுத்துட்டீங்கன்னா...'' என்று அவர் அல்பமாக இழுக்கவும், மேலும் கடுப்புடன் ஒரு ரூபாயை முகத்தில் விட்டெறியாத குறையாகக் கொடுத்து விரட்டினேன்.

''காலையில் விழிச்சதே இது முகத்துலேயா? அடக் கடவுளே! இன்னிக்குப் பொழுது நல்லபடியாக் கழியணுமே! ஸ்டாம்புக்குத்தான் ஒழியட்டும் போயிட்டுப் போறதுன்னா இப்படியெல்லாம் கூடத் தண்டம் அழவேண்டியிருக்கே. எப்பத்தான் இதுக்குத் தலைமுழுகப் போறேனோ'' என்று சுப்ரபாதம் பாடியபடி என் மனைவி வரவும்,

இரம்மியமான அந்தக் காலைப் பொழுது என் நெஞ்சில் நடுப்பகல் அக்னி நட்சத்திர வெயிலானது.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



4 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

R.K.SWAMY/FSL/S112/TAM



அத்தியாயம் 30

குற்றச்சாட்டு

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் உள்ளமும் உடலும் சில நாளாகப் பெரிதும் நைந்து போயிருந்தன. புயல் அடித்த இரவு அவர் தூங்கவே இல்லையென்று இளைய பிராட்டி முதன் மந்திரியிடம் கூறியது மிகைப்படுத்திக் கூறியதல்ல. அன்று பகற்பொழுதும் அவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டுதானிருந்தது. பிற்பகலில் சின்னப் பழுவேட்டரையர் வந்து அவருடைய சஞ்சலத்தை அதிகப்படுத்தி விட்டார். முக்கியமாக, முதன் மந்திரி அநிருத்தர்மீது அவர் பல குற்றங்களைச் சுமத்தினார். அவர் தஞ்சைக்கு வந்தது முதல் கோட்டைக்குள் ஜனங்கள் வருவது பற்றிய கட்டுதிட்டங்கள் எல்லாம் உடைந்து விட்டன என்று கூறினார். முதன் மந்திரியைப் பார்ப்பதற்கு வருகிறோம் என்ற வியாஜத்தினால் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைகிறார்கள் என்றும், இதனால் சக்கரவர்த்தியின் பாதுகாப்புக்கே பங்கம் விளையலாம் என்றும் குறிப்பிட்டார். அந்த இரண்டு குற்றங்களையும் கேட்ட சக்கரவர்த்தி தமக்குத்தாமே புன்னகை செய்து கொண்டார். அவற்றை அவர் முக்கியமாகக் கருதவில்லை.

ஆனால் மேலும் காலாந்தககண்டர் சுமத்திய குற்றங்களைப் பற்றி அவ்விதம் அலட்சியம் செய்ய முடியவில்லை. அன்று வெளியிலேயிருந்து வந்த ஜனங்களுக்கும் வேளக்காரப் படையினருக்கும் வீதியில் விவாதம்



முற்றிப் பெருங் கலவரமாகி விடக் கூடிய நிலைமை ஏற்பட்டதென்றும், அச்சமயம் நல்ல வேளையாகத் தாம் அங்கே செல்ல நேர்ந்தபடியால் விபரீதம் எதுவும் நேரிடாமல் தடுத்து இரு சாராரையும் சமாதானப்படுத்தி அனுப்பியதாகவும் கூறினார். முதன் மந்திரி அநிருத்தர் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர் என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்க, அவருடைய நடவடிக்கை அதற்கு நேர்மாறாயிருக்கிறதென்றும், கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர் கொண்டு வந்திருக்கிறார் என்றும், பழுவூர் அரண்மனைப் பல்லக்கையும் ஆட்களையும் இந்தக் காரியத்துக்கு உபயோகப்படுத்தியதாகவும், எதற்காக என்பது தெரியாமல் தாம் ஆட்களையும் பல்லக்கையும் அனுப்பிவிட்டதாகவும், ஏதாவது அபகீர்த்தி ஏற்பட்டால் அது பழுவூர்க் குடும்பத்தின் தலையில் விடியும் என்றும் கூறினார். கடைசியாக, இன்னொரு சந்தேகாஸ்பதமான சம்பவத்தைப் பற்றியும் சொன்னார். "பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருவதாக அறிந்து நான் கவலை கொண்டிருந்தேன். அவன் இளைய ராணியைப் பார்க்க வருவதாக அறிந்தபடியால் நடவடிக்கை எடுக்கத் தயக்கமாயிருந்தது. ஆயினும், அந்த அரண்மனையின் மீது ஒருகண் வைத்திருக்கும்படி ஓர் ஒற்றனை நியமித்திருந்தேன். இன்றைக்கு யாரோ ஒருவன் பொக்கிஷ மந்திரியின் அரண்மனைத் தோட்டத்தில் பின்புறமாகச் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்ததாக அந்த ஒற்றன் வந்து சொன்னான். உடனே அவனைக் கைப்பற்றி வரச் சில ஆட்களை அனுப்பினேன். அவர்கள்

அமரர் கல்கி

ஒருவனை அரண்மனைத் தோட்டத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்து வந்தார்கள். யார் என்று பார்த்தால், முதன்மந்திரியின் அருமைச்சீடனாகிய ஆழ்வார்க் கடியான் என்று தெரிய வந்தது. 'எதற்காகச் சுவர் ஏறிக் குதித்தாய்?' என்று கேட்டதற்கு அவன் மறுமொழி சொல்ல மறுத்து விட்டான். 'முதன் மந்திரியின் கட்டளை' என்றான். சக்கரவர்த்தி! இப்படியெல்லாம் இந்த அநிருத்தப் பிரம்மராயர் செய்துவந்தால், தஞ்சைக்கோட்டைப் பாதுகாப்புக்கு நான் எப்படிப் பொறுப்பு வகிக்க முடியும்? என் தமையனாரும் ஊரில் இல்லாதபடியால் இதையெல்லாம் தங்கள் காதில் போட வேண்டியதாயிற்று!''

இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் முறையிட்டது சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று. ''ஆகட்டும்; இன்று மாலை அநிருத்தர் இங்கே வருகிறார். இதைப் பற்றியெல்லாம் விசாரிக்கிறேன். முக்கியமாக, கோடிக்கரையிலிருந்து ஒரு பெண்ணைப் பலவந்தமாகப் பிடித்து வரச் சொன்ன விஷயம் என் மனத்தைப் புண்ணாக்கியிருக்கிறது. அது உண்மைதானே, தளபதி! சிறிதும் சந்தேகம் இல்லையே?'' என்று கேட்டார்.


''சந்தேகமே இல்லை; பல்லக்குத் தூக்கிகளும் அவர்களுடன் வந்த வீரர்களும் நேற்று நள்ளிரவில் என்னிடம் வந்து சொன்னார்கள். தஞ்சைக் கோட்டையை அணுகிய போது புயலில் சிக்கிக் கொண்டார்களாம். சாலையின் மரம் ஒன்று பெயர்ந்து விழுந்து சிலருக்கு அபாயம் ஏற்பட்டதாம். சிவிகை மீது விழாமல் தப்பியது பெரும்புண்ணியம் என்று சொன்னார்கள். நல்ல வேளையாக, ஸ்திரீ ஹத்தி தோஷம் ஏற்படாமற் போயிற்று! இதைப்பற்றி விசாரிப்பதோடு, ஆழ்வார்க்கடியான் காரியத்தையும் சக்கரவர்த்தி தீர விசாரணை செய்ய வேண்டும்!'' என்று தெரிவித்து விட்டு, காலாந்தககண்டர் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுச் சென்றார். அநிருத்தர் வரும் சமயத்தில் அங்கே இருக்கச் சின்னப் பழுவேட்டரையர் விரும்பவில்லை. தாறுமாறாகச் சம்பந்தமில்லாத கேள்வி ஏதேனும் தம்மை முதன் மந்திரி கேட்டுத் திணறச் செய்யக் கூடும் என்ற அச்சம் அவர் மனத்திற்குள்ளே இருந்தது. முக்கியமாக, சக்கரவர்த்தியிடம் புயலினால் அவதிக்குள்ளான ஜனங்களுக்கு உதவுவதற்காகப் பொக்கிஷ சாலையைத் திறந்து விடும்படி அநிருத்தர் தம் முன்னாலேயே உத்தரவு வாங்கி விட்டால் பெரிய தொல்லையாகப் போய் விடும். நாளைக்குத் தமையனாரின் முன்னால் எப்படி முகத்தைக் காட்டுவது?

அநிருத்தருடைய வரவை அன்று காலையிலிருந்தே சக்கரவர்த்தி எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் தான் முதன் மந்திரி வந்தார். அவருடைய திடநெஞ்சமும் இப்போது சிறிது கலங்கிப் போயிருந்தது. அவர் எவ்வளவோ ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டம் தவறிப் போய்விட்டது. மந்தாகினியைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்கும், பின்னர் சக்கரவர்த்தியைப் போய்ப் பார்க்கலாம் என்று அவர் அரண்மனைக்குப் போவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார். பிற்பகலில் ஆழ்வார்க்கடியான் வந்து பெரிதும் தர்ம சங்கடமான செய்தியைத் தெரியப்படுத்தினான். ஊமைராணி போயிருக்கக்கூடும் என்று தான் ஊகித்த குறுகிய சந்து வழியில் சென்றதாகவும், ஒரு ஸ்திரீ பழுவேட்டரையர் அரண்மனைத் தோட்டத்து மதில் சுவரில் ஏறிக் குதித்தது போல் தோன்றியதென்றும், அவள் ஊமை ராணியாக இருக்கக் கூடும் என்று எண்ணி அவனும் அந்த மதில் சுவரில் ஏறிக் குதித்ததாகவும், தோட்டத்தில் தேட ஆரம்பிப்பதற்குள்ளே சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் வந்து பிடித்துக் கொண்டதாகவும் கூறினான். ''அவர்களிடம் உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியவில்லை, ஐயா! அதனாலே தான் தங்களுடைய பெயரைக் கூறி விடுதலை பெற்று வர வேண்டியதாயிற்று!'' என்றான்.

இந்த விவரம் முதன் மந்திரிக்குப் பெருங் கவலையை உண்டாக்கிற்று. ''இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையில் இவ்வளவு அரண்மனைகள் இருக்கிற போது, பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலேயேதானா அவள் பிரவேசிக்க வேண்டும்? பகிரங்கமாக ஆள் விட்டுத் தேடச் சொல்லக் கூட முடியாதே? ஆனாலும், பார்க்கலாம். பெரிய பழுவேட்டரையர் ஊரில் இல்லாதது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அரண்மனையைச் சுற்றிலும் காவல் போட்டு வைக்கலாம். அவ்வரண்மனைக்கு உள்ளேயும் எனக்கு ஓர் ஆள் இருக்கிறான். அவனுக்கும் சொல்லி அனுப்புகிறேன்! இருந்தாலும், இந்த ஓடக்காரப் பெண் எவ்வளவு தர்மசங்கடத்தை உண்டாக்கி விட்டாள்?'' என்றார் முதன் மந்திரி.

''சுவாமி! ஓடக்காரப் பெண் குறுக்கிட்டிரா விட்டாலும் ஊமை ராணி தங்கள் விருப்பத்தின்படி நடந்திருப்பாள் என்பது நிச்சயமில்லை. எப்படியாவதுஓடிப்போகத்தான்முயன்றிருப்பாள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''எனக்கென்னவோ ஒரு நம்பிக்கை இருக்கிறது, இத்தனை தூரம் வந்தவள் சக்கரவர்த்தியைப் பார்க்காமல் போக மாட்டாள் என்று. நம்மால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்து பார்க்கலாம். ஆனால் இனிமேலும் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்குப் போகாமல் காலந் தாழ்த்துவது முறையன்று. நீயும் அந்த ஓடக்காரப் பெண்ணை அழைத்துக் கொண்டு என்னுடன் வா! இரண்டு இளவரசர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் சக்கரவர்த்திக்குத் தெரியப் படுத்திவிட வேண்டும். சின்ன இளவரசரைக் கடலிலிருந்து கரை சேர்த்த ஓடக்காரப் பெண் நேரில் அதைப் பற்றிச் சொன்னால் சக்கரவர்த்திக்கு நம்பிக்கை உண்டாகலாம்'' என்றார்.



முதன் மந்திரி அநிருத்தரும் அவருடைய சிடனும் பூங்குழலியும் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனை முகப்பிலேயே இளைய பிராட்டியும் வானதியும் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள். ஊமை ராணி அகப்படவில்லையென்ற செய்தி இளைய பிராட்டிக்கும் கலக்கத்தை அளித்தது. அவள் பெரிய பழுவூர் மன்னரின் அரண்மனைத் தோட்டத்தில் புகுந்த செய்தி கலக்கத்தை அதிகப்படுத்தியது. இதிலிருந்து விபரீத விளைவு ஏதேனும் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் ஏற்பட்டது.

''ஐயா! பெரிய பழுவூர் மன்னரின் மாளிகையிலிருந்து வெளியேறுவதற்குச் சுரங்க வழி இருக்கிறதாமே? அதன் வழியாகப் போய் விட்டால்?''

முதன் மந்திரிக்கு வந்தியத் தேவனின் நினைவு வந்தது. ''தாயே! அந்த வழியைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபமாயிருக்குமா? எல்லாரும் வாணர்குலத்து வாலிபனைப் போன்ற அதிர்ஷ்ட சாலியாயிருப்பார்களா? ஆயினும் கோட்டைக்கு வெளியிலும் ஆட்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்!'' என்றார்.

பின்னர் ஆழ்வார்க்கடியானையும் பூங்குழலியையும் இளையபிராட்டியுடன் விட்டுவிட்டு, முதன் மந்திரி மட்டும் சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்துக்குச் சென்றார். சக்கரவர்த்திக்கும் அவர் அருகில் வீற்றிருந்த வான மகாதேவிக்கும் வழக்கமான மரியாதைகளைச் செலுத்தி விட்டு, புயலினால் சோழ நாடெங்கும் நேர்ந்துள்ள சேதங்களைப் பற்றி விசாரித்துத் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்ததினால் சீக்கிரமாக வர முடியவில்லை என்று சக்கரவர்த்தியிடம் தெரியப் படுத்திக் கொண்டார்.

அந்த ஏற்பாடுகளைப் பற்றிய விவ



ரங்களை அறிந்து கொண்டதில் சக்கரவர்த்திக்குச் சிறிது திருப்தி உண்டாயிற்று.

"தனாதிகாரி இல்லாத சமயத்தில் நீங்களாவது இப்போது இங்கு இருந்தீர்களே! அது நல்லதாய்ப் போயிற்று! ஆனால் இது என்ன நான் கேள்விப்படுவது? கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகப் பிடித்து வந்திருக்கிறீராமே? சற்று முன் கோட்டைத் தளபதி சொன்னார். பிரம்மராயரே! இம்மாதிரி நடவடிக்கையை உம்மிடம் நான் எதிர்பார்க்க வில்லையே? ஒருவேளை அதற்கு மிக அவசியமான காரணம் ஏதேனும் இருந்திருக்கலாம். அப்படியானால் எனக்குத் தெரிவிக்கலாமல்லவா? அல்லது எல்லாருமே நான் நோயாளியாகிவிட்டபடியால் என்னிடம் ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை. என்னை எதுவும் கேட்க வேண்டியதுமில்லை என்று வைத்துக் கொண்டுவிட்டீர்களா? அருள்மொழிவர்மன் கடலில் முழுகாமல் தப்பிக் கரைசேர்ந்து நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் இருப்பதாகக் குந்தவை கூறுகிறாள். அதைப் பற்றிச் சந்தோஷப் படுவதா, வருத்தப்படுவதா என்று எனக்குத் தெரியவில்லை. கரை ஏறியவன் ஏன் இவ்விடத்துக்கு வரவில்லை? அவன் தப்பிப் பிழைத்துப் பத்திரமாக இருக்கும் செய்தியை ஏன் இதுவரை எனக்கு ஒருவரும் தெரியப்படுத்தவில்லை? — மந்திரி! என்னைச் சுற்றிலும் நான் அறியாமல் என்னவெல்லாமோ நடைபெறுகிறது. என்னுடைய ராஜ்யத்தில் எனக்குத் தெரியாமல் பல காரியங்கள் நிகழ்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் உயிரோடிருப்பதைக் காட்டிலும்......" என்று சக்கரவர்த்தி கூறி வந்தபோது அவர் தொண்டை அடைத்துக் கொண்டது; கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

குறுக்கே பேசக்கூடாதென்ற மரியாதையினால் இத்தனை நேரம் சும்மாயிருந்த அநிருத்தர் இப்போது குறுக்கிட்டு, "பிரபு! நிறுத்துங்கள்! தங்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு நாளும் தங்களுடைய நலனுக்கு எதிரான காரியம் எதுவும் செய்யவில்லை. இனியும் செய்ய மாட்டேன். தங்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டாம் என்ற காரணத்துக்காக இரண்டொரு விஷயங்களைத் தங்களிடம் சொல்லாமல் விட்டிருக்கலாம். அது குற்றமாயிருந்தால் மன்னித்து விடுங்கள். இப்போது தாங்கள் கேட்டவற்றுக்கெல்லாம் மறுமொழி சொல்கிறேன்; கருணை கூர்ந்து அமைதியாயிருக்க வேண்டும்" என்று இரக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

"முதன் மந்திரி! இந்த ஜன்மத்தில் எனக்கு இனி மன அமைதி இல்லை. அடுத்த பிறவியிலாவது மன அமைதி கிட்டுமா என்று தெரியாது. என் அருமை மக்களும் என் ஆருயிர் நண்பராகிய முதன் மந்திரியும் எனக்கு எதிராகச் சதி செய்யும்போது....."

"பிரபு! தங்களுக்கு எதிராகச் சதி செய்பவர்கள் யார் என்பதைச் சீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள். அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தைப்பட்டவன் அல்ல. இந்த முதன் மந்திரி பதவியை இப்போது நான் பெயருக்காகவே வைத்துக் கொண்டிருக்கிறேன். பெரிய பழுவேட்டரையரிடமே இந்தப் பதவியைக் கொடுத்து விடுகிறேன் என்று முன்னமே பல தடவை சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன். என் பேரில் சிறிதளவேனும் தங்களுக்கு அதிருப்தி இருந்தால்......"

"ஆம், முதன் மந்திரி, ஆம்! எந்த நேரத்திலும் என்னைக் கைவிட்டுப் போய்விட நீங்கள் எல்லோருமே சித்தமாயிருக்கிறீர்கள். **என் மூச்சுப் போகும் வரையில் என்னுடன் இருந்து என்னுடன் சாகப் போகிறவள் இந்த மலையமான் மகள் ஒருத்திதான்.** நான் செய்திருக்கும் எத்தனையோ பாவங்களுக்கு மத்தியில் ஏதோ ஒரு புண்ணியமும் செய்திருக்கிறேன். ஆகையினால்தான் இவளை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றேன்!" என்

றார் சக்கரவர்த்தி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சக்கரவர்த்திக்கு அருகில் கட்டிலில் வீற்றிருந்த வானமகாதேவிக்கு விம்மலுடன் அழுகை வந்து விட்டது. அவள் உடனே எழுந்து அடுத்த அறைக்குச் சென்றாள்.

''மன்னர் மன்னா! மலையமான் மகளைப் பற்றித் தாங்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். அவருடைய திருவயிற்றில் பிறந்த மக்களும் தங்களிடம் இணையற்ற பக்தி விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்.....''






''ஆனாலும் என் வார்த்தையை அவர்கள் மதிப்பதில்லை. என் கட்டளைக்கும் கீழ்ப்படிவதில்லை. எனக்குத் தெரியாமல் ஏதேதோ செய்கிறார்கள். நீரும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறீர்! அருள்மொழி வர்மன் கடலிலிருந்து தப்பிப் பிழைத்து நாகப்பட்டினம் புத்த விஹாரத்திலிருப்பது உமக்கு முன்னமே தெரியும் அல்லவா? ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''மன்னிக்க வேண்டும், பிரபு! அந்த விவரம் நேற்று வரையில் எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கவில்லை. இளவரசரின் உயிருக்கு ஆபத்து நேரிட்டிராது என்று மட்டும் உறுதியாயிருந்தேன். அவர் பிறந்த வேளையைக் குறித்துச் சோதிடக்காரர்கள் எல்லாரும் கூறியிருப்பது பொய்யாகி விடாதல்லவா?''

''முதன் மந்திரி! சோதிட சாஸ்திரத்தினால் நேரக்கூடிய தீங்குகளுக்கு அளவே இல்லை. இந்த இராஜ்யத்திலிருந்து சோதிடக்காரர்கள் எல்லாரையுமே அப்புறப்படுத்திவிட எண்ணுகிறேன். அருள்மொழியின் ஜாதகத்தைக் குறித்துச் சோதிடக்காரர்கள் கூறியிருப்பதை வைத்துக் கொண்டுதான் நான் உயிரோடிருக்கும் போதே அவனைச் சிம்மாதனத்தில் ஏற்றி விடுவதற்கு எல்லாரும் பிரயத்தனப் படுகிறார்கள். நீரும் அவர்களைச் சேர்ந்தவர்தானே?''

''சத்தியமாக இல்லை, பிரபு! அதற்கு மாறாக, சின்ன இளவரசர் சிறிது காலத்துக்கு இந்தச் சோழ நாட்டுக்குள் வராமலிருந்தாலே நல்லது என்று எண்ணினேன். இலங்கைக்குப் போயிருந்த போது இளவரசரிடம் அவ்விதமே சொல்லி விட்டு வந்தேன். ஆனால் நான் இப்பால் வந்தவுடன் பழுவேட்டரையர்களின் ஆட்கள் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வர இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். தாங்களும் அதற்குச் சம்மதம் அளித்திருக்கிறீர்கள். இந்தச் செய்திநாடுநகரமெல்லாம்பரவியிருக்கிறபடியால், ஜனங்கள் பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் தான் இளவரசரை ஏற்றி வந்த கப்பலை வேண்டுமென்று கடலில் மூழ்கடித்து விட்டதாக ஜனங்களிடையில் பேச்சாயிருக்கிறது.....''

''பொய், முதன் மந்திரி! பொய்! எல்லாம் முழுப் பொய்! பார்த்திபேந்திர பல்லவன் எல்லாம் என்னிடம் கூறி விட்டான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலில் இளவரசன் வரவில்லை. பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்தான். வழியில் வேண்டுமென்று கடலில் குதித்தான். இன்னொரு எரிந்த கப்பலில் இருந்த யாரோ ஒருவனைக் காப்பாற்றுவதற்காக என்று சொல்லி, பார்த்திபேந்திரன் தடுத்தும் கேளாமல், கொந்

தளித்த கடலில் குதித்தான். இப்போது யோசிக்கும் போது எல்லாமே பொய்யென்றும் என்னை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்றும் தோன்றுகிறது. இந்தச் சூழ்ச்சியில் குந்தவையும் சம்பந்தப் பட்டவள் என்பதை நினைக்கும் போது தான் எனக்கு வேதனை தாங்கவில்லை. இந்த உலகமே எனக்கு எதிராகப் போனாலும் குந்தவை என்னுடன் இருப்பாள் என்று எண்ணியிருந்தேன். ஒரு தகப்பன் தன் மகளிடம் சாதாரணமாகச் சொல்லத் தயங்கக் கூடிய வரலாறுகளையெல்லாம் சொன்னேன்......"

"அரசர்க்கரசே! இளைய பிராட்டி தங்களுக்கு எதிராகச் சதி செய்வதாய் உலகமே சொன்னாலும் நான் நம்பமாட்டேன்; தாங்களும் நம்பக் கூடாது. இளைய பிராட்டி ஒரு விஷயத்தைத் தங்களிடம் சொல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் அவசியம் இருக்க வேண்டும். சின்ன இளவரசர் தம் சிநேகிதனைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்ததில் பொய் ஒன்றுமில்லை. இளவரசரையும் அவருடைய சிநேகிதரையும் கடலிலிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்த ஓடக்காரப் பெண் இதோ அடுத்த அறையில் இருக்கிறாள். இலங்கையில் நடந்தவற்றையும் நேரில் பார்த்து அறிந்தவள். அரசே! அவளைக் கூப்பிடட்டுமா!" என்றார் அநிருத்தர்.

சக்கரவர்த்தி மிக்க ஆவலுடன், "அப்படியா? உடனே அவளை அழையுங்கள். முதன் மந்திரி!.... கோடிக் கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்து வரச்சொன்ன பெண் அவள் தானா?......" என்றார்.

"பழுவேட்டரையரின் பல்லக்கில் வந்த பெண்தான் அடுத்த அறையில் காத்திருக்கிறாள். இதோ அழைக்கிறேன்" என்று அநிருத்தர் கூறிக் கையைத் தட்டியதும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் உள்ளே வந்தார்கள்.

அத்தியாயம் 31

முன் மாலைக் கனவு

பூங்குழலியைச் சக்கரவர்த்தி உற்றுப் பார்த்து விட்டு, "இந்தப் பெண்ணை நான் இது வரை பார்த்ததில்லையல்லவா? ஆனால் முகஜாடை சற்றுத் தெரிந்த மாதிரி இருக்கிறது. பிரம்மராயரே! இவள் யார்?" என்று கேட்டார்.

"இவள் கோடிக் கரைத் தியாக விடங்கர் மகள். பெயர் பூங்குழலி!"

"ஆகா! அதுதான் காரணம்!" என்று சக்கரவர்த்தி கூறினார். பிறகு வாய்க்குள்ளே, "இவள் அத்தையின் முக ஜாடை கொஞ்சம் இருக்கிறது. ஆனால் அவளைப் போல் இல்லை. ரொம்ப வித்தியாசம் இருக்கிறது!" என்று முணு முணுத்துக்கொண்டார்.

அவர் முணுமுணுத்தது பூங்குழலியின் காதில் இலேசாக விழுந்தது. அதுவரையில் சக்கரவர்த்தியைப் பூங்குழலி பார்த்ததில்லை. அவர் அழகில் மன்மதனை மிஞ்சியவர் என்று கேள்விப்பட்டிருந்தாள். இளவரசரைப் பெற்ற தந்தை அப்படித்தான் இருக்க வேண்டுமென்றும் எண்ணியிருந்தாள். இப்போது உடல் நோயினாலும் மன நோயினாலும் விகாரப் பட்டுத் தோன்றிய சக்கரவர்த்தியின் உருவத்தைப் பார்த்துத்திகைத்துப்போனாள். தன் அத்தையைக் கைவிட்டது பற்றிச் சக்கரவர்த்தியிடம் சண்டை பிடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்ததை நினைத்து வெட்கினாள். பயத்தினாலும் வியப்பினாலும் கூச்சத்தினாலும் சக்கரவர்த்தியைத் தரிசித்தவுடனே வணக்கம் கூறுவதற்குக் கூட மறந்து நின்றாள்.

"பெண்ணே! உன் தந்தை தியாக விடங்கர் சுகமா?" என்று சக்கரவர்த்தி அவளைப் பார்த்துக் கேட்டார்.

அப்போதுதான் பூங்குழலிக்குச் சுய நினைவு வந்தது. இலங்கை முதல்

கிருஷ்ணா நதி வரையில் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தியின் சந்நிதியில் தான் நிற்பதை உணர்ந்தாள். உடனே தரையில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு எழுந்து கை கூப்பி வணக்கத்துடன் நின்றாள்.

சுந்தர சோழர் அநிருத்தரைப் பார்த்து, "இந்தப் பெண்ணுக்குப் பேச வரும் அல்லவா? ஒரு கால் இவள் அத்தையைப் போல் இவளும் ஊமையா?" என்று கேட்ட போது, அவர் முகம் மனவேதனையினால் சுருங்கியது.

"சக்கரவர்த்தி! இந்தப் பெண்ணுக்குப் பேசத் தெரியும். ஒன்பது ஸ்திரீகள் பேசக் கூடியதை இவள் ஒருத்தியே பேசி விடுவாள். தங்களைத் தரிசித்த அதிர்ச்சியினால் திகைத்துப் போயிருக்கிறாள்" என்றார் அநிருத்தர்.

"ஆமாம்; என்னைப் பார்த்தால் எல்லாருமே மௌனமாகி நின்று விடுகிறார்கள். என்னிடம் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை!" என்றார் சக்கரவர்த்தி.

மறுபடியும் பூங்குழலியைப் பார்த்து, "பெண்ணே! இளவரசன் அருள்மொழிவர்மனை நீ கொந்தளித்த கடலிலிருந்து காப்பாற்றினாய் என்று முதன் மந்திரி சொல்கிறார். அது உண்மையா?" என்று சுந்தர சோழர் கேட்டார்.

பூங்குழலி தயங்கித் தயங்கி, "ஆம், பிரபு!... அது குற்றமாக இருந்தால்..." என்றாள்.

சக்கரவர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலி பயங்கரமாகத் தொனித்தது.

"பிரம்மராயரே! இந்தப் பெண் சொல்லுவதைக் கேளுங்கள்! 'அது குற்றமாயிருந்தால்' என்கிறாள். இளவரசன் உயிரை இவள் காப்பாற்றியது 'குற்றமாயிருந்தால்' என்கிறாள். என் மகன் கடலில் முழுகிச் செத்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன் போலிருக்கிறது. அப்படிப்பட்ட ராட்சதன் நான் என்று இவளிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். முதன் மந்திரி! நாட்டு மக்கள் எல்லாரும் இப்படித்தான் என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?" என்று கேட்டார் சுந்தர சோழர்.

"பிரபு! இவள் பயத்தினால் ஏதோ சொல்லி விட்டாள். அதைப் பொருட்படுத்த வேண்டாம். பெண்ணே! இளவரசரை நீ காப்பாற்றியதற்காக இந்தச் சோழ நாடே உனக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியும் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். அதற்காக நீ என்ன பரிசு வேண்டுமோ, அதைக் கேட்டுப் பெறலாம். இப்போது, நடந்ததையெல்லாம் சக்கரவர்த்தியிடம் விவரமாகக் கூறு! பயப்படாமல் சொல்லு!" என்றார்.

"முதலில், ஒரு விஷயத்தை இந்தப் பெண் சொல்லட்டும். இளவரசனைக் கடலிலிருந்து காப்பாற்றியதாகச் சொல்லுகிறாளே? அவன் இளவரசன்தான் என்பது இவளுக்கு எப்படித் தெரியும்? முன்னம் பார்த்ததுண்டா?" என்றார் சக்கரவர்த்தி.

"ஆம், பிரபு! முன்னம் ஈழ நாட்டுக்கு வீரர்களுடன் இளவரசர் கப்பல் ஏறிய போது சில தடவை பார்த்திருக்கிறேன். ஒரு முறை இளவரசர் என்னைச் 'சமுத்திர குமாரி' என்று அழைத்ததும் உண்டு!" என்று கூறினாள் பூங்குழலி.

"ஆகா! இந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் பேச்சு வருகிறது!" என்றார் சுந்தரசோழ சக்கரவர்த்தி.

பின்னர், முதன் மந்திரி அடிக்கடி தூண்டிக் கேள்வி கேட்டதன் பேரில் பூங்குழலி வந்தியத்தேவனை இலங்கைக்கு அழைத்துச் சென்றதிலிருந்து இளவரசரை நாகைப்பட்டினத்தில் கொண்டு போய் விட்டது வரையில் எல்லாவற்றையும் கூறினாள். ஆனால் அநிருத்தர் எச்சரிக்கை செய்திருந்தபடியால் மந்தாகினியைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லவில்லை.

எல்லாம் கேட்ட பின்னர் சக்கரவர்த்தி, "பெண்ணே! சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்குச் செய்யக் கூடியது

ஒன்றுமேயில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்! கோடிக்கரையில் இளவரசனைக் கரை சேர்த்த பிறகு இங்கே ஏன் அழைத்து வரவில்லை? ஏன் நாகைப்பட்டினத்துக்கு அழைத்துப் போனாய்?'' என்றார்.

''சுவாமி! இளவரசர் கொடிய சுரத்தினால் நினைவு இழந்திருந்தார். நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் நல்ல வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று அங்கே அழைத்துப் போனோம். பிக்ஷுக்கள் இளவரசரிடம் மிக்க பக்தி உள்ளவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இளவரசரை அந்த நிலையில் ஓடத்தில்தான் ஏற்றிப் போகலாமே தவிர குதிரை மேலோ, வண்டியிலோ ஏற்றி அனுப்ப முடிந்திராது....''

''அச் சமயம் கோடிக்கரையில் பழுவேட்டரையர் இருந்தாரே, அவரிடம் ஏன் தெரிவிக்கவில்லை...?''

பூங்குழலி சற்றுத் தயங்கி விட்டுப் பின்னர் கம்பீரமான குரலில், ''சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் இளவரசருக்கு விரோதி என்று நாடெல்லாம் அறிந்திருக்கிறது. அப்படியிருக்க, இளவரசரைப் பழுவேட்டரையரிடம் ஒப்புவிக்க எவ்விதம் எனக்கு மனம் துணியும்?'' என்றாள்.

''ஆம், ஆம்! என் புதல்வர்களுக்குப் பழுவேட்டரையர்கள் மட்டுமா விரோதிகள்? நான் கூடத்தான் விரோதி. உலகம் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறது. அது போகட்டும்! முதன் மந்திரி! நேற்று இங்கு அடித்த புயல் நாகைப்பட்டினத்தில் இன்னும் கடுமையாக இருந்திருக்குமே? இளவரசனுக்கு மறுபடியும் ஏதேனும் தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே என்று என் நெஞ்சம் துடிக்கிறது.''

''பிரபு! சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடு. இப்போது இந் நாட்டுக்கு மகத்தான நல்ல யோகம். ஆகையால்....''

''சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடுதான்; ஆனால் நான் துரதிர்ஷ்டசாலியாயிற்றே, பிரம்மராயரே! நான் கண்ணை மூடுவதற்குள் என் புதல்வர்களை ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன்....''

''ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இத்தகைய புதல்வர்களையும் புதல்வியையும் பெற்ற தங்களைப் போன்ற பாக்கியசாலி யார்? இதோ இன்றைக்கே ஆட்களை அனுப்பி வைக்கிறேன். இளவரசரைப் பத்திரமாய் அழைத்து வருவதற்கு என் சீடன் திருமலையையும் கூட அனுப்புகிறேன்!'' என்றார் முதன் மந்திரி.

அப்போதுதான் சக்கரவர்த்தி ஆழ்வார்க்கடியான் மீது தம் பார்வையைச் செலுத்தினார்.

''ஆகா! இவன் இத்தனை நேரமும் இங்கே நிற்கிறானா? சின்னப் பழுவேட்டரையர் இவனைப் பற்றித் தானே சொன்னார்? பழுவூர் அரண்மனை மதிலில் ஏறிக் குதித்தவன் இவன்தானே?....''

''பிரபு! அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. அதைப் பற்றி நாளைக்குத் தெரியப்படுத்த அனுமதி கொடுங்கள். ஏற்கெனவே மிக்க களைப் படைந்து விட்டீர்கள்!'' என்றார் முதன் மந்திரி.

இச் சமயத்தில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் சக்கரவர்த்தியின் அறைக்குள்ளே வந்தார்கள்.

''முதன் மந்திரி! இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சக்கரவர்த்திக்கு அதிக களைப்பு உண்டாக்கக் கூடாது என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள்!'' என்று மகாராணி கூறினாள்.

பின்னர், ''இந்தப் பெண் இனிமையாகப் பாடுவாளாம். ஒரு தேவாரப் பாடல் பாடச் சொல்லுங்கள். சக்கரவர்த்திக்குக் கானம் மிகவும் பிடிக்கும்'' என்றாள்.

''ஆகட்டும், தாயே! என் சீடன் கூட ஆழ்வார் பாசுரங்களை நன்றாகப் பாடுவான். அவனையும் பாடச் சொல்கிறேன்!'' என்றார் முதன் மந்திரி.

பூங்குழலி ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்ற அப்பர் தேவாரத்தைப் பாடினாள். ஆழ்வார்க்கடியான் ''திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்'' என்ற பாசுரத்


ஆரோ:ஃபுட் அளிக்கிறது-
சுத்தமான,தரமான கோதுமை மாவு.
வசதியான பேக்கிலே!
AUROFOOD
Wholesome and Pure
WHEAT FLOUR
(ATTA)
for Chappatis Puris Naans
கோதுமையைத் தேடி வாங்கி, சுத்தம் செய்து அரைக்கும் தொல்லை இனி இல்லை. இப்போது வந்து விட்டது ஆரோஃபுட் கோதுமை மாவு. உயர்ந்த தரமானது; மிகவும் சுத்தமானது — ஆரோஃபுட் நிறுவனத்தின் மற்ற தயாரிப்புகளான ட்ரு பிஸ்கட், சேமியா போன்றே!
உங்கள் குடும்பத்தினருக்கு ஆரோஃபுட் கோதுமை மாவால் பூரி, சப்பாத்தி செய்து கொடுங்கள். அதன் அருமையான ருசி அவர்களைக் கவர்ந்துவிடும்.
• தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாப் கோதுமையில் தயாரிக்கப்படுவது. • மெஷின்களால் சுத்தம் செய்யப்பட்டு அரைக்கப்படுவது. • விட்டமின்களும் சத்துகளும் பாதுகாப்பாக உள்ள வகையில் பேக் செய்யப்படுவது.
ஆரோ:ஃபுட் கோதுமை மாவு
தரத்தையும் வசதியையும் நாடும் இல்லத்தரசிகளுக்காக!
ஒரு ட்ரு தயாரிப்பு. சிறந்த பொருட்களைக் கொண்டு, அன்புடனும் அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது.
HTA 7222 TM

அருள்வாக்கு



மருந்து கொடுத்தால் பத்யமும் வைப்பார்கள். இதைச் சாப்பிடப்படாது, சாப்பிட்டாலும் இவ்வளவுதான் சாப்பிடலாம் என்று கட்டுப்பாடு செய்வார்கள். அதே போல தர்ம சாஸ்திரங்களில் இன்னின்ன பண்ணக் கூடாது, இன்னின்ன அநுபோகங்கள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் விதிகள், நிஷேதங்கள் இருக்கின்றன.

எப்படியும் என்றைக்கோ ஒரு நாள் அழிந்து போகப் போகிற சரீர அபிவிருத்தியை முன்னிட்டே வைத்தியர் தரும் கசப்பு மருந்து உறைப்புக் கஷாயம் எல்லாம் சாப்பிட்டு, அவர் சொல்கிற பத்யங்களை ஏற்று நடக்கும் நாம், ஆத்மா பிவிருத்திக்காக மருந்து சொல்லும் மஹா பெரியவர்களான தர்ம சாஸ்திரக்காரர்களின் மருந்து, பத்யங்களை அதை விட நம்பிக்கையுடனும் பக்தியுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தைப் பாடினான்.

பாடல் ஆரம்பித்ததும் சுந்தர சோழர் கண்களை மூடிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் முகத்தில் சாந்தியும் நிம்மதியும் காணப்பட்டன. மூச்சு நிதானமாகவும் ஒரே மாதிரியாகவும் வந்தது. நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டார் என்று தெரிந்தது.

இருட்டுகிற சமயமாகி விட்டபடியால் தாதிப் பெண் விளக்கேற்றிக் கொண்டு வந்து வைத்தாள்.

முதன் மந்திரி உள்ளிட்ட அனைவரும் அவ்வறையிலிருந்து வெளியேறினார்கள்.

மலையமான் மகள் மட்டும் சிறிது நேரம் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தாள். அடுத்த அறையின் வாசற்படியிலிருந்து குந்தவை அவளைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்யவே அவளும் எழுந்து சென்றாள். பின்னர், அந்த அறையில் மௌனம் குடி கொண்டது. சுந்தர சோழர் மூச்சு விடும் சப்தம் மட்டும் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

முதல் நாளிரவு சற்றும் தூங்காத காரணத்தினால் களைத்துச் சோர்ந்திருந்த படியினாலும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் பாடிய தமிழ்ப் பாசுரங்களின் இனிமையினாலும் சுந்தர சோழர் அந்த முன் மாலை நேரத்தில் நித்திரையில் ஆழ்ந்தாரென்றாலும், அவருடைய துயில் நினைவற்ற அமைதி குடி கொண்ட துயிலாக இல்லை. பழைய நினைவுகளும் புதிய நினைவுகளும் உண்மை நிகழ்ச்சிகளும் உள்ளக் கற்பனைகளும் கனவுகளாகி உருவெடுத்து அவரை விதவிதமான விசித்திர அனுபவங்களுக்கு உள்ளாக்கின.

அமைதி குடி கொண்டிருந்த நீலக் கடலில் அவரும் பூங்குழலியும் படகில் போய்க் கொண்டிருந்தார்கள். பூங்குழலி படகைத் தள்ளிக் கொண்டே கடலின் ஓங்கார சுருதிக்கு இசைய ஒரு கீதம் பாடிக் கொண்டிருந்தாள்.

"சோர்வு கொள்ளாதே மனமே — உனது
ஆர்வமெல்லாம் ஒருநாள் பூரணமாகும்!
காரிருள் மூடிய நீளிரவின் பின்னர்
காலை மலர்தலும் கண்டனை அன்றோ
தாரணி சிலிர்க்கும் தாமரை சிரிக்கும்
அளிக்குலம் களிக்கும் அருணனும் உதிப்பான்!"

இந்த கீதத்தைக் கேட்டுச் சுந்தர சோழர் புளகாங்கிதம் அடைந்தார். அவருடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்த சோர்வு நீங்கி உற்சாகம் ததும்பியது. ''இன்னும் பாடு!'' ''இன்னும் பாடு!'' என்று பூங்குழலியைத் தூண்டிக் கொண்டிருந்தார். ஆழ் கடலில் மிதந்து படகு போய்க் கொண்டேயிருந்தது.

திடீரென்று இருள் சூழ்ந்தது. பெருங் காற்று அடிக்கத் தொடங்கியது. சற்று முன் அமைதியாக இருந்த கடலில் மலை மலையாக அலைகள் எழுந்து விழுந்தன. தொட்டில் ஆடுவது போல் சற்று முன்னால் ஆடிக் கொண்டிருந்த படகு இப்போது மேக மண்டலத்தை எட்டியும் அதல பாதாளத்தில் விழுந்தும் தத்தளித்தது. படகில் இருந்த பாய் மரங்களின் பாய்கள் சுக்கு நூறாகக் கிழிந்து காற்றில் அடித்துக் கொண்டு போகப்பட்டன. ஆயினும் படகு மட்டும் கவிழாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் பூங்குழலியின் படகு விடும் திறத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி வியந்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

காற்று வந்த வேகத்தைப் போலவே சட்டென்று நின்றது. கடலின் கொந்தளிப்பு வரவரக் குறைந்தது. மீண்டும் பழையபடி அமைதி ஏற்பட்டது. கீழ்த் திசையில் வான முகட்டில் அருணோதயத்துக்கு அறிகுறி தென்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் தங்கச் சூரியன் உதயமானான். கடலின் நீரும் பொன் வண்ணம் பெற்றுத் தகதகா மயமாகத் திகழ்ந்தது. சற்றுத் தூரத்தில் பசுமையான தென்னந் தோப்புக்கள் சூழ்ந்த தீவுகள் சில தென்பட்டன. அத் தீவுகளிலிருந்து புள்ளினங்கள் மதுர மதுரமான குரல்களில் இசைத்த கீதங்கள் எழுந்தன. ஈழ நாட்டின் கரையோரமுள்ள தீவுகள் அவை என்பதைச் சுந்தர சோழர் உணர்ந்து கொண்டார். அவற்றில் ஒரு தீவிலேதான் முந்தைப் பிறவியில் அவர் மந்தாகினியைச் சந்தித்தார் என்பது நினைவு வந்தது.

அந்தத் தீவின் பேரில் பார்வையைச் செலுத்திக் கொண்டே, ''பூங்குழலி! கடைசியில் என்னைச் சொர்க்கலோகத்துக்கே கொண்டு வந்து சேர்த்து விட்டாயல்லவா? உனக்கு நான் எவ்விதத்தில் நன்றி செலுத்தப் போகிறேன்?'' என்றார். பூங்குழலி மறுமொழி சொல்லாதது கண்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார். அப்படியே ஸ்தம்பிதமாகி விட்டார். ஏனெனில், படகில் இன்னொரு பக்கத்தில் இருந்தவள் பூங்குழலி இல்லை. அவள் மந்தாகினி! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி இருந்தாளோ, அப்படியே இன்றுமிருந்தாள்!

சில நிமிஷ நேரம் திகைத்திருந்து விட்டு, ''மந்தாகினி! நீதானா? உண்மையாக நீதானா? பூங்குழலி மாதிரி மாற்றுருவம் கொண்டு என்னை அழைத்து வந்தவள் நீதானா?'' என்றார். தாம் பேசுவது அவளுக்குக் காது கேளாது என்பது நினைவு வந்தது. ஆயினும் உதடுகளின் அசைவிலிருந்து அவர் சொல்வது இன்னதென்பதை அறிந்து கொண்டவள் போல மந்தாகினி புன்னகை புரிவதைக் கண்டார்.

அவள் அருகில் நெருங்கிச் செல்வதற்காக எழுந்து செல்ல முயன்றார். ஆனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. தம் கால்கள் பயனற்றுப் போயின என்பது நினைவு வந்தது.

''மந்தாகினி! நான் நோயாளியாய்ப் போய் விட்டேன். உன்னிடம் என்னால் வரமுடியவில்லை. நீதான் என் அருகில் வரவேண்டும். இதோ பார், மந்தாகினி! இனி ஒரு தடவை மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாக முடிசூட்டுவதாய் என்னை யாரேனும் அழைத்தாலும் நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். இந்த ஈழ நாட்டுக்கு அருகிலுள்ள தீவுகளுக்கு நாம் போக வேண்டாம். இங்கே யாராவது வந்து கொண்டேயிருப்பார்கள். படகை நடுக்கடலில் விடு! வெகு தூரம், தொலைதூரம், ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று, அப்பால் உள்ள தீவாந்தரத்துக்கு நாம் போய் விடுவோம்!'' என்றார் சுந்தர சோழர். அவர் கூறியதையெல்லாம் தெரிந்து கொண்டவள் போல மந்தாகினி புன்னகை புரிந்தாள்.

காவேரி நதியில் இராஜ ஹம்ஸத்தைப் போல் அலங்கரித்த சிங்காரப் படகில் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் அவருடைய பட்டத்து ராணியும் குழந்தைகளும் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். கான வித்தையில் தேர்ந்தவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். சுந்தர சோழர் கான இன்பத்தில் மெய்மறந்து கண்களை மூடிக் கொண்டிருந்தார். திடீரென்று ''ஐயோ! ஐயோ!'' என்று கூக்குரலைக் கேட்டுக் கண்விழித்துப் பார்த்தார். ''குழந்தையைக் காணோமே? அருள்மொழியைக் காணோமே?'' என்று பல குரல்கள் முறையிட்டன. சுந்தர சோழர் பரபரப்புடன் சுற்று முற்றும்பார்த்தார். காவேரியின்வெள்ளத்தில் அவருடைய செல்வக் குழந்தையான அருள்மொழியை யாரோ ஒரு ஸ்திரீ கையினால் பிடித்துக் கொண்டு தண்ணீரில் அமுக்கிக் கொல்ல முயன்று கொண்டிருந்தாள். சொல்ல முடியாத பயங்கரத்தையடைந்த சுந்தர சோழர் காவேரி வெள்ளத்தில் குதிக்க எண்ணினார். அச்சமயம் அந்த ஸ்திரீயின் முகம் அவருக்குத் தெரிந்தது. அது விகாரத்தை அடைந்த மந்தாகினியின் முகம் என்பதை அறிந்து கொண்டார். உடனே அவருடைய உடல் ஜீவசக்தி அற்ற ஜடப் பொருளைப் போல் ஆயிற்று. தண்ணீரில் குதிக்கப் போனவர் படகிலேயே தடால் என்று விழுந்தார்.

படகிலே விழுந்த அதிர்ச்சியினாலே தானோ, என்னமோ, சுந்தர சோழர் துயிலும் கனவும் ஒரு காலத்தில் நீங்கப் பெற்றார். புயல் மழை காரணமாக வழக்கத்தை விடக் குளிர்ச்சி மிகுந்திருந்த அவ் வேளையில் அவருடைய தேகமெல்லாம் வியர்த்திருந்தது. இவ்வளவு நேரமும் கண்ட தோற்றங்கள் எல்லாம் கனவில் கண்டவை என்பதை உணர்ந்த போது அவருடைய நெஞ்சிலிருந்து ஒரு பெரும் பாரத்தை எடுத்தது போன்ற ஆறுதல் ஏற்பட்டது. எதிரே பார்த்தார். அறையில் ஒருவரும் இருக்கவில்லை. தீபம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. தாம் தூங்கி விட்டபடியால் பக்கத்து அறையில் இருக்கிறார்கள் போலும்! கையைத் தட்டி அழைக்கலாமா என்று எண்ணினார். ''சற்றுப் போகட்டும்; கனவுத் தோற்றத்தின் அதிர்ச்சிகள் நீங்கட்டும்'' என்று எண்ணிக் கொண்டார்.

அப்போது மேல் மச்சிலிருந்து ஏதோ மிக மெல்லிய சத்தம் கேட்டது. அது என்னவாயிருக்கும்? முகத்தைச் சிறிதளவு திருப்பிச் சத்தம் வந்த திக்கை நோக்கினார். மேல் மச்சின் தூணைப் பிடித்துக் கொண்டு விளிம்பின் வழியாக ஓர் உருவம் இறங்கி வருவது போலத் தோன்றியது.

(தொடரும்)



— ஆ. நல்லமுத்து.

இந்தப் பெண்கள் ஏமாந்த கதை...



'**ஏ**த்தனையோ கிராம மக்களின் குறைகளை வெளியிட்ட நீங்கள், நாங்கள் சீட்டுக் கட்டி ஏமாந்த கதையையும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றும் நியாயம் கிடைக்காத கொடுமையையும் எழுதக் கூடாதா?' என்று கிழக்குத் தாம்பரத்திலுள்ள ஆனந்தபுரத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. உடனடியாகப் புறப்பட்டுச் சென்றோம்...

''சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 18 – ஆம் தேதி காலையும் வழக்கம் போல்தான் விடிந்தது. விடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் 'நீலாவைக் காணோம்... குடும்பத்தோடு காணோம்...' என்று எங்கள் ஆனந்தபுரமே பரபரப்பானது. என்னைப் போன்ற பல பெண்களுக்குப் பகீரென்றாகிவிட்டது. காரணம் அந்த நீலாவிடம்தான் என்னைப் போல் ஏராளமான பெண்கள் பத்தாயிரம் பதினைந்தாயிரம் என்று சீட்டுக் கட்டிக் கொண்டு வந்தோம்; இனி அந்தப் பணத்தை எப்படிப் பெறுவது என்ற கவலைதான்!

''நீலா கடந்த பதினைந்தாண்டுகளாகவே சீட்டு நடத்தி வந்தார். எழுதப் படிக்கத் தெரியாத பெண்தான் என்றாலும் கம்ப்யூட்டர் மாதிரி கணக்குப் போட்டு விடுவார் – மனத்திற்குள்ளாகவே! அவர் கணவரும் (குப்பன்) மோட்டார் ரிக்ஷா ஓட்டி வந்தார். சொந்த வீடும் உண்டு. அதிலிருந்து சுமார் ஐந்நூறு வரை மாத வாடகையும் அவர்களுக்கு உண்டு. அதனால் என்னைப் போன்ற பெண்கள் நம்பிக்கையோடு எந்த விதமான ரசீதும் வாங்கிக் கொள்ளாமல் அவரிடம் சீட்டுக் கட்டி வந்தோம். இதுவரை எந்தவிதப் பிரச்னையும் இல்லாமல் அனைவருக்கும் பட்டுவாடா செய்து வந்த நீலாதான் இப்படித் திடீரென்று காணாமல் போயிருக்கிறார் – அதுவும் எங்களைப் போன்றவர்களிடமிருந்து வசூல் செய்த சுமார் ஒன்றரை லட்ச ரூபாயை எடுத்துக் கொண்டு காணாமல் போயிருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? எங்கள் பணம் அதோ கதிதானா?

''எப்படியாவது நீலாவைக் கண்டுபிடித்தே ஆகவேண்டிய சூழ்நிலை எங்களுக்கு. அதற்காக நானும் திருமதி கமலத்மேரி என்பவரும் தாம்பரம் காவல் நிலையத்திற்குச் சென்று நீலா காணாமல் போனது பற்றிப் புகார் செய்தோம்.

''பத்து நாட்களுக்குக் காவல் நிலையத்திற்கு அலையாய் அலைந்ததுதான் மிச்சம். கடைசியில், 'போட்டோ இல்லாமல் நீலாவைக் கண்டுபிடிக்க முடியாது' என்று சொல்லி விட்டார்கள். அப்போது நீலாவின் தம்பி ராமாவரத்தில் இருப்பதால் அங்கு சென்று விசாரித்தால் தெரியும் என்று நாங்கள் போலீஸுக்கு ஆலோசனை சொல்ல, தாம்பரம் கிரைம் இன்ஸ்பெக்டர் இரண்டு போலீஸ்காரர்களை அனுப்பினார். அவர்களை கமலத்மேரியின் கணவர் சவேரியார் ராமாவரத்திற்குக் கூட்டிச் சென்றார். போக வர வேன், காப்பி, டிபன் என்று அன்று ரூ. 300 – க்கு மேல் செலவானதுதான் மிச்சம். நீலாவின் தம்பியை அழைத்து விசாரித்துவிட்டு (என்னதான் விசாரித்தார்களோ!)ப் பேசாமல் விட்டுவிட்டனர்.

''இதற்கிடையில் நீலாவின் கணவர் கடலூரில் ரிக்ஷா வைத்து ஓட்டிக் கொண்டிருப்பதாக யாரோ எங்களிடம் சொல்ல, இம்முறை போலீஸின் துணையை நாடாமல் (செலவுக்குப் பயந்து) நாங்களே சென்று



திருமதி சுசுந்தா



திருமதி கமலத்மேரி

தேடிப் பார்த்தோம். பயனில்லை.

''எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. குறி சொல்பவர்களிடம் கூடக் குறி கேட்டுப் பார்த்தோம். ஒருவர் சைதாப் பேட்டையில் இருப்பதாகவும், இன்னொருவர் வண்ணா ரப்பேட்டையில் இருப்பதாகவும் குறி சொல்ல, அங்கெல்லாம் சென்றும் தேடிப் பார்த்தோம். ஆயினும் துப்பு கிடைத்த பாடில்லை!

''இப்படி நாங்கள் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில்தான் நீலாவின் மகன் திருவேற்காடு கருமாரியம்மன் கோயி லில் சூடம் விற்றுக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டுச் சென்றோம். திருவேற் காட்டையே அலசோ அலசென்று அலசி ஒருவழியாக நீலாவைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து நாங்களே போலீஸில் ஒப்ப டைத்தோம். ஒப்படைத்தும் ஒரு பயனும் இல்லை. ஒருவழியாகப் போலீஸார் முதல் தகவல் அறிக்கை (குற்ற எண் 1663/88)யைப் பதிவு செய்ததோடு சரி. கேட்ட போது, 'நீலா மேல் கேஸ் போட்டால் அவள் சில நாட் கள் ஜெயிலில் இருந்துவிட்டு வெளியில் வந்து விடுவாள். அப்புறம் உங்கள் பணம் போனதுதான்... என்ன செய்வீர்கள்?' என்று பொறுப்பில்லாமல் போலீஸார் சொல்லி விட்டார்கள். நாங்கள் என்ன தான் செய்வது? ஒன்றுமே புரியவில்லை. அதனால்தான் கல்கிக்கு எழுதினோம்...'' என்றார் திருமதி சுசுந்தா ராமகிருஷ்ணன்.

அவரோடு இருந்த திருமதி கமலத்மேரி, பத்மாவதி, காமாட்சி, சுசீலா... என்று பல பெண்களும் அவர் சொன்னதையே தாங் களும் சொல்லி உறுதிப்படுத்தினார்கள்.

இதுகுறித்து அந்த நீலா என்ன சொல் கிறார்? நீலாவைச் சந்தித்தோம்.

''நான் சீட்டுப் பிடித்தது உண்மை. என் னிடம் சீட்டுக் கட்டியவர்களுக்கு நான் 67,000 ரூபாய் பாக்கி தர வேண்டியிருக் கிறது என்பதும் உண்மை. அதேபோல் நான் என்னிடம் புழங்கிக் கொண்டிருந்த சீட்டுப் பணத்தை வட்டி கிடைக்குமென்ற ஆசையில் பிறருக்கு ரூ. 92,300 வரை வட்டிக்குக் கொடுத்தேன். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதால் எழுத்து மூலமாக எந்த விதக் கணக்கும் வைத்துக் கொள்ளவில்லை. அதனாலேயோ என்னவோ நான் வட்டிக்குக் கொடுத்தவர்கள் எனக்குப் பணத்தைத் திருப்பித்தரமாட்டேன்என்கிறார்கள்.போலீ ஸார் கூட நான் கொடுக்க வேண்டிய பணத் தைப் பற்றித்தான் விசாரித்தார்களே தவிர, என்னிடமிருந்து வட்டிக்கு வாங்கியவர்கள் தராதது பற்றி எதுவுமே விசாரிக்கவில்லை. எனக்கு வர வேண்டியது வந்தால் நான் தர வேண்டியவர்களுக்கும் தந்து விடுவேன். ஏமாற்றும் நோக்கம் எனக்குக் கிடையவே கிடையாது'' என்றார் நீலா.

இதுகுறித்து போலீஸ் தரப்பின் பதில் என்ன? 19.11.88 அன்று தாம்பரம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட எஃப். ஐ. ஆர். மேல் போலீஸ் எடுத்த நட வடிக்கை என்ன? செங்கற்பட்டு மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் மூர்த்தி அவர்களிடம் கேட்டோம்.

சம்பந்தப்பட்ட வழக்கின் விவரங்கள் எல்லாம் கேட்டிருப்பதாகவும் ஒரு வாரத் துக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

போலீஸார் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க முடியும்? சுசுந்தாவுக்கும் அவரது நண்பர்களுக்கும் எந்த அளவுக்குப் பணம் திரும்பக் கிடைக்கும்? நம்மால் உறுதியாகக் கூற முடியாது. ஆனால், இந்தச் சம்பவம், இதைப் படிக்கும் எல்லோருக்கும் ஒரு பாட மாக அமைய வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல முடியும்!

— ப்ரியன்.

வண்ணப்படம் மற்றும் புகைப்படங்கள்: ஸ்ரீஹரி.




''என் மனைவியிடம் 'நீ செய்த சப் பாத்தி படுஜோர்'னு பாராட்டினதுக்குக் கோவிச்சுக்கிறா!''

''ஏனாம்?''

''அது தோசையாம்!''

— ஆர். ரகோத்தமன்.



தூங்கும் அழகியே! நான் முத்தமிட்டதும்தானே உன் தூக்கம் கலையணும்?
இளவரசே! உங்க வேலையை இந்த கொசுக்கள் பண்ணிடுச்சு!
அமைதியாய் அழகாய் தூங்கிட...டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
அடடா, என்ன மச்சான்! நம்ம பீமா இவ்வளவு சுருக்க அடி வாங்கிட்டாரு! என்னஆச்சுன்னு தெரியலையே?
அதைஏன் கேக்கிறே! ராத்திரி முழுக்க கொசுக்களோட குஸ்தி போட்டிட்டிருந்தாராம்!
கொசுக்களை ஒரேயடியாக வீழ்த்துகிறது...டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
everest/88/BCL/300 tm
டார்ட்டாய்ஸ்
கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
:.போர்ட், பம்பாய்-400 023. :.போன்: 273831

11

ஆகாயத் தீவுகள்

பிரபஞ்சன்

அந்தப் பெரிய, குளிர்ந்த அறையில் அமர்ந்திருந்தார் முதல்வர்.

கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்ததும், ''வாங்க'' என்றார் அவர். அவன் அவரை வணங்கினான். பதிலுக்கு அவரும் அவனை வணங்கினார்.

''உட்காருங்கள்'' என்றார். அவன் நாற்காலியின் முனையில் அமர்ந்தான்.

''பயணம் எல்லாம் சௌகரியமாக இருந்ததா?'' என்றார்.

''இருந்தது, சார். எம். எல். ஏ. மிகச் சிறப்பாகக் கவனித்துக் கொண்டார். அதோடு...'' என்றவன் சட்டென்று நிறுத்திக் கொண்டான். கோகிலா அங்கு வந்ததும், பணி செய்ததும் அவரிடம் சொல்லலாமா, கூடாதா என்று ஒரு குழப்பம் ஏற்பட்டது அவனுக்கு.

''அதோடு!'' என்று அவன் வார்த்தையையே பிடித்து மீண்டும் கேட்டார் அவர். அவரிடம் உண்மை சொல்வது என்று முடிவெடுத்தான் அவன்.

''கோகிலா வந்ததால் என் வேலை சுலபமாயிற்று.''

முதல்வர் அதற்கு ஏதும் பதில் சொல்லாததைக் கவனித்தான் அவன்.

''சரி... உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்! எதிர்காலத்தில் என்ன செய்வதாக உத்தேசம்?''

''மாமாவுக்கு இப்போது உதவியாளனாக இருக்கிறேன், சார். எதிர்காலத்தைப் பற்றி நான் சரியாக யோசிக்கவில்லை.''

''யோசிக்க வேண்டிய வயதில் இருக்கிறீர்கள். எத்தனை காலம் இப்படியே உதவியாளனாகவே இருப்பீர்கள்? உங்கள் மாமா, ஆளுங்கட்சியில் சிறப்போடு இருக்கிற வரை சரி. அப்புறம்?''

அவன் குனிந்து யோசித்தான்.

''உங்களுக்கு அரசியலில் ஆர்வம் இருக்கிறதா?''

அவன் சொன்னான்:

''சென்னைக்கு வரும் வரை எனக்கு அரசியலில் ஆர்வம் கிடையாது சார். இங்கு வந்ததும்தான், மாமா காரணமாகக் கொஞ்சம் ஈடுபாடு அரசியலில் ஏற்பட்டது. ஆனால்...''

''ஆனால், என்ன?''

''அடிக்கடி நாம் தப்புச் செய்து கொண்டிருக்கிறோமோ என்று தோன்றுகிறது. அதே சமயம் அரசியலில், இளைஞர்களும், சமூக அக்கறை கொண்டவர்களும் ஈடுபாடு காட்டாததால்தான் அரசியல், அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் ஆகிவிடுகிறது என்றும் தோன்றுகிறது. ஆனால், எனக்கு எது அரசியல் என்று விளங்கவில்லை. நான், மாமாவுக்காக இதுவரை செய்த காரியங்கள் எதுவும் அரசியலா என்று தோன்றுகிறது. ஏதோ, மண்டி வியாபாரி ஒருவருக்கு, கொள்முதலுக்கு அலையும் மானேஜர் மாதிரிதான் நான் செயல்படுகிறேனோ என்று எனக்குத் தோன்றுகிறது.''

முதல்வர் சிரித்தார். அப்போது டெலிபோன் மணி சிணுங்கியது. அவர் ரிஸீவரை



எடுத்தார்.

''சொல்லுங்கள்'' என்றார்.

''..........

''தெய்வநாயகம் சொல்கிற நிலம்தானே. அதையே, அவர் சொல்கிற விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள். அதில் பிரச்னை இல்லை.''

''............''

''நான் பார்த்துக் கொள்கிறேன்.''

ரிசிவரை வைத்து விட்டு அவர் தொடர்ந்தார்.

''கோகிலா மகனோடு உங்களுக்குச் சிநேகம் உண்டா?"

அவன் திடுக்கிட்டான்.

''உண்டு சார்.''

''அவள் உங்களைப் பாதிக்க இடம் கொடுத்து விடாதீர்கள். அவள் அரசியலைப் புத்தகத்தில் படிப்பவள். காகிதப் பூ மாதிரி அது. களத்தில், மண்ணில் கால் ஊன்றிச் செய்ய வேண்டிய பணி அரசியல். புத்தகம் மேய்கிற அறிவு ஜீவிகள், வெறும் வைக்கோல் அடைத்த கன்றுக் குட்டியைப் போன்றவர்கள். அவர்கள் மாடுகள் பால் சுரக்கத் தற்காலிகத் தேவைக்குரியவர்கள். என்னைக் கேட்டால், நீங்கள் தீவிரமாக அரசியல் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றே சொல்வேன். உங்களுக்கு அரசியல் அறிவு, இளமை, காரிய சாதுர்யம் எல்லாம் இருக்கிறது. மனப்பூர்வமான செயல் மட்டும்தான் இல்லை.''



அவர்சொன்னபாராட்டுரைகளில்அவன் மகிழ்ந்தான்.

''நீங்கள் சொன்னபடி செய்கிறேன் சார்.''

அவர் மகிழ்ச்சியுடன் புன்னகை செய்தார். ஒரு நிமிஷம் யோசித்தார். பிறகு சொன்னார்.

''நம் கட்சி பெரிய பேரணி ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உத்தேசித்திருக்கிறது. பேரணியும், அதன் முடிவாக ஒரு பொதுக் கூட்டமும் கடற்கரையில் ஏற்பாடு செய்ய வேண்டும். திடீரென்று ஒரு பேரணிக்கும் கூட்டத்துக்கும் என்ன அவசியம் என்று நீங்கள் கேட்க வேண்டுமே...''

''அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், சார்.''

''மக்கள் இன்னும் நம் பக்கம்தான் என்பதை இந்தப் பேரணி உணர்த்த வேண்டும். அந்தப் பேரணி, பொதுக் கூட்டப் பொறுப்பை நீங்கள் ஏற்கிறீர்கள். ஏற்று எனக்கு வெற்றியீட்டித் தருகிறீர்கள்.''

முதல்வர் அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தார்.

திடீரென்று தலையில் ஒரு கிரீடம் கவிழ்த்தது மாதிரி இருந்தது அவனுக்கு. அவருக்கு மேலே ஒரு படி சென்று ஏதாவது சொல்ல வேண்டும் என்று கிருஷ்ணமூர்த்திக்குத் தோன்றியது.

''திடீரென்று ஒரு பேரணியை நடத்தினால் நன்றாக இருக்குமா, சார்? ஒரு சரியான காரணம் வேண்டுமே...''

''குட்... இப்போதான் நீங்கள் என் அலை வரிசையில் இயங்கத் தொடங்கியிருக்கிறீர்கள்.. நீங்களே ஒரு காரணமும் சொல்லுங்கள்.''

''பொதுவாகத் தமிழர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். அவர்களின் உணர்ச்சியைத் தொடுவது மாதிரி அந்தப் பேரணியின் காரணம் அமைந்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், விலைவாசிதான் சரியான காரணமாக இருக்க முடியும். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் பேரணி நடத்தலாம் சார். நம் மக்களுக்கு அது பிடிக்கும். பணக்காரர்கள் மீது பழியைச் சுமத்தலாம். மத்திய அரசின் கொள்கைகளைத் தாக்கலாம். அவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை கொடுத்த மாதிரி இருக்கும்.''

''பிரமாதம்'' என்றார் அவர், மிக மகிழ்ச்சியுடன். அவரின் வெள்ளைப் பல் வரிசை துலங்கியது.

''தெய்வநாயகமும், கோகிலாவும் உங்களைப் பற்றிச் சொன்னது தப்பு இல்லை. ஏன், குறைத்தே சொல்லியிருக்கிறார்கள், என்று தோன்றுகிறது..'' என்றவர், தொடர்ந்து. ''நீங்கள் ஒரு பெரிய புத்திசாலி'' என்றார்.

ஜிவ்வென்று வானத்தில் பறப்பது மாதிரி இருந்தது கிருஷ்ணமூர்த்திக்கு.

அவர் சொன்னார்.

''ராமசாமியைப் பாருங்கள். பணம், கார் மற்றும் மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பார். அடுத்த வாரம் ஞாயிறு அந்தப் பேரணி என்று முடிவு செய்வோம். செய்தாயிற்று. அதற்கான சூழ்நிலையைத் தயார் செய்வது என் பொறுப்பு.''

சில நிமிஷங்கள் அமைதியில் சென்றன.

முதல்வர் எழுந்ததைப் பார்த்து அவனும் எழுந்தான்.

''கிருஷ்ணமூர்த்தி... இப்படி சோபாவில் வந்து அமருங்கள். உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது...''

அவனுக்குப் பக்கத்திலேயே, அவரும் அமர்ந்தார். இயன்ற வரை தன்னைச் சுருக்கிக் கொண்டு, பவ்யமாக அமர்ந்தான் அவன்.

முதல்வர் சொன்னார்.

''கிருஷ்ணமூர்த்தி! மாவட்ட அரசியல் சரியாக இல்லை. உங்கள் மாவட்ட அரசியலைத்தான் சொல்கிறேன். சென்ற முறை இருபத்து மூன்று எம்.எல்.ஏ.க்களைக் கொடுத்த மாவட்டம் அது. தெய்வநாயகம் சரியாகத்தான் இயங்கினார். இப்போதெல்லாம் மாவட்ட அரசியலில் அவருக்கு ஆர்வம் குறைந்து விட்டது. நிறைய எதிரிகள் வேறு அவருக்கு ஏற்பட்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சு, நம்மோடு இருக்கட்டும். அவரை எதிர்க்க என்றே, ஒரு பெரும் அணி ஒன்று மாவட்டத்தில் உருவாகியிருக்கிறது. அவர் என் இனிய நண்பர். நெடுங்காலம் என்னுடன் இருப்பவர். நல்லவர். வல்லவர். ஆனால், எதிர்ப்பு என்று கிளம்பிய பின், அதை 'சீரியசாக' எடுத்துக் கொள்ள வேண்டியது என் கடமை அல்லவா? தொண்டர்களின் உணர்வைப் பெரிதாக எடுத்துக் கொள்பவன் நான். அவரை எதிர்ப்பவன் இருளாண்டி. சக்தி வாய்ந்த இளைஞன். ஆனால், இருளாண்டி, அந்த மாவட்டத்து மெஜாரிட்டி ஜாதியைச் சேர்ந்தவன் இல்லை. அதிர்ஷ்டவசமாக, நீங்கள் அந்த ஜாதியைச் சேர்ந்தவர். உங்களுக்குப் புரியும். உங்கள் மாமா வகிக்கும் பொறுப்பை, விரைவில் நீங்கள் ஏற்க நேர்ந்தாலும் ஆச்சர்யமில்லை. தகுதியான மணி மகுடம் தகுதியான தலையைத்தான் அலங்கரிக்க வேண்டும். நான் சொல்வது சரிதானே?''

அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

''நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் என்று எனக்கு விளங்குகிறது. எப்படி மாமாவின் இடத்தில் அமர்வது என்று யோசிக்கிறீர்கள். சரிதானே? அரசியலில் இதெல்லாம் சகஜம்தான், கிருஷ்ணமூர்த்தி. தருமருக்குப் பதவி பெரிதா? இருந்தும் கௌரவரிடம் போரிட முன் வந்தார். அது அவருடைய கடமை. அதற்காகவே அவர் வில்லை எடுத்தார். ஒரு கட்டத்தில் போர் இடுதல் அவசியமாகிறது. உறவு, நட்பு, எல்லாம் இரண்டாம் பட்சம்தான். நீங்கள் இளைஞர். பெரிய நிலைகளையெல்லாம் நீங்கள் அடையப் போகிறீர்கள். நீங்கள் புறப்படலாம்.''

கிருஷ்ணமூர்த்தி பிரமை நீங்காமல் வெளியே வந்தான். காரில் ஏறியதும்,

பயணம் செய்ததும், வீட்டில் வந்து இறங்கியதும் அவன் நினைவில் இல்லை.

மாமா, தெரு வாசற்படியிலேயே அவனை எதிர்பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

"என்ன ஆச்சு, கிருஷ்ணமூர்த்தி?" என்றார் ஆவல் மீதூற.

"சும்மா பேசிக் கொண்டிருந்தோம், மாமா. ஏதோ ஒரு பெரிய பேரணி நடத்த வேண்டும் என்றார். அதுபற்றி மட்டும்தான் பேசிக் கொண்டிருந்தோம்."

"மட்டும்தான், என்றால்? வேறு என்ன பேசினீர்கள்?" என்றார், மாமா.

சுதாரித்துக் கொண்டான் கிருஷ்ணமூர்த்தி.

"நிலவிஷயம் நல்லபடி முடிந்தமைக்காகச் சந்தோஷம் தெரிவித்தார். உங்களை மிகவும் பாராட்டினார். உங்கள் மேல் மிகுந்த மரியாதை இருக்கிறது மாமா, அவருக்கு."

மாமாவின் முகம் மலர்ந்தது. மாமா அந்த வார்த்தைகளைத்தான் எதிர்பார்த்தார். மனித சுபாவமே அதுதானே! நாம் விரும்புகிற விஷயத்தையே எதிராளியும் பேச வேண்டும் என்றுதானே நாம் எதிர்பார்ப்போம்.

"வேறு ஏதாவது குறிப்பாகப் பேசினாரா?"

"இல்லை."

"அப்புறம், அவர் அறையில் நாற்பத்து மூன்று நிமிஷங்கள் இருந்திருக்கிறாய். வேறு ஒன்றும் பேசவில்லை என்கிறாயே...?"

"உண்மைதான் மாமா. வேறு ஒன்றும் பேசவில்லை."

"சரி" என்றார் மாமா, அரை மனத்துடன்.

சரியாக அந்த நேரம் போன் ஒலித்தது. கிருஷ்ணமூர்த்தி எடுத்தான்.

"நான் கோகிலா. கிருஷ்ணமூர்த்தி தானே?"

"ஆமாம்."

"உடனே புறப்பட்டுப் பெரியார் ரோடு, பதினேழாம் நம்பர் வீட்டுக்கு வாருங்கள். நான் அங்குதான் இருக்கிறேன். காந்தி சிலை அருகில் இருக்கும் பெரியார் ரோடு. மாமா கேட்டால், முதல்வரின் பி. ஏ. கூப்பிடுகிறார் என்று சொல்லுங்கள். ராமசாமியும் என்னுடன் இருக்கிறார். சரியா?"

அவன் போனை வைத்தான்.

"யார்?" என்றார் மாமா.

"முதல்வரின் பி. ஏ." என்றான் கிருஷ்ணமூர்த்தி.

மாமாவின் முகத்தில் பிரகாசம் சட்டென்று வடிந்தது.

"என்ன சொல்கிறான்?"

"உடனே புறப்பட்டு வரச் சொல்கிறார்."


அவன் புறப்பட்டான்.

(தொடரும்)

பரிசு: கலர் டீ.வி.

டீ. வி. அல்லது வீடியோ தொடர்பான எந்த ஓர் அனுபவத்தையும் ரத்தினச் சுருக்கமாக எழுதலாம். டீ. வி. நிகழ்ச்சிகளைக் கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற்படாமல் நல்லவிதமாகவோ கிண்டலாகவோ விமர்சிக்கலாம். ஆனால் ஒன்று: நீங்கள் எழுதியதைப் படிப்பவர் சிரித்தாக வேண்டும்! பிரசுரமானால் பரிசு ரூ. 25/—. தவிர, பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு ஆறு மாதம் சென்று குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டீ. வி. பரிசு.

மிகச் சமீபத்திய கல்கி இதழின் தலையங்கப் பக்கத்தில் உள்ள தேதிப் பகுதியை மட்டும் — மூன்று வரிகள் — நீங்கள் எழுதும் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேல்புறம் ஒட்டி அனுப்புங்கள்.




PARRY'S PAGE
Parry's
நண்பர்களே!
Parry's
THE KING OF SWEETS
பகல் நேரங்களில் மரங்கள் தங்களிடமுள்ள தண்ணீரை இழக்கின்றன. ஒரு பெரிய மரம், ஒரு வெப்பமான தினத்தில் கிட்டத்தட்ட 50 வாளி தண்ணீரை நிலத்திலிருந்து உறிஞ்சி எடுத்து, அதை இலைகளின் வழியே வெளியே விடும்.
ஒரு சின்ன பரிசோதனை மூலம் நீங்கள் இதை நேராகப் பார்க்கலாம். ஒரு புதரின் இலைகள் அடர்ந்த கிளையின் மேல் ஒரு பிளாஸ்டிக் பையை நுழைத்து அதன் வாயை கிளையின் தண்டைச் சுற்றி அழுத்திக் கட்டி விடுங்கள். மூன்று நாட்கள் அப்படியே இருக்கட்டும். அந்தப் பையின் உள்ளே நிறைய தண்ணீர் சேர்ந்திருப்பதைப் பார்க்க முடியும். வெப்பம் அதிகமாக இருக்கும் நாட்களில், பையில் சேரும் தண்ணீரின் அளவும் அதிகமாக இருக்கும்.
விரல் ரேகை சித்திரங்கள்
உங்களுக்குத் தெரியுமா?
தேவையானவை :
ஒரு பென்சில், ஒரு ரப்பர், வெள்ளை டிராயிங் காகிதம் வாட்டர் கலர்கள், கறுப்பு ஸ்கெட்ச்பேனா, வர்ணங்களைக் குழைக்க ஒரு தட்டு, கை துடைத்துக் கொள்ள பழைய துணி
படம் வரைந்து வர்ணம் தீட்ட இது ஒரு புதுமையான வழி. சாதாரணமாகப் படத்தை வரைந்துவிட்டு வர்ணம் தீட்டுவோம். ஆனால் விரல்ரேகை சித்திரங்களை வரைய இதற்கு நேர்மாறாகச் செய்ய வேண்டும். ஏதாவது நாலைந்து வர்ணங்களைப் பிளேட்டின் மீது தனித்தனியாகக் குழைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு வர்ணத்தின் மீது கட்டை விரலை வைத்து அழுத்தி எடுத்து, பிறகு டிராயிங் காகிதத்தின் மீது விரலை அழுத்துங்கள். துணியினால் கையைத் துடைத்துக் கொண்டு விட்டு, வேறொரு வர்ணத்தின் மீது கட்டை விரலைப் பதித்து, அதைக் காகிதத்தின் மீது பதிக்கவும். காகிதத்தின் மேல் பதிக்கப்பட்ட விரல் அடையாளங்கள் நன்றாக உலரும் வரை காத்திருங்கள். இப்போது ஸ்கெட்ச் பேனாவினால் விரல் அடையாளத்தின் மீது கோடுகளைப் போட்டு அதை மீன் சித்திரமாகச் செய்யலாம். அல்லது ஒரு பறவை, தவளை, ஆடு, பூனை ஏன் ஹம்ப்டி-டம்டி சித்திரமாகக் கூட செய்ய முடியும்.
இந்த முறையில் நீங்கள் செய்யக் கூடியவை ஏராளம். ஒரு பெரிய வெள்ளைக் காகிதத்தை எடுத்துக்கொண்டு அதை விரல் ரேகை சித்திரங்களால் நிரப்பி, அதை அன்பளிப்புப் பொருளுக்குச் சுற்றப்படும் அலங்கார காகிதமாக உபயோகிக்கலாம். அல்லது ஒரே அளவு சிறிய காகிதங்களில் ஒவ்வொரு விரல் ரேகை சித்திரம் வரைந்து, கடிதம் எழுதும் காகிதமாக உபயோகிக்கலாம். விரல் ரேகை சித்திரங்களை வரைந்து வாழ்த்துக் கடிதங்களையும் தயாரிக்கலாம். இப்படி எத்தனை எத்தனையோ செய்யலாம்!
A B C D E F G
தேசக்கொடிகள் தெரியுமா?
உலகின் பல நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் இந்த பஸ்ஸில் இருக்கிறார்கள். பல்வேறு நாட்டின் கொடிகளை நீங்கள் அறிந்திருந்தால், யார் எந்த தேசத்தவர் என்பதைக் கண்டு பிடிக்கமுடியும்.
விடை: A — ஸ்விட்சர்லாந்து.
B — இந்தியா, C — ரஷ்யா,
D — துருக்கி, E — ஜப்பான்,
F — இங்கிலாந்து, G — அமெரிக்கா
CUT AND KEEP
Parry's
THE KING OF SWEETS
HTA 7196

வட்டமேஜை

வயிறு குலுங்கச் சிரித்தோம்..

* தங்களின் சாதுர்யமான வினாக்களுக்கு அடக்கத்துடனும், அதே சமயத்தில் அழுத்தமாகவும் பதில் அளித்திருக்கும் எ.ம.மு.க. தலைவர் பாக்யராஜ் வளரும் அரசியல்வாதி என்பதை இந்தப் பேட்டியின் வாயிலாக நிரூபணம் செய்து விட்டார்.

புதுவை — 3, சோலைநகர் என். கே. வேலு.

* 'நம்பிக்கைதான், வாழ்க்கை உயர்வுகளுக்கு அடிப்படை' என்பது உண்மைதான்! இருந்தாலும், எம்.ஜி.ஆரின் இடத்தைப் பிடிக்க முயலும், பாக்யராஜின் அரசியல் பிரவேச நம்பிக்கைகள், மிக மிக அதிகமானவை! 'எல்லாம் அவரே' — என்ற நிலையில், மற்றவர்கள் எப்படி எம்.ஜி.ஆருக்குத் தெரியாமல் தவறிழைத்திருக்க முடியும்? நம்ப முடியவில்லை!

வேலாயுதம்பாளையம்,
எம். சம்பத்.

* 'தேர்தல் பட்ஜெட்' என்று எழுதப்பட்டிருந்த தலையங்கத்தில், ஏழை மக்களின் எதிர்காலத் தலைவிதியைச் சுட்டிக் காட்டியிருந்ததும், இது ஒரு எம்.ஜி.ஆர். ஸ்டைல் பட்ஜெட் என்று கேலி செய்திருந்ததும் முற்றிலும் உண்மையாகும்.

பெங்களூர், ப. மூர்த்தி.

* வரவு—செலவு திட்டத்திலுள்ள தொய்வுகளையும், அதனால் பொது மக்களுக்கு ஏற்படப் போகும் அவதிகளையும், இதனையெல்லாம் ஆணித்தரமாய் வாதிட்டுப் பயனுள்ள விதத்தில் மாற்றுவதற்கு ஒற்றுமையில்லா எதிர்க் கட்சிகளையும், தங்களின் தலையங்கம் அற்புதமாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

புதுச்சேரி — 12, புதுவை ராஜமுனி.

* நேர்மையாய் வாழ நினைப்பவருக்கு நேரும் இன்னல்களை அற்புதமாய் விளக்கியது பீஷ்மனின், 'கடைசி வரை' சிறுகதை. பாராட்டுக்கள்.

கோவை, உமார்த்தி.

* 'பார்சலில் தலைவர்கள்' என்ற தலைப்பில் கார்ட்டூன்களை வெளியிட்டு, எங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து விட்டீர்கள்....!

திருச்சி — 20, ஆர். அப்துல் சலாம்.

* சேற்றில் முளைத்த செந்தாமரை போன்று சேரியில் பிறந்தாலும் சிறப்படைய முடியும் என்பதற்கு குத்துச் சண்டை வீரர் டைஸன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

கரூர் — 2, எம். தனபாலன்.

* குத்துச் சண்டை வீரர் புருனோவின் ரசிகராக தாட்சர் டி.வி.யில் பார்த்தது கிடக்கட்டும். புருனோவின் தாய் அந்த குத்துச் சண்டைக் காட்சியைக் கண்டு, 'இனி வேண்டாம் மகனே இந்தப் பரிசும் புகழும்... நீ வாங்கிய இந்த குத்துக்களை நினைத்தால் நெஞ்சம் பதறுகிறது...' என்று பி.பி.சி.யில் சொன்னதைக் கேட்டதும் மனம் கனத்துப் போனது.

மேல்பட்டி (வ.ஆ.).
எல். மாறன்.

* 'மாசக் கடைசி' — சிறுகதை ஒவ்வொரு நடுத்தரவர்க்க அரசு ஊழியனின் உண்மை நிலையையும், 'ஜெராக்ஸ்' காப்பி எடுத்து போலிருந்தது! பாராட்டுக்கள்!

மயிலாடுதுறை. கி. நட்டிண. எழில்.

* 'ஓடிப் போனவர்' சிறுகதை நன்றாக இருந்தது. எழுபத்தைந்து வயது ஆனாலும் அடுத்தவர் கையை எதிர்பார்க்காமல் உழைக்கும் ராஜசேகரன் போன்றவர்கள் சிலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கோயமுத்தூர் — 6, ஏ. ஜி. கல்யாண சுந்தரம்.

* ஜெயந்தி சுந்தரம் எழுதிய 'அடி மனத்தில் அச்சங்கள்...' என்ற சிறுகதையில் தாழ்வு மனப்பான்மை மனிதனுக்குக் கான்சர் வியாதி போன்றது என்று ஒப்பிட்டுக் கூறியது உண்மையிலே அற்புதம்.

லால் குடி, எம். இராஜேந்திரன்.

* அன்பால் அற்புதங்கள் நிகழ்த்தும் அண்ணாசாஹேப்! கட்டுரையைப் படிக்கப் படிக்க நெஞ்சு விம்மிதமுற்று விரிந்தது. கோயில் கூரையைச் சாராயம் காய்ச்சப் பிரித்துச் சென்ற மக்களை உடைய ராலேகான் சித்தி கிராமம், இன்று எழுபது கிராம் தங்கப் பதக்கம் உள்ள கோவிலின் அறை பூட்டப்படத் தேவையில்லை என்னும் அளவுக்கு அடியோடு மாறியுள்ளது என்றால், இந்த அசாத்தியமான காரியத்தையும் சாத்தியமாக்கியுள்ள 'அண்ணாசாஹேப்' ஹசாரேவை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்!

திருக்குவளை, கவிஞர் வெற்றிப் பேரொளி.

* வைர வேல் திருட்டு; ரத்ன கிரீடத்தைக் காணவில்லை; ஐம்பொன் சிலைகள் கடத்தல் என்று பத்திரிகைகளில் கொள்ளைச் செய்திகளைப் படித்துப் படித்து மனம் வெறுத்துப் போன எனக்கு, ஹசாரே சாஹேப்புக்கு வழங்கப்பட்ட எழுபது கிராம் தங்கப் பதக்கம் பாதுகாப்பே இல்லாமல் அங்குள்ள கோவிலில் பத்திரமாக உள்ளதைப் படித்த போது, நமது தேசமே என் மனத்தில் உயர்ந்து நின்றது. வாழ்க கிஷன் பாபு! அவர் வழியில் வளர்க பாரதம்!

அண்ணாமலை நகர், டி. கே. குணநாயகன்.

* எனது கணவர் ஒரு தொழிலாளி. நாற்பத்தோரு வயது. எங்களுக்குப் பத்து வயதிலும் மூன்று வயதிலும் இரு குழந்தைகள். என் கணவருக்குச் சிறுநீரகங்கள் பழுதுபட்டு, மாற்றுச் சிறுநீரக ஆபரேஷன் செய்ய வேண்டியதாகிவிட்டது. அவர் சகோதரர் சிறுநீரக தானம் செய்கிறார். இதற்கு எழுபதாயிரம் ரூபாய் செலவாகும் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். எனக்குத் தாராளமாக உதவி, என் கணவர் உயிரைக் காப்பாற்றித் தருமாறு கல்கி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

34, ஜம்புலிங்கம் தெரு. ஜி. வேதவல்லி.
நுங்கம்பாக்கம்,
சென்னை — 600 034.

முகங்கள்



வெளிக்கப் பேச்சுகளும் திருப்திகரமாய் முடிந்துவிட்ட நிலையில், மேற்கொண்டு ஏற்பாடுகளை வேகமாய்ச் செய்யத் தொடங்கி விடலாம் என்ற உற்சாகத்தில், பரிமளா உதடுகளுள் பாட்டோடு நிலைக் கண்ணாடி முன் அமர்ந்து, எண்ணெய்க் குளியலின் ஈரம் இன்னும் லேசாய் மின்னுகிற நீளக் கூந்தலைக் கொண்டை போட்டு முடித்த நேரத்தில், சரோஜினி உள்ளே வந்தாள்.

''வா, வா சரோ, உட்காரு'' என்றவாறு சிநேகிதியை நோக்கித் திரும்பி உட்கார்ந்து புன்னகை செய்தாள் பரிமளா. குரல் கனத்திலும் மூக்கு உறிஞ்சலிலும் சமீபத்திய ஜலதோஷம் முற்றிலும் அகன்றிராமை தெரிந்தது.

''ஒரு சேதி சொல்லப் போறேன் உனக்கு. சரோ! என்ன தெரியுமா? எங்க அனிதாவுக்கு...''

''பாகி வீட்டுக்காரர் போய்ட்டார்'' என்றாள் சரோஜினி.

ஒருகணம் எதுவும் புரியவில்லை.

''ம்?''

''பாகி வீட்டுக்காரர் போய்ட்டார்.''

''யாரு பாகி?''

''அவதான், பாகீரதி, என் சிநேகிதி. உனக்குக் கூட அவளைத் தெரியுமே பரிமளா, என்ன இப்படிக் கேட்கிறே?''

இப்போது நினைவு வந்தது. சரோஜினியின் வெகுகாலத் தோழி இந்தப் பாகீரதி என்கிறவள். அபிராமபுரத்தில் அவள் வசிக்கும் வட்டாரத்தின் நுகர்வோர் சங்கத்தில் செயலாளராம். உயரமாய், சற்றுப் பருமனாக இருப்பாள். அந்தப் பருமனுக்குப் பொருந்தாத சன்னக் குரல். அவள் கணவர் வக்கீலோ, டாக்டரோ, என்னவோ சொன்னாள் சரோஜினி. இவர்கள் வயதை ஒத்தவள் தான். அதாவது நாற்பத்தைந்திலிருந்து ஐம்பதுக்குள் இருக்கும். ஒரு பிள்ளை இருக்கிறானென்று சரோஜினி சொன்னதாய் நினைவு. ஏழெட்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் இவள் குறளகத்தில் ஓர் உறவினர் வீட்டுக் கிரகப்பிரவேசத்தில் பரிசளிப்பதற்காகச் சந்தன மரப் பேழை வாங்கிக் கொண்டிருக்கையில் சரோஜினியும் பாகீரதியும் அங்கு வர நேர்ந்தபோது சரோஜினி தன் இரண்டு சிநேகிதிகளை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தாள். அதன் பிறகு பரிமளா பாகீரதியை நாலைந்து முறை அங்குமிங்கும் பார்த்திருக்கிறாள், பேசியிருக்கிறாள். பேச்சு என்ன, பேச்சு! ''சௌக்கியமா மாமி?'' ''உங்க ஏரியாவில் கொசுத்

தொல்லை எப்படி?'' ''எங்க வீட்ல பம்ப் அடிச்சாக் கூடத் தண்ணி வர்றதில்லே பாதி நாள்'' என்கிற ரீதியில் ஓரிரு நிமிடங்கள். ஆழ்ந்த பழக்கம் ஏதுமில்லை. வெறும் பரிச்சயம்தான். திடீரென்று பாகி என்று சொல்லவே, அதுதான் உடனே புரியவில்லை.

''ஓ, அவளா!'' என்றாள்.

''இப்பத்தான் அவ பிள்ளை கிட்டேயிருந்து போன் வந்தது.. கேட்டதுமே கிளம்பிட்டேன்... அந்த மனுஷன் ரொம்ப நல்லவர் பாவம்...''

பரிமளாவினுள் லேசான எரிச்சல் எழுந்தது. அந்த 'நல்ல மனுஷன்' கொஞ்சம் கூடக் கரிசனம் இல்லாமல் இன்றைக்குப் பார்த்துச் செத்திருக்க வேண்டாம் என்று தோன்றியது. இவளுக்கோ நற்செய்தி நாவுக்குள் துடிக்கிறது. மூத்த பெண் எம். ஏ. பட்டதாரி அனிதாவுக்குப் பெரிய பாங்கர் வீட்டில் கல்யாணம் கூடி வருகிறது. பெண் பார்த்தல், லௌகிக பேரம் எல்லாக் கட்டங்களும் நல்ல விதமாய் நிறைவேறி, ''முகூர்த்தம் வைக்க வேண்டியதுதான் பாக்கி!'' என்று மகிழ்ந்து முழங்க இருக்கும் நேரத்தில் எங்கேயோ இவளுக்கு நெருக்கமில்லாத ஒரு பாகியின் — இவள் சந்தித்துக் கூட இல்லாத ஒரு கணவன் மண்டையைப் போட்டு இந்த நற்செய்திக்கு வாய்ப் பூட்டு இடுகிறான்.

இது ஓர் அபசகுனமோ என்று கண நேரம் மின்னிய எண்ணத்தைப் பரிமளா உடனடியாய்ப் புறக்கணித்தாள். அந்த மனிதர் இந்த வீட்டுக்குச் சம்பந்தமில்லாதவர். பேப்பரில் வருகிற எத்தனையோ 'அபிசுவரி'களைப் போல் இதுவும் ஒன்று. இவளுடைய பெண்ணின் விஷயத்தில் சகுனமாகவோ, அபசகுனமாகவோ இருக்கக் கூடிய தகுதி — ஏன், இந்தக் கல்யாணச் சந்தோஷத்தில் ஒரு சிறு இடறலாக இருக்கும் தகுதி கூட — கிடையாது அந்த முகம் தெரியாத வக்கீலுக்கு (அல்லது டாக்டருக்கு).

சரோஜினியின் முகத்தைப் பார்த்தாள். வாடியிருந்தது. அவளுக்குப் பாகீரதி மிகவும் நெருங்கிய தோழி. அதற்காக இப்படியா! 'ஒரு சேதி சொல்லப் போகிறேன்' என்று சொன்னவளிடம் 'என்ன சேதி?' என்று கேட்க மாட்டாளோ ஒருத்தி?' 'எங்க அனிதாவுக்கு' என்று வேறு தொடங்கியிருக்கிறாள். 'அனிதாவுக்கு விசேஷமா? கல்யாணம் நிச்சயமாயிருக்கா? நல்ல இடமா? பையன் என்ன பண்றான்?' என்று உற்சாகம் காட்டத் தோன்றாதோ ஒருத்திக்கு? இவளெல்லாம் சிநேகிதியாம்.

''பாகி எப்படித்தான் இதைத் தாங்கிக்கப் போறாளோ பாவம்'' என்றாள் சரோஜினி.

''பாவம்'' என்று தானும் எதிரொலித்த போதுதான் பரிமளாவுக்கு இந்த வார்த்தை முதலிலேயே சொல்லாமல் விடுபட்டுப் போனது ஞாபகம் வந்தது. இன்னொரு முறையும் ''பாவம்'' என்று சொல்லி அதற்கு ஈடு செய்தாள். கேட்க வேண்டிய கேள்வி இன்னொன்று இருந்ததும் நினைவுக்கு வர,

''என்ன ஆச்சாம்?'' என்றாள்.

''ஹார்ட் அட்டாக்காம். நேத்து ராத்திரி கூட நன்னாத்தான் இருந்திருக்கார். வயிறாரச் சாப்பிட்டாராம். பெண்டாட்டி பிள்ளையோட உட்கார்ந்து ரம்மி ஆடினாராம். படுக்கப் போறதுக்கு முந்தி வழக்கம் போல் அம்பாள் ஸ்தோத்திரம் கூடச் சொல்லிட்டுத்தான் படுத்துண்டாராம். இன்னிக்கு விடிகாலையில் தூங்கியெழுந்த கொஞ்ச நாழிக்கெல்லாம் நெஞ்சை வலிக்கிறாப் போல இருக்குன்னு மயக்கமாயிட்டாராம். பாகி உடனே டாக்டருக்கு ஃபோன் பண்ணியிருக்கா. டாக்டரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்க் கவனிச்சிருக்கார். என்ன பண்ணி என்ன... 'பாடி'யை வீட்டுக்குக் கொண்டு வந்தப்புறம் பிள்ளை உறவுக்காராளுக்கும் என் மாதிரி நெருங்கின சிநேகிதாளுக்கும் டெலிபோன் பண்ணியிருக்கான்.''

பரிமளா அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இவள் எழுந்து போக மாட்டாளா என்றிருந்தது. இவள் இல்லாவிட்டால் மனசில் ததும்பிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியைச் சங்கடமில்லாமல் முகத்திலும் செயலிலும் வழிய வழிய ஓடவிட்டுக் கொண்டு திளைக்கலாம்.

''நான் இப்போ பாகி வீட்டுக்குத்தான் போயிண்டிருக்கேன். நீயும் வரியா?'' என்றாள் சரோஜினி.

பரிமளா திடுக்கிட்டாள். ''நானா?''

''ஏன், நீ அவளைப் பார்த்துத் துக்கம் விசாரிக்க வேணாமா? உனக்கும் தெரிஞ்சவதானே? நீ வர்றதானால் அழைச்சுண்டு போகலாம்னுதான் முதல்ல இங்கே வந்தேன். ஆட்டோ வாசல்ல காத்துண்டிருக்கு.''

பரிமளா அவசரமாய் மனசுக்குள் கணக்குப் போட்டாள். பாகீரதியை அவளுக்கு எந்த அளவுக்குத் தெரியும்? குறளகத்தில் அறிமுகமான பிறகு தண்ணீர்த் துறை மார்க்கெட்டில் ஒரு முறை, சித்தி விநாயகர் கோயிலில் இரண்டு முறை, நல்லியில் ஒரு முறை — ஆக மொத்தம் ஐந்து முறை சந்தித்திருக்கிறாள். அறிமுகச் சந்திப்பை விட்டு விட்டால் நாலே முறைதான். இந்த அளவு பழக்கம் ஒரு நபரை துக்க விசாரிப்புக்கு உரித்தாக்குகிறதா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே விசாரிக்காவிட்டால் தவறில்லை. இறந்த மனிதரை அவள் பார்த்தது கூட இல்லை.

ஆனால் பின்னால் பாகீரதியைச் சந்திக்க நேர்ந்தால் சங்கடமாகிவிடும். விஷயமே தெரியாது என்று சொல்லிவிடலாம். நம்ப வைக்க முடியாது. சந்திக்கும்போது சாவதானமாய் விசாரிப்பதும் அநாகரிகம். இன்று போகாவிட்டால் நாளை அல்லது நாளை மறுநாள் போக முடியாது. அந்த இரண்டில்

ஒரு நாள் இங்கு வருவதாக வருங்காலச் சம்பந்திகள் சொல்லியிருக்கிறார்கள். இவள் வீட்டில் இருந்தே ஆக வேண்டும். அதற்கடுத்த நாள் வெள்ளிக்கிழமை. அன்றும் போக முடியாது. இது தாலித் துக்கம். சனிக்கிழமைஇரண்டாம்பெண்ணின் பிறந்தநாள். தோழிகளை அழைத்திருக்கிறாள். விருந்துக்கும் வீடியோவுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஞாயிறன்று கணவன், பெண்கள், பிள்ளைகள் எல்லாருமே வீட்டில் இருக்கும் போது இவளை இங்கே அங்கே நன்றாக நகரவிடுவார்களே! பிறகு திங்கட்கிழமை. அன்று நிச்சயம் போக முடியாது. திங்கள் துக்கம் திருப்பிக் கிடைக்கும். பிறகு செவ்வாய், ஒருவேளை செவ்வாய்க்கும் வெள்ளியின் தடை இருக்கலாம். ஏன் விஷப் பரீட்சை? பாம்பா, பழுதா என்று தெரியாவிட்டால் தாண்ட வேண்டியதுதானே? செவ்வாயை விட்டால் பிறகு அடுத்த புதன், வியாழன் என்றுதள்ளிக்கொண்டேபோகும். அதையெல்லாம் விட, இப்போது இவளுடனேயே போய்வந்து விட்டால் அப்புறம் கவலையில்லை. இதில் இன்னொரு சௌகரியமும் இருக்கிறது. சரோஜினிதான் பாகிரதியின் நெருங்கிய தோழியாதலால் பேசவதோ, அழுவதோ அவள் செய்து விடுவாள். தான் சும்மா முகத்தில் மட்டும் ஒரு பொருத்தமான துக்க பாவனையுடன் பேசாமல் உட்கார்ந்திருந்து வந்துவிட்டால் போதும். இன்று செவ்வாய்க்கிழமை என்பது தடங்கவில்லை. சடலம் இருக்கும் போதே போவதானால் கிழமை பார்க்கத் தேவையில்லை.

''சரி, வர்றேன்'' என்று பரிமளா தன் கொண்டையை அவிழ்த்துக் கோடாலி முடிச்சுப் போட்டுக் கொண்டாள். நாற்பத்தெட்டு வயதிலும் ஓர் இழைகூட நரைக்காத அடர்ந்த கருங்கூந்தல். இன்று கொண்டை வழக்கத்தை விடவும் அழகாக வந்திருந்தது. பிரிக்கும் போது விரல்கள் கூட 'மாட்டேன், மாட்டேன்' என்று அழுவது போல் இருந்தது. என்ன செய்யலாம்?

சரோஜினி இன்னும் சோக முகத்துடன் வாய் பேசாமல் இவள் கிளம்புவதற்காகக் காத்திருப்பவள் போல உட்கார்ந்திருந்தாள். 'நீ சொல்ல வந்த சேதி என்ன?' என்று நிச்சயமாய் அவள் கேட்கப் போவதில்லை.

''இந்த நீலப் புடைவை ரொம்பப் பளிச்சுனு இருக்கு, இல்லே சரோ? இதைப் போன வாரம்தான் இங்கே பக்கத்துல புதுசாத் திறந்திருக்கிற கடையில் வாங்கினேன். தெருக்காரா எல்லாருக்கும் கடைத் திறப்புக்கு 'இன்விடேஷன்' வந்துது. புடைவை அழகாயில்லே? ஆர்ட்சில்க். நூற்றைம்பது ரூபாய்... சாவு வீட்டுக்கு இத்தனை பளிச்சுன்னு ஒரு நீலம் வேணாம். 'டல்' கலரா ஏதேனும் உடுத்திண்டு வந்துடறேன், ஒரு நிமிஷம் இரு.''

அவள் உடுத்தியிருந்த சேலையின் நீல நிறமோ அதன் பளிச்சுத்தனமோ உணர்விலேயே பதிந்திராதது போன்ற பார்வையுடன் சரோஜினி, ''அதெல்லாம் ஒண்ணும் மாத்திக்க வேணாம், இப்படியே கிளம்பு. எதை உடுத்திண்டா என்ன? நாழியாறது. பாகிகிட்ட சீக்கிரம் போகணும், வா'' என்றவாறு எழுந்து நின்றாள்.

''இதோ கிளம்பிட்டேன். பாவம், பாகிரதி. பூவையும் பொட்டையும் இழந்துட்டு...''

குபீரென்று ஒரு தீக்கொழுந்து சரோஜினியின் முகத்தில் எழுந்தது. ''என்னடி பேசறே? புருஷன் என்கிறவன் வெறும் பூவும் பொட்டும்தானா? மூர்த்தி ஒரு நல்ல மனுஷன், பரிமளா! பாகியும் நானும் காலேஜில் படிக்கிற நாள்ல மூர்த்தி குடும்பம் என் பக்கத்து வீட்டில்தான் இருந்தது. பாகி என் வீட்டுக்கு வரும் சந்தர்ப்பங்களில் அவளுக்கும் மூர்த்திக்கும் பரிச்சயமாகி அப்புறம் பரஸ்பரம் பிரியம் ஏற்பட்டுது. அவா காதலுக்கு நான் தூது போயிருக்கேன், தெரியுமா? ஒருத்தரையொருத்தர் உயிரா நேசிச்சுக் கல்யாணம் பண்ணிண்ட ஜோடி அது. அந்த மாதிரியான ஓர் அன்பு வெறும் சம்பிரதாய உறவா? உயிருக்குயிராய் நேசிச்ச ஓர் அருமையான ஜீவனை இழக்கிற போது அது பூவையும் பொட்டையுமெல்லாம் விட ரொம்ப ரொம்பப் பெரிய இழப்பு பரிமளா!''

இப்படி இவள் வெடிப்பாளென்று பரிமளா எதிர்பார்க்கவில்லை. என்ன சொல்லிவிட்டாள் இப்போது? விதவையாகும் ஒருத்தியைப் பற்றி அவள் பூவும் பொட்டும் இழந்தாள் என்று சொல்வது உலக வழக்கு



ஆசிரியர்: உங்க வீட்ல லாட்டரி டிக்கெட் அதிகமா வாங்குவீங்களா...?

மாணவனின் தந்தை: எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

ஆசிரியர்: பரீட்சையில பாஸாயிட்டியான்னு கேட்டதுக்கு, உங்க பையன் 'ஒரு நம்பர்ல போயிடுத்து சார்'னு சொல்றானே!

— சீர்காழி ஸ்ரீராம்.





''என் பெண்ணிடம் டி.வி. கேட்டுக் கொடுமைப்படுத்தறீங்கன்னு கேள்விப் பட்டு ஒரு டி.வி. வாங்கிக் கொடுத்தேன். இப்போ அவனை டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கச் சொல்லி வேறு கொடுமைப் படுத்தறீங்களாமே, நியாயமா மாப் பிள்ளை?''

— கோவை. அ. கதிர்வேல்

தானே? இதற்கு ஏன் இப்படி ஒரு கோபம்?

''ம், ம், கிளம்பு.''

அபிராமபுரத்தை அடையும் வரை ஆட்டோவில் இருவருமே பேசவில்லை. சரோஜினி மௌனமாயிருக்கும் போது தான் மட்டும் எப்படிப் பேசுவது? காலை பதினோரு மணியின் வெயில் முகத்தில் சுள்ளென்று உறைத்தது. காற்றில் அலையும் முன்னுச்சிக் குழலை மூக்கை உறிஞ்சியபடியே சரிப்படுத்திக் கொண்ட போது, பரிமளாவுக்கு இன்னொரு நினைப்பு வந்தது. கடந்த பத்து நாட்களாகப் பிடித்திருந்த கடுமையான ஜலதோஷம் காரணமாய்ச் சென்ற வாரம் அவள் தலைக்கு எண்ணெய் ஸ்நானம் செய்திருக்கவில்லை. அதனால் உடம்பில் சூடு அதிகமாய்விட்டது. இப்போது இரண்டு நாட்களாய் ஜலதோஷம் சற்றுக் குறைந்திருக்கவே இன்று, செவ்வாய்க்கிழமையாகவும் அமைந்திருந்தது மிக நல்ல விஷயமாய்த் தோன்ற, எண்ணெயீக் குளி செய்திருந்தாள். ஆனால் சடலத்தைப் பார்த்துவிட்டு வந்தால் தலை முழுகியே தீரவேண்டும். அது சம்பிரதாயம். ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொள்வதால் மறுபடியும் சளி பிடித்துக் கொண்டு கழுத்தை அறுத்தால்? சே, சரோஜினி அழைத்தபோது 'நான் வரவில்லை' என்று சொல்லியிருக்க வேண்டும்...

ஆட்டோ நின்று அந்த வீட்டில் நுழையும் போது வாசல் பெயர்ப் பலகையில் 'டி. எஸ். மூர்த்தி' என்பதைப் படித்துப் பின்னே சிறு அச்சில் தெரிந்த எழுத்துக்களைப் படிக்கு முன் சரோஜினியின் வேக நடைக்கு ஈடு கொடுத்து உள்ளே விரையும்படி ஆகிவிட்டது. அந்த எழுத்துக்கள் சட்டத்துறைப் பட்டமா, அல்லது மருத்துவத் துறைப் பட்டமா என்று சொல்லியிருக்கும்.

முன் அறையில் உடலைக் கிடத்தியிருந்தார்கள். அசப்பில் அப்படி ஒன்றும் நீள உடலாய்த் தோன்றவில்லை.. பாகீரதியின் கணவன் (டாக்டரா, வக்கீலா?) அவள் உயரம்தான் இருந்திருக்க வேண்டும். மயிரிழை குறைவாகவே இருக்குமோ?

அறையில் சிலர் அங்கங்கே வாட்ட முகத்துடன் நின்று கொண்டும், சிலர் உடலையொட்டி உட்கார்ந்து கொண்டும் இருந்தார்கள். எல்லாரும் தன் நீலப் புடைவையையே வெறிப்பது போல் பரிமளாவுக்குத் தோன்றியது.

சடலத்தின் முகத்தருகே பாகீரதி அசையாமல் உட்கார்ந்து அந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சரோஜினி விரைந்து சென்று அவள் கையைப் பற்றிக் கொண்டு, அருகில் வாய் பேசாமல் அமர்ந்தாள்.

தன்னைப் பாகீரதி கவனித்தாளா என்று பரிமளாவுக்குத் தெரியவில்லை. கவனிக்காத வரையில் நல்லது என்றும் தோன்றியது. பார்வைகள் சந்தித்திருந்தால் புன்னகை செய்வதா இல்லையா என்பது பிரச்னையாகியிருக்கும்... அவள் ஓர் ஓரமாய் வேறு இரண்டு பெண்களின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவர்களுடைய கீழ்க்குரல் பேச்சுக்களிலிருந்து பாகீரதியின் செல்வநிலை நன்றாயிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அது தவிர, ஒரே பிள்ளை அவள் மீது பாசத்தைப் பொழிகிறவனாம். அதோ அங்கே வெளி வராந்தாவில் ஈர வேஷ்டியும் வெற்று மார்புமாக சாஸ்திரியுடன் ஏதோ பேசிக் கொண்டு நிற்கிறானே, அவன்தான் பிள்ளையாக இருக்க வேண்டும்.

பாகீரதியை அந்தத் தொலைவிலிருந்து நிதானமாய்ப் பார்த்தாள் பரிமளா. அழுததினால் சிவந்திருந்த கண்கள் என்றாலும் இப்போது பாகீரதி அழவில்லை. கண்ணீர் அனைத்தும் பார்வையாக உறைந்து போய்விட்டது போல் அந்த இறந்த முகத்தை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். தோரணையிலிருந்த வெறுமை, உலகம் தீண்ட முடியாத ஒரு தனிமைக்கு அவள் சென்று விட்டாள் என்று நினைக்கச் செய்தது. கணவன் இறந்தபின் தன் கதி என்ன ஆகுமோ என்ற கவலையோ பயமோ இல்லை இது. ஏனெனில் அவள் பொருள் வசதியும் மகனின் பரிவும் உள்ளவள். இந்தத் துயரம் அந்தக் கணவன் என்ற மனிதனின் மறைவுக்காக மட்டுமே. சரோஜினி சொன்னது போல், இந்த இழப்பு மகத்தானது.

பாகீரதியை இப்போது ஒரு முப்பரிமாண வடிவமாய்க் காண முடியவில்லை. தன் உயரம், பருமன், ஆகிருதி யாவும் கணப்பொழுதில் மறைந்து, அருமையான ஒன்றைப் பறிகொடுத்து நிற்கும் துயரத்தின் நாடித் துடிப்பாக, துயரத்தின் அர்த்தம் மட்டுமாக, துயரம் என்ற தத்துவமாக அவள் மாறியிருந்தாள்.

கண்களை அறைந்து விழிக்கச் செய்த அக்காட்சியினால் திடீரென நிமிர்ந்து உட்கார்ந்த பரிமளா, ''பாகி வீட்டுக்காரர் போய்ட்டார்'' என்ற சொற்களை இப்போது தான் கேட்பவள் போல் உணர்ந்தாள்.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VI
ராஜ்மோகன் காந்தி

11



• சூ-என்-லாய்: சீனத் தலைவரின் துரோகம்!



• ராஜேந்திர பிரஸாத்: டயரியில் எழுதிய பாராட்டு!

சீனாவின் படையெடுப்பு: நம்பி ஏமாந்த நேரு!

பொதுவாக நேரு — ராஜாஜி வாக்கு வாதங்கள் கௌரவமான முறையில் அமைந்திருந்தன. ஆனால் சில சமயங்களில் அவை தாழ்ந்த நிலைக்கு இறங்கி விட்டதும் உண்டு! உதாரணமாக, 1961 இறுதியில் ஸி. ஆர். எழுதும் போது, ''நேரு தாம் மிக நவீனமான மனிதர் என்பதாக ஒரு மாயத் தோற்றத்தில் இருக்கிறார். இந்த மாயைதான் காங்கிரஸ் கட்சியைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. சமீப காலம் வரை நேரு தாம் இன்னும் இளமையாக இருப்பதாகக் கூட எண்ணி வந்தார்!'' என்று குறிப்பிட்டிருந்தார். இதற்குச் சில காலம் முன்பாக நேரு, நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசும் போது, ''ராஜாஜி அமர்ந்திருந்த பதவி நாற்காலியில் வேறு ஒருவர் — ராஜாஜியின் பார்வையில் கல்வி அறிவில்லாத முரட்டு ஆசாமி ஒருவர் — அமர்ந்திருப்பது மட்டுமின்றி, அவர் சிறப்பாகவும் ஆட்சி நடத்துவதைக் காண ராஜாஜியால் பொறுக்க முடியவில்லை. அதனால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று சொன்னார். இதனை இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டது. நேரு இதனை மறுக்கவில்லை. ஸி. ஆர். பதில் அளித்தார்:


''நான் செய்கிற காரியங்களுக்கு ஏதோ சொந்தக் காரணங்களைக் கண்டுபிடிக்கச் சிலர் முயற்சி செய்கிறார்கள். அதுபற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் எல்லா நல்ல மனிதர்களுக்கும் நான் உறுதி அளிக்க விரும்புவது என்னவென்றால், அத்தகைய தவறான வழிகளில் செல்லக் கூடிய ஆண்டுகளையெல்லாம் கடந்து நான் வயது முதிர்ந்தவனாகி விட்டேன். நான் சண்டை போடுவதெல்லாம் பெர்மிட் — லைசென்ஸ் — கண்ட்ரோல் — முறையை எதிர்த்துத்தான்.''

''நேருவின் பேச்சு அற்பத்தனமானது'' என்று எழுதினார் கால்ஸா. ''ராஜாஜி பேச்சாற்றலில் வல்லவர். தமது பேச்சின் பின் விளைவுகளை எடைபோடக் கூடிய சாமர்த்தியம் உள்ளவர். அப்படிப்பட்டவர் நேருவிடம் தனிமையில் உரையாடும் போதுகூட, காமராஜ் பற்றிச் சேற்றை வாரிப் பூசுவது போல் இவ்வளவு கேவலமாகப் பேசியிருக்கவே முடியாது. நடந்திருப்பது என்னவெனில், நேரு, காமராஜ் பற்றிய தமது கருத்தைத் தமது அரசியல் எதிரியான ராஜாஜி சொன்னது போல் கூறி, அவருக்குக் காயத்தை ஏற்படுத்தி, அவப்பெயரைத் தேடித் தரவும் முயன்றிருக்கிறார்!''

ராஜாஜியின் சுதந்திரக் கட்சி 1962 — இல் தேர்தலைச் சந்திக்கும் போதுதான் சோதனைக்கு உள்ளாகும். ஆனால் அதன் முக்கியத்துவம் பலரால் பல காலம் முன்னதாகவே உணரப்பட்டது. உதாரணமாக, குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரஸாத் 1960 ஏப்ரலிலேயே தமது டயரியில் பின்வருமாறு எழுதினார்.

''எண்பத்தோரு வயதிலும் ராஜாஜி அதிசயமான சக்தியுடன் இயங்குகிறார். இரண்டு தமிழ் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து எழுதுகிறார். ஓர் ஆங்கில இதழுக்கும் எழுதுகிறார். தவிர, சதா அறிக்கைகள் விடுவது, பேட்டிகள் அளிப்பது, பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுவது, பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றுவது என்று சுறுசுறுப்பாக இருக்கிறார். கடந்த சில வாரங்களில் அவர் பீகார், பஞ்சாப், உ. பி., டில்லி மற்றும் கல்கத்தாவில் சுற்றுப்பயணங்கள் செய்திருக்கிறார். அவர் எழுதுவன, பேசுவன எல்லாம் உள்ளத்தைக் கூர்மையாக ஊடுருவுவனவாகவும் 'பளிச்'சென்று விளங்கிப் பரபரப்பூட்டுவனவாகவும் உள்ளன. அவர் தடுமாறியதாகவோ, தர்க்க ரீதியாகச் சரியில்லாததைக் கூறியதாகவோ எப்போதுமே ஒரு சிறிய அறிகுறிகூடத் தென்பட்டதில்லை.''

சுதந்திரக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வந்ததற்கு ஒரு சான்று, அதனை அடிக்கடி நேரு குற்றம் கூறி விமர்சித்ததுதான். மேலும், 'கூட்டுறவு விவசாயம், விவசாயிகளின் விருப்பத்துக்கு விரோதமாக



ஒருவர்: என்ன மூணு அறிக்கை விடுறீங்க?''

அவர்: ஒண்ணு சொந்தக் கருத்து. இரண்டாவது கட்சிக் கருத்து. மூணாவது அரசின் கருத்து!

— என். ஆர். சுப்பிரமணியன்

அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது' என்று நேருவே பல முறை பல கூட்டங்களில் கூறினார். இதனை ஒரு கொள்கை விளக்கமாக அவர் பேசிய போதிலும் உண்மையில் பின்வாங்கலே ஆகும். காங்கிரஸ் கூட்டுறவு விவசாயக் கொள்கையைக் கைவிட்டது. சுதந்திரக் கட்சியின் மிகப் பெரிய சாதனைகளுள் ஒன்று. மற்றொரு சாதனை, மக்கள் அச்சமின்றித் தங்கள் கருத்துக்களைப் பேச முன்வந்ததாகும். கட்சிக்கு ஓராண்டு நிறைவடைந்த போது ஸி. ஆர். சொன்னார்:

''குற்றங்களைச் சுட்டிக் காட்டி விமர்சிக்கும் உரிமையை மக்கள் உணரச் செய்திருக்கிறோம். சிறைப்பட்டிருந்த கருத்துச் சுதந்திரத்துக்கு விடுதலை தந்திருக்கிறோம். மக்களைத் தன் பிடியில் சிக்க வைத்திருந்த அச்சம் என்னும் அரக்கனை நாம் இன்னும் கொன்று விடவில்லை என்றாலும் அவனை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறோம்!''

அச்சமற்ற இந்தக் கருத்துச் சுதந்திரமும், சுதந்திரக் கட்சியின் இருபத்தோராவது கொள்கையும், நேருவிடம் தமக்குத் தனிப்பட்ட முறையில் ஏதும் விரோதம் கிடையாது என்பதை நிரூபிக்க ராஜாஜிக்குப் பல சந்தர்ப்பங்களில் உதவின. உதாரணமாக, நவம்பர் 1959 — இல் சீனா இந்திய எல்லைக்குள் புகுந்து பல்லாயிரம் சதுர மைல் பரப்பளவை ஆக்கிரமித்துக் கொண்ட போது, மசானி போன்றவர்கள் பிரதமரைத் தாக்கி நிலைகுலையச் செய்ய, இதனை ஒரு பொன்னான சந்தர்ப்பமாகக் கருதினர். ஆனால் ஸி. ஆர்., 'சீனாவின் கெட்ட நடத்தைக்கு நேரு மீது பழி சுமத்தக்கூடாது' என்று அவருக்குப் பரிந்து பேசினார். ''சீனத் தலைவர்களை நேரு நம்பினார். அவர்கள் நேருவுக்குத் துரோகம் செய்து விட்டார்கள். இதற்கு நேருவைக் குற்றம் சொல்ல முடியாது'' என்றார்.

இந்தக் காலகட்டத்தில் நடந்த இரு நிகழ்ச்சிகள் ராஜாஜியின் வாக்குச் சாதுர்யத்தையும் குண இயல்பையும் பளிச்சிட்டுக் காட்டுவனவாக உள்ளன.

சுதந்திரக் கட்சியில் ஹிந்தி நடிகர் பிரேம்நாத் சேர்ந்திருந்தார். அவர் அழைப்பை ஏற்று, அவர் இல்லத்துக்கு விருந்தில் பங்கேற்கச் சென்றார் ராஜாஜி. அப்போது பிரேம்நாத்தின் மனைவி ராஜாஜிக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்: ''பினாராய்; மிகப் பிரபலமான நட்சத்திரம்'' என்றார் எஸ். வி. எஸ். ''அதாவது ஒரு சினிமா நடிகை என்று சொல்கிறாயா?'' என்று கேட்டவாறே ஸி. ஆர். பினா ராயை மேலும் கீழுமாகப் பார்த்தார். பிறகு, ''நிஜமாகவா? சினிமாவில் நடிக்க இத்தனை அழகு தேவையா என்ன?'' என்று கேட்டார்!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஸி. ஆர். சேலத்தில் ஒரு வீடும், அதையொட்டிய நிலமும் வாங்கியிருந்தார். அதனை டாக்டர் சுந்தரம், ஓர் ஆஸ்பத்திரி கட்டுவதற்குத் தேவைப்படுவதாகக் கூறிக் கேட்டார். ''உங்களால் எவ்வளவு தர முடியும்?'' என்று வினவினார் ஸி. ஆர். மார்க்கெட் விலைக்குக் குறைவாகவே ஒரு தொகையைக் கூறி, ''இவ்வளவுதான் என்னால் தர முடியும்'' என்றார் சுந்தரம். ''நல்ல காரியத்துக்குக் கேட்கிறீர்கள்; எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டார் ஸி. ஆர்.!

காஸா 1961 ஜூன் மாதம் காலமானார். ''இந்தியப் பத்திரிகை உலகு ஒரு ஜாம்பவானை, ஒரு மாவீரனை இழந்து விட்டது'' என்று ஸி. ஆர். எழுதினார். ''நான் சோர்வுற்ற போது எனக்கு ஊக்கமளித்த, என் மீது அன்பைச் சொரிந்த ஒருவரை நான் இழந்து விட்டேன். காஸா எல்லோராலும் விரும்பப்பட்டவர். ஏனென்றால் அவர் எல்லோரிடமும் அன்பு செலுத்தினார். மன்னிப்பதற்கு எப்போதும் தயாராயிருந்தார். ஆண்டவனிடம் சரணாகதி என்ற தத்துவத்துக்கு வாழ்கின்ற உதாரணமாக விளங்கினார். என்னுடைய இழப்பு மகத்தானது. சுய பச்சாத்தாபத்தை என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.''

சுயராஜ்யாவின் ஆசிரியராக காஸாவுக்குப் பதில் போதன் ஜோஸப் பதவி ஏற்றார். வாராவாரம் ஸி. ஆரின் தலையங்கக் கட்டுரையும் 'அன்பார்ந்த வாசகர்களுக்கு' என்ற பகுதியும் தொடர்ந்தன.

தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. காங்கிரஸை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கில் கம்யூனிஸ்டுகள் அல்லாத எதிர்க்கட்சிகளுடன் உடன்பாடு கொள்ள சுதந்திரக் கட்சி முயன்றது. பொதுவாக இது நல்ல பலனைத்தரவில்லைஎனினும்,ராஜஸ்தான், பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தொகுதிவாரி ஒப்பந்தங்களை முறையே ஜனசங்கம்,அகாலிதளம்,தி.மு.க.ஆகியவற்றுடன் செய்து கொண்டு, மும்முனைப் போட்டிகளைச் சுதந்திரக் கட்சி தவிர்த்தது. தி. மு. க. தலைவர் அண்ணாதுரையுடன் ராஜாஜிக்கு ஏற்பட்ட நட்பினைத் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் உருவான ஒரு விசித்திர நிலை என்றுதான் வர்ணிக்க வேண்டும்!

(தொடரும்)

* போராட்டம் தொடரும்



வன்னியர் போராட்டம்

* கே. மகேஷ், சங்கராபுரம்.

? பீகாரில் பகவத்ஜா ஆசாத் முதலமைச்சர் பதவியிலிருந்து "ராஜினாமா" செய்தது குறித்து?

! அடுத்து வந்துள்ள சத்யேந்திர நாராயண் சின்ஹாவும் ராஜினாமாக் கடிதத்துடன் தயாராகத்தான் பதவி ஏற்றிருக்கிறார்!

* சி. மணி, புத்தனாம்பட்டி.

? 'நூறு கோடி ரூபாய் ஊழல் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷன் தேவையில்லை' என்று கூறி விட்டாரே கருணாநிதி?

! எல்லாமே ஃபைல்களில் தெள்ளத் தெளிவாக இருக்கும் போது விசாரணைக் கமிஷன் எதற்கு என்று அவர் எண்ணியிருக்கலாம்! மேலும் கமிஷன் என்று போட்டால், அவர் எல்லாவற்றையும் அலசி ஆராயப் போக, எஸ். டி. சோமசுந்தரம் நோக்கில் "தமிழர் பண்பாட்டுக்கு" ஆபத்து வந்துவிட்டால் என்ன செய்வது!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'உலகின் மிக விலை உயர்ந்த பசை அ. தி. மு. க. அணிகளை ஒன்று சேர்த்த 1¼ கோடி மதிப்புள்ள இணைப்புப் பசைதான்' என்று ப. சிதம்பரம் கூறியுள்ளாரே?

! பசை, விலை உயர்ந்ததாக இருப்பதால் அது சிறந்ததாக இருக்க வேண்டும் என்ற

* ராஜினாமா தயார்!





* ஸி. ஐ. டி. தொல்லை!

* கமிஷன் தேவையில்லை





மதிப்பு மிக்க பசை!

அவசியம் இல்லை. மேலும், உடைந்து ஐந்தாறாகச் சிதறிய அ. தி. மு. க. வின் இரு பகுதிகள்தான் ஒட்டப்பட்டுள்ளன—அதுவும் தலைகீழாக!

* வி. ராதாகிருஷ்ணன், திருச்சி.

? நூறு மணி நேரம் மாவு ஆட்டியும் காய்கறி நறுக்கியும் சாதனை படைக்கும் முயற்சியில் காந்தி கிராமப் பல்கலைக் கழக மாணவர்கள் இறங்கியுள்ளனரே?

! சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வம் வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் அது ஆக்கபூர்வமான சாதனையாக இருக்கலாம். காந்திய நெறியில் நூறு மணி நேரம் சர்க்காவில் நூல் நூற்கக் கூடாதா? அல்லது நூற்று தொழுநோயாளிகளுக்குச் சேவை செய்யக் கூடாதா?

* இடலை சுதா, குளத்தூர்.

? 'என் டெலிஃபோன் ஒட்டுக் கேட்கப்படுகிறது. ஸி. ஐ. டி. கும்பலின் தொல்லை அதிகரித்துள்ளது' என்று ஜெயலலிதா புகார் கூறியிருக்கிறாரே?

! கூடவே, 'ஸி. ஐ. டிக்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன்; ஏனென்றால் என்னிடமோ என் கட்சியிலோ ரகசியம் ஒன்றுமில்லை' என்றும் அவரால் கூற முடிந்திருந்தால் அவரைப் பாராட்டலாம்.

* பா. சுந்தரராஜன், மதுரை.

? முன்னர் ஓர் இதழில், 'எம். ஜி. ஆர்.

தொடருமாமே?

தமக்குப் பின் ஓர் அரசியல் வாரிசை உருவாக் காமல் போனது தவறு' என்று எழுதியிருக்கி றீர்கள். சமீபத்திய தலையங்கம் ஒன்றில், 'ஜனநாயகத்தில் சொத்துக்கு வாரிசு உரிமை கொண்டாடலாம்; ஆனால் ஆட்சிக்கு வாரிசு உரிமை கிடையாது' என்று கூறியிருக் கிறீர்கள்! ஏன் இந்தக் குழப்பம் உங்க ளுக்கு?

! இதில் குழப்பம் உங்களுக்குத்தான் ஏற் பட்டிருக்கிறது. எனக்கு இல்லை. முன்னர் குறிப்பிட்டது கட்சி விவகாரம். பின்னர் குறிப்பிட்டது ஆட்சி விவகாரம். எம். ஜி. ஆர். உட்கட்சி ஜனநாயகத்தை நன்கு வளர்த்து, அதன் மூலம் தமக்கு அடுத்த தலை வர்களை வரிசைப்படுத்தியிருந்தால் அந்தக் கட்சி உடைந்தே இருக்காது. அ. தி. மு. க. ஆட்சியும் தேர்தலுக்குரிய காலம் வரும் வரை தொடர்ந்திருக்கும். கட்சியும் உடைந்து தேர்தல் என்றும் வந்த பிறகு, சிதறிய அணி களின் தலைவர்களும், தலைவிகளும், ஒவ் வொருவரும் தாங்கள்தான் எம்.ஜி.ஆர். ஆட் சிக்கு வாரிசு என்பது போல் பேசியதும் நடந்து கொண்டதும் தவறுதான். அந்நிலையில் ஆட் சிக்கு வாரிசு யார் என்பதை மக்கள் அல் லவோ தீர்மானிக்க வேண்டும்! தண்டனை பெற்ற பிறகல்லவோ இவர்களுக்குத் தவறு உறைக்கிறது!

* எஸ். ஏ. மயில்சாமி, கோவை.

? தி.மு.க.வின் புதிய ஆட்சியை மூப்பனார் மனம் திறந்து பாராட்டியிருப்பது குறித்து...?

! நல்லவேளை, தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தார்கள். இல்லையென்றால் இந் நேரம் சாராய சாம்ராஜ்யக் கோட்டை யின் வாசலில் காவலிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார்கள்!

* ஏ. கிரி, மேலக்காவேரி.

? இந்தியன் எக்ஸ்பிரஸ் அலுவலகத்தில் மீண்டும் சோதனை நடந்துள்ளதே?

! காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக இருக்கலாம். ஆனால், தக்கர் கமிஷன் அறிக்கை 'லீக்' ஆகிவிட்டதென்ற சந்தேகம் அரசுக்கு ஏற்பட்டு, அது பிரசுர மாகுமுன் கைப்பற்றி விடலாம் என்ற எண் ணத்தில் செயல்பட்டிருக்குமோ என்றுதோன் றத்தான் செய்கிறது.

* டி. பிரியன், குடியாத்தம்.

? 'வன்னியர் பிரச்னை தீராவிட்டால் மீண் டும் போராட்டம் தொடரும்' என்று ராம தாஸ் விடுத்துள்ள அறிக்கை பற்றி...?

! இன்றுள்ள நிலையில் முன்னேறிய வகுப் பினருக்கு முப்பத்திரண்டு சதம்தான் இட ஒதுக்கீடு உள்ளது. மற்றவையெல்லாம் பிற் படுத்தப்பட்டவருக்கு அல்லது மிகவும் பிற் படுத்தப்பட்டவருக்குத்தான். இந்த முப்பத்தி ரண்டு சதவீதத்திலும் பிற்படுத்தப்பட்டவர் போட்டியிட அனுமதியுண்டு. இதனை மேலும் குறைத்தால் இப்போது ராம தாஸுக்கு உள்ள அதிருப்தியைவிட அதிக மாக மற்ற சமூகத்தினருக்கு உண்டாகும். பிற்படுத்தப்பட்ட நிலையைப் பொருளா தார அடிப்படையில் கணித்தால்தான், பிற் படுத்தப்பட்ட சமுதாயத்தினரிலும் வசதி உள்ளவர்களே வாய்ப்புக்களைப் பெறுவ தைத் தவிர்க்க முடியும். அன்றுதான் சமூக நீதி அனைவருக்கும் கிட்டும். அது எப்படி யானாலும் ராமதாஸ் தமது கருத்தைக் கூறி பிரசாரம்செய்யட்டும்; வன்முறைப்போராட் டங்களைத் தூண்டி விடுவதை ஏற்கவே முடி யாது.

* பி. பியூலா, பொறையார். *

? மேற்கு வங்கத்தில் இடது சாரி அரசுக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்துமாறு இ. காங் கிரஸ் கட்சியினருக்குக் கனிகான் சௌத்ரி யோசனை கூறியிருக்கிறாரே?

! இங்கு ஒருவர் கத்தி வைத்துக் கொள்ளு மாறு உபதேசித்தார் அல்லவா? அந்தப் புத்தி சாலித்தனத்துக்குத் தமது மேதாவித்தனம் குறைந்து போய்விடவில்லை என்று நிரூபித் திருக்கிறார்!

* தி. மு. க. வுக்குப் பாராட்டு!





* துப்பாக்கி ஏந்து!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

பி. பியூலா, பேராசிரியை, கணிதத் துறை, T. B. M. L கல்லூரி, பொறையார் — 609 307.



* சமகோண்ட

"குற்றங்களை அதிகரிக்கச் செய்வது, வேலையில்லாத் திண்டாட்டம்தான்..."

பம்பாய் நகரத்தின் துணை போலீஸ் கமிஷனராக இருக்கும் சி. ஓ. சமகோண்ட் மனோதத்துவ ரீதியாகக் குற்றங்களை அலசி ஆராய்வதில் வல்லவர். முன்னணி சினிமா நட்சத்திரங்களிலிருந்து சாதாரண மக்கள் வரை அனைவராலும் மதித்துப் பாராட்டப்படுபவர். அவருடன் ஒரு பேட்டி......

கேள்வி: ஆங்கிலத்திலும் மனோதத்துவத்திலும் பட்டம் பெற்ற நீங்கள் எப்படி இந்தப் போலீஸ் துறைக்கு வந்தீர்கள்?

சமகோண்ட்: சப்–இன்ஸ்பெக்டர்கள் வேலைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாகச் செய்தித் தாள்களில் விளம்பரம் வந்தது. அதைக் கண்ட எனது சகோதரர் என்னிடம், 'நீ ஏன் இந்த வேலைக்கு முயற்சி செய்யக் கூடாது? ஒரு நல்ல அனுபவமாக இருக்குமே!' என்றார். நானும் விண்ணப்பித்தேன். வேலை கிடைத்து விட்டது. அவ்வளவுதான்!

கேள்வி: நீங்கள் படித்த மனோதத்துவம் போலீஸ் வேலைக்கு உதவிகரமாக இருக்கிறதில்லையா?

சமகோண்ட்: நிச்சயமாக்.

கேள்வி: போலீஸ் துறையிலுள்ளவர்கள் அனைவருமே குறைந்தபட்சத்திற்காவது மனோதத்துவ அறிவு பெற்றிருப்பது நல்லது என்று கருதுகிறீர்களா?

சமகோண்ட்: ஆமாம். சாதாரணப் போலீஸ்காரர் முதல் ஐ. பி. எஸ். அதிகாரி வரை அனைவருமே மனோதத்துவ அறிவு பெற்றிருக்க வேண்டும்.

கேள்வி: குற்றவாளிகளைப் பிடிக்கும் போது ஏற்பட்ட சில சுவாரஸ்யமான சம்பவங்களைச் சொல்லுங்களேன்.

சமகோண்ட்: பில்லா – ரங்கா வழக்கு அனைவருக்கும் தெரிந்தது. 78 – இல் பில்லா, சினிமாக்காரர்களின் குழந்தைகளைக் கடத்தினால் நிறையப் பணத்தைச் சுலபமாகப் பெற்று விடலாம் என்ற எண்ணத்தில் செயல்பட்டான். தர்மேந்திராவின் மகன் என்று நினைத்துக் கொண்டு – ஒரு பையனைக் கடத்திக் கொண்டு போய் டெலிபோன் செய்தான். அந்த போன் கால் எங்கிருந்து வருகிறது என்று டெலிபோன் துறையில் கேட்டபோது, ரிஷிகபூரின் ஆர். கே. ஸ்டுடியோவிலிருந்து என்றார்கள்! அங்கு போய் விசாரித்த போது அப்படி யாருமே போன் செய்யவில்லையென்று தெரிந்தது. மீண்டும் அவனிடமிருந்து வந்த போன் கால் ஒரு கம்பெனி நம்பரிலிருந்து வந்ததாகத் தெரியவே, அங்கு போய்த் தேடினோம். அங்கும் அப்படி யாரும் போன் செய்ததற்கான அடையாளமேதெரியவில்லை! ஆனால் டெலிபோன் எக்ஸ்சேஞ்சிலோ அந்த நம்பர்களிலிருந்துதான் போன் செய்ததாக உறுதி செய்கிறார்கள். இது எப்படிச் சாத்தியம்? நகரம் முழுவதும் தேடிக் கொண்டிருந்

தோம். அந்த நேரத்தில்தான் மின்சாரக் கம்பம் ஒன்றின் கீழ் ஒரு டாக்ஸி நிற்பதைக் கண்டேன். ஏதோவோர் உள்ளுணர்வு உந்த அதைச் சோதனையிட்டோம். அந்த டாக்ஸியிலிருந்து கொண்டுதான் டெலிபோன் கம்பிகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு டெலிபோன் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது!

மனோதத்துவ ரீதியாக ஒரு நிகழ்ச்சி. நான் குற்ற இயல் பிரிவில் இருந்தேன். குற்றவாளி என்று சந்தேகப்பட்ட நபரைப் பிடித்தபோது அவன் வெறும் 'ஆ... ஊ...' என்றுதான் பேசினான். மருத்துவச் சோதனை செய்த டாக்டர்கள் அவன் செவிட்டூமையாக இருக்கக் கூடும் என்றார்கள். ஆயினும் எங்களால் நம்ப முடியவில்லை. எனவே, அவனை ஓர் இருட்டறையில் அடைத்து வைத்தோம். அவனோடு தங்க எங்கள் போலீஸ்காரர்களையே சக குற்றவாளிகள் போல் அவனறையில் தங்க வைத்தோம். இரவில் அந்த அறையின் கதவு திறந்திருந்தது. அப்போது குற்றவாளிகள் வேடத்திலிருந்த ஒரு போலீஸ்காரர், 'இதுதான் சரியான சமயம்; வா, ஓடிவிடலாம்' என்று மற்றவரிடம் சொல்ல, மற்றவர், 'எங்கே போவது?' என்று கேட்க, செவிட்டூமை போல் நடித்த நபர், தன்னையறியாமலேயே, 'எனக்குத் தெரிந்த ஓரிடம் இருக்கிறது. வாருங்கள், தப்பிச் சென்று விடலாம்' என்று தப்பிக்கும் ஆசையில் சொல்ல... உண்மை தெரிய வந்தது!

கேள்வி: போலீஸ்காரர்கள் என்றாலே மக்களிடம் ஒருவித பய உணர்ச்சி இருக்கிறதே?

சமகோண்ட்: பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் போலீஸ்காரர்களைக் கண்டாலே மக்கள் ஓடி ஒளியும் நிலைதான் இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல; போலீஸ்காரர்கள் பொதுமக்களின் நண்பர்கள் என்பதைப் பல சமயங்களில் நிரூபித்துள்ளோம். ஆனாலும் முரட்டுத்தனம் காட்ட வேண்டிய சமயங்களிலும் அப்படிப்பட்ட நபர்களிடமும் நாங்களும் முரட்டுத்தனமாகத்தான் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை.

கேள்வி: சட்ட மீறல்கள் என்பது இப்போது அதிகமாகி வருகின்றனவே?

சமகோண்ட்: வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சில காரணங்களும், சில சமயங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகளும்தான் சட்டமீறல்களுக்கான அடிப்படைக் காரணங்கள். போலீஸ் துறையை அரசியல் தலையீடின்றித் தன்னிச்சையாகச் செயல்பட விடவேண்டியது அவசியம்.

கேள்வி: திருட்டுக் குற்றங்களும் வரவர அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன. இவற்றை ஒழிக்க மனோதத்துவ ரீதியாக என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?

சமகோண்ட்: வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களின் தொகை அதிகமாகிக் கொண்டு வருவது முக்கிய காரணம். இரண்டாவது, நம்முடைய வசதியைப் பிறருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது. உதாரணத்திற்குப் பணக்கார வீட்டில் வேலை செய்யும் வேலையாளுக்கு என்ன தோன்றும்? ஏராளமாக உழைத்தும் வயிறாரச் சாப்பிடக் கூட முடியவில்லை. ஆனால் இந்த வீட்டிலோ எல்லாம் மிதமிஞ்சிக் கிடக்கிறது... என்ற எண்ணம்தான் தோன்றும். அதுவே சிறு சிறு திருட்டுக்களுக்குத் தூண்டுதலையும் ஏற்படுத்திவிடும். ஆக, வேலைக்காரர்களிடமும் சரி, மற்றவர்களிடமும் சரி, நமது வசதியையும் ஆடம்பரத்தையும் காட்டாமல் இருக்க வேண்டும். மூன்றாவதாக நமக்கு நாமே ஜாக்கிரதையாக இருந்து கொள்வதுதான்.

கேள்வி: இதுபோன்ற குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம், இன்றைய சினிமாக்களும்தான் என்று சொல்லலாமா?

சமகோண்ட்: சினிமாக்கள் மட்டும்தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது. சில குற்றவாளிகள் சில குறிப்பிட்ட கிரைம் நாவல்களைப் படித்ததால்தான் தாங்களும் அதுபோல் செய்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் முக்கியமான காரணங்கள் வேலையில்லாத் திண்டாட்டம், சமூக நீதி புறக்கணிக்கப்படுவது போன்றவைதான். இது மாதிரியான காரணங்களால்தான் இளைஞர்கள் தவறான வழிகளில் செலுத்தப்படுகிறார்கள். ஆக, இக்காரணங்களைக் களைவதுதான் குற்றங்களைப் பூரணமாக ஒழிக்கக் கூடிய சரியான வழி.

கேள்வி: உங்களுக்கு ஏராளமான சினிமா நடிகர்கள் நண்பர்கள் என்று சொல்கிறார்களே?

சமகோண்ட்: ஏதாவது திருட்டு போன்ற பிரச்னைகளால்தான் அவர்கள் எனக்குப் பழக்கம். அதோடு நான் அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை; கெட்ட பழக்கங்கள் ஏதும் எனக்கு இல்லை என்பதால் அவர்கள் என்னிடம் ஓர் அதிக ஈடுபாட்டோடு பழகுகிறார்கள். அவர்கள் மட்டும்தான் என்பதில்லை. சாதாரண மக்களும் என்னிடம் ஓர் ஈடுபாட்டுடன்தான் பழகுகிறார்கள். காரணம், அனைவரிடமும் அவர்கள் குறைகளைப் — புகார்களைப் பொறுமையாக உட்கார்ந்து கேட்கிறேன்; உதவுகிறேன் என்பதுதான். உதாரணமாக, எனது போலீஸ் எல்லைக்கு அப்பாற்பட்டு ஒருவர் என்னிடம் புகார் கொடுக்க வந்தாலும் நான், 'அது எனது எல்லைக்குள் இல்லை'யென்று சொல்லி விரட்டியடிப்பது போல் நடந்து கொள்வதில்லை. அவரது புகாரைக் கேட்டு, சம்பந்தப்பட்ட ஸ்டேஷன்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு உதவுகிறேன். அதனால் அனைவருமே என்னிடம் ஓர் ஈடுபாட்டோடுதான் பழகுகிறார்கள்.

பேட்டி: **செம்பூர் சந்துரு.**

மாப்பிள்ளைக்கு வயது 101!

பாரதிய வித்யா பவனைக் கே. எம். முன்ஷி தொடங்கி சில காலம் ஆயிற்று. பவனுக்குப் பணம் தேவைப்பட்டது. முன்ஷி, கோடை வாசஸ்தலம் ஒன்றில் தமக்கிருந்த எஸ்டேட்டை விற்று, பணத்தை பவனுக்குக் கொடுத்து விட்டார்! இதை அறிந்த போது டாக்டர் ராதா கிருஷ்ணன் சொன்னார்: "முன்ஷிஜி! நான் எவ்வளவோ தத்துவங்களைக் கரைத்துக் குடித்து விட்டேன். பேசுகிறேன். அத்தனை தத்துவங்களைப் பேசினாலும் இந்தத் தாராள மனம் எனக்கு வந்திராது! ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிருப்பேன்!"

நமது கிரிக்கெட் அணி பற்றி ஒரு கிரிக்கெட் ரசிகர் ஒரு நாளிதழின் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதிக்கு எழுதியுள்ள விஷயம்: "ஒருவனின் மரணத்துக்குக் காரணமானவனாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒருவன், கிரிக்கெட் அணியில் இடம் பெற்றிருக்கிறான்! ஆனால், தேர்வுக் குழுவினரை "ஜோக்கர்கள்" என்று சொன்ன குற்றத்துக்காக ஒருவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது; அணியில் அவனுக்கு இடம் தராமல் ஒதுக்கப்பட்டும் இருக்கிறான்!"

லண்டனில் நூற்றி ஒன்று வயதான ஆர்னால்ட், எண்பத்தோரு வயதான ஜாய்ஸ் என்பவரை மணந்து கொண்டார்!



இருவரும் தள்ளு நாற்காலியில் அமர்ந்து சர்ச்சுக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால் கின்னஸ் புத்தகத்தில் ஆர்னால்டுக்கு இடமில்லை! ஏற்கெனவே நூற்றி மூன்று வயதான மாப்பிள்ளை ஹாரி ஸ்டீவன்ஸ் கின்னஸ்ஸில் இடம் பிடித்திருக்கிறார்!

தஞ்சைப் பெரிய கோயிலில் தொல் பொருள் காப்பு இலாக்கா, "புகைப்படம் எடுக்க அனுமதி உண்டு; கட்டணம் இல்லை" என்று அறிவிப்புப் பலகை எழுதி வைத்திருக்கிறது. தமிழ் நாடு இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாக்காவினர், "புகைப்படம் எடுக்கப் பத்து ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்" என்று அறிவிப்புப் பலகை எழுதி வைத்துள்ளனர்!

தெற்கு பிரான்ஸில் ஒரு பெண்மணி பூமிக்கடியில் 275 அடி ஆழத்தில் ஒரு குகையில் 111 நாட்கள் வாழ்ந்து காட்டியிருக்கிறாள்! காலை—மாலை, பகல்—இரவு எதுவும் அவளுக்குத் தெரியாது! இப்படி வசிப்பதால் உடலில் என்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன; மனத்தில் என்ன சஞ்சலங்கள் தோன்றுகின்றன என்று ஆராய்வது நோக்கமாம்! இந்த ஆய்வுக்கு ஒரு விஞ்ஞானிக்கு உதவவே புதையுண்டு வாழ்ந்தாள் 32 வயதான வெரோனிகா. ஒரு சமயம் சேர்ந்த மாதிரி 31 மணி நேரம் தூங்கி விட்டாளாம்! ஆனால் எழுந்த போது சில மணி நேரம் தூங்கியதாகத்தான் தோன்றியதாம்!



நண்பர்: அங்கே சட்டசபை நடந்துட்டிருக்கு, நீங்க பாட்டுக்கு இங்கே படப்பிடிப்பில் நடிச்சிட்டிருக்கீங்களே...?

எம்.எல்.ஏ. நடிகர்: உஸ்... வெளில சொல்லிடாதே... சட்ட சபைக்கு என்னோட டூப்பை அனுப்பி வச்சிருக்கேன்...!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

டீவியில் சிங்கப்பூர், துபாய் நிகழ்ச்சிகள் காண...



●● கொடைக்கானலுக்கு ஒன்று, ஸ்ரீலங்காவுக்கு ஒன்று என இரண்டு ஆண்டனாக்கள் பொருத்துவது எங்கள் ஊரில் வழக்கம். அது போல், எங்கள் வீட்டு டீ.விக்கும் என் பக்கத்து வீட்டுக்காரர் டீவிக்கும் சேர்த்து நான்கு ஆண்டனாக்களை எனது வீட்டு டீ.வி. ஆண்டனா பைப்பில் பொருத்தி வைத்திருந்தோம்.

ஒருநாள் எங்கள் எதிர் வீட்டுக்காரர் 'ஏன் சார் உங்கள் வீட்டுக்கு மட்டும் நான்கு ஆண்டனாக்கள் பொருத்தியிருக்கிறீர்கள்? என்று கேட்டார். நான் கிண்டலாக "ஒன்று கொடைக்கானலுக்கு, ஒன்று ஸ்ரீலங்காவுக்கு, மற்ற இரண்டும் சிங்கப்பூருக்கும், துபாயுக்கும்" என்று கூறினேன்.

அடுத்த நாள் அவர் இரண்டு புதிய ஆண்டனாக்களுடன் வந்து 'சார் நீங்கதான் இந்த இரண்டு ஆண்டனாக்களையும் எங்கள் வீட்டில் பொருத்தி சிங்கப்பூர், துபாய் தெரியச் செய்ய வேண்டும்' என்றாரே பார்க்கலாம்! அவர் வாங்கிய ஆண்டனாக்களைக் கடையில் திருப்பி எடுக்க மாட்டேன் என்று கூறி விட்டதால், அதை நானே நாலு பேரிடம் விற்றுக் கொடுக்கும் படியாகி விட்டது.

— எஸ். டி. பாலசுப்ரமணியன், கமுதி.

● யாருமே (பெயர்) கேட்டிராத பெயருள்ள படம்.

● எந்தத் தியேட்டரிலும் இரண்டு நாள் கூட ஓடியிராத படம்.

● எங்கள் பாட்டிக்கும் பாட்டி, தம் கணவரோடு முதன் முதலில் பார்த்த படம்.

● தலைப்பிற்கும் கதைக்கும் சம்பந்தம் இல்லாத படம்.



(உ.ம்) ஒளி பிறந்தது. சுமங்கலி கோலம், பெருமைக்குரியவள்.

இன்வகள்தாம் டீ.வி. நிலையத்தாருக்கு கிடைக்கிறதெனில், ஏதோ வெளி நாட்டில் டீ.வி. மீது எறிய சேதப்படுத்தாத ரப்பர் செங்கல் ஒன்று தயாரித்திருக்கிறார்களாமே, அதை சீக்கிரமாக தமிழ் நாட்டிற்கு வரவழைத்தால் தேவலாம்!

— கமலா ஜானகிராமன், சென்னை—2.

●● தில்லையாடி வள்ளியம்மை நாடகத்தில் அப்பாவாக நடித்தவர், "வெல்லைக்காரன்! வெல்லைக்காரன்!" என்று மிழற்றியது எதையோ பிச்சுக்கலாம் போல் இருந்தது. வெள்ளைக்காரன் அன்று கேட்டிருந்தால் ஓடியே போயிருப்பான்! அவனை விரட்ட இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாம்.

ஆமாம்! இந்த டீவிக்குச் சுத்தமாகத் தமிழ் பேசுபவர்களே கிடைக்க மாட்டார்களா? பேட்டி காண்பவர்கள் "அவர்கல்! வந்துல்லார்கல்!" என்று சுந்தரத் தமிழ் பேசுகின்றனர். பேட்டி காண்பவர்களைப் பேட்டி கண்டு தேர்ந்தெடுக்கக் கூடாதா!

செய்தி படிக்கும் வரதராஜனைக் கேளுங்கள்! "வாணிலை நிறுவணத்தின் மேல் விமாணம் பறந்தது" என்பார்! மனித மனம் கேவலம்! நமக்கு இருக்கும் கஷ்டம் இன்னொருவருக்கும் இருந்தால் அற்ப சந்தோஷம்! எனக்கு மூக்கில் ஏதோ சதை வளருவதால் இரண்டு வருஷமாக மூக்கு அடைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் தமிழன்பன் செய்தி வாசிக்கும்போதெல்லாம் எனக்கு ஓர் ஆறுதல்!

— எஸ். ராமநாதன், திருநெல்வேலி.

●● எதிர் வீட்டு சுமதி டீ.வி. பார்க்க எங்கள் வீட்டுக்குத்தான் வருவாள். அவளுடன் அவளுடைய, பெண் நாலு வயதான, பானுவும் வருவாள்.

ஒரு நாள் டீ.வி.யில் நாடகம் நடந்து கொண்டிருந்தது. மனைவி, கணவனைக் கண்டபடி ஏசிக் கொண்டே, கையில் கிடைத்த பண்ட, பாத்திரங்களை ஒரேயடியாக, விசிறி அடித்து ரகளை செய்தாள். அதைப் பார்த்த என் அம்மா, "பார் சுமதி, ஒரு பெண்ணுக்கு எவ்வளவு ஆவேசம்



வருது!'' என்றாள்.

அதற்கு சுமதி, ''இப்படியும் இருக்காங்க'' என்றாள். அருகிலிருந்த, அவளுடைய பெண் பானு, ''ஏம்மா, நீ கூடத்தான் அப்பாகிட்ட சண்டை போடறப்போ, 'இப்படி எல்லாத்தையும் விசிறி அடிக்கிறே?'' என்றாளே, பார்க்கலாம்!

— என். ஆர். ஆர். லிங்கம், பெங்களூர் — 10.

●● வணக்கம். சென்னை தொலைக் காட்சி... மன்னிக்கவும்.. தொலைக் காட்சி நிலையம்... இன்றைய நிகழ்ச்சிகளின் விவரம்:

மாலை 6 மணிக்கு: காண்போம் கறப்போம். உதைபடாமல் கழுதைப் பால் கறப்பது எப்படி என்று விளக்குபவர் கோவேரிப் பாக்கம்.. மன்னிக்கவும்.. காவேரிப்பாக்கம் கந்தசாமி.

6.30—க்கு: வளையலும் வாழ்வும்
சிறு வயது முதல் தான் சேர்த்து வைத்துள்ள விதவிதமான வளையல்களைப் பற்றிக் கூறுபவர் மிஸஸ் வளையாபதி...

7 மணி: நிந்தனைக் கதிர்
சென்ற வார நிகழ்ச்சிகளைத் தாக்கி வந்த நேயர் கடிதங்கள். (பாராட்டி வந்த கடிதங்கள் எதிரொலியில் ஒளிபரப்பாகும்)

7.15 மணி: மனைவி மாட்சி
தம் மனைவியின் நிறைகள் சிலவற்றையும் குறைகள் பலவற்றையும் முகமூடி அணிந்து வியர்சிக்கிறார் பெயர் கூற விரும்பாத ஒரு தைரியசாலிக் கணவர்.

7.45 மணி : 'All the way for bore!'
விளம்பரதாரர் வழங்கும் நிகழ்ச்சி. **Bore well** என்ற குழாய்க் கிணறுகள் தோண்டுவது பற்றிய விளக்கச் சித்திரம்!

8.15—க்கு: உளறும் நினைவுகள்
90 வயது மாஜி நடிகை மங்களாவின் சினிமா அனுபவங்கள்!

— ரா. ரகோத்தமன், சென்னை — 24.

●● மஹாராஷ்டிர மாநில முன்னாள் முதலமைச்சர் வசந்த் தாதா பாட்டீலின் மரணச் சடங்கு இம் மாதம் 2—ம் தேதி தமிழ்ச் செய்தியின் போது காண்பிக்கப் பட்டது. அதில் வசந்த்தாதாவின் மனைவியோ சிதைக்குத் தீ வைத்த அவரது மகனோ அல்லது அவரது உறவினர்களோ, நண்பர்களோ யாருமே காண்பிக்கப்படவில்லை. திரும்பத் திரும்ப ராஜீவின் உருவத்தையே காட்டினார்கள். ஒருவரின் மரணத்தில் கூட பிரதம மந்திரிக்குத்தான் முதலிடமா? இந் நிகழ்ச்சியை பார்ப்பவர்களுக்கு இது எத்தனை வெறுப்பைத் தந்திருக்கும்?

— வி. ந. ஸ்ரீதரன், சென்னை — 9.

●● எங்கள் பக்கத்து வீட்டுப் பெண்மணி ஓர் ஆசிரியை. தெருவில் அவர் வீட்டில் மட்டுமே டீ.வி. இருப்பதால், ஞாயிறன்று படம் பார்க்க நிறையப் பேர் கூடி விடுவது வழக்கம். இது அவருக்குப் பிடிக்காத போதிலும் நேரிடையாகச் சொல்லத் தயக்கம். அதனால் ஒரு ஞாயிறன்று டீ.வி.யில் படம் ஆரம்பிக்கு முன், வீட்டின் தரையை மெழுகி வைத்து விட்டு, வருபவர்களிடம் ''அடடே, வீட்டை மெழுகி வைத்திருக்கிறேனே... இன்னும் காயவில்லையே!'' என்று சொல்ல அனைவரும் திரும்பி விட்டனர். ஒரு வயதான அம்மாள் மட்டும் ''தரை ஈரமாயிருக்கறது தெரிஞ்சுதான் இந்த சாக்கைக் கொண்டு வந்தேன்'' என்று கூறிக் கொண்டே கையோடு கொண்டு வந்த சாக்கைத் தரையில் விரித்து, டீ.வி.யின் எதிரில் ஜம்மென்று அமர்ந்து கொள்ள, டீச்சரம்மா சாக்கு, பெரியம்மாவின் சாக்கிடம் பலிக்காமல் போய் விட்டது!

— இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

●● வெவ்வேறு வகையான கடன்கள் நிறைய வாங்கியிருந்த என் தந்தை, கூட்டுறவுச் சங்கத்து 'கன்ஸ்யூமர் கடன் வாங்கி டீவி வாங்கி வந்தார். என் தாய்க்கு இதில் விருப்பமில்லை. 'ஏற்கெனவே ஏராளமான கடன்கள் இருக்கிற போது இன்னொரு கடனா?' என்று மிகவும் வருத்தமடைந்தார். முதல் நிகழ்ச்சியாக 'ஒளியும் ஒலியும்' பார்க்க நாங்கள் தயாரானோம். முதல் பாட்டு, 'நான் பட்ட கடன் எத்தனையோ?' என்று சிவாஜி பாடுவது போல் அமைந்திருக்க நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம். வருத்தத்தை மீறி எங்கள் தாயும் குபீரென்று சிரித்து விட்டார் .


— வி. உமா, சென்னை — 92.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104 /—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 14 0/—; விமானத் தபால் ரூ. 34 0/—.


இப்பொழுது!
நறுமணமிக்க ஓர்
புதிய வேவ்
ஒவ்வொரு குளியலிலும் அலையலையாய்
பூவின் நறுமணம். நாள் முழுவதும்
புதுப் பொலிவுடன் இருக்க.புதிய
'வேவ்' உங்களுக்கும் உங்கள்
குடும்பத்தினருக்கும் சகாய விலையில்
கிட்டும் ஒரு குளியல் சோப்.
புதிய வேவ்
குடும்பத்தினரின் குளியல் சோப்
உபயோகித்து பாருங்கள்!
நீங்கள் அதையே
விரும்பி நாடுவீர்கள்.
WAVE
FAMILY
BATH SOAP
Rs. 3.87
+ L.T. Extra

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka

சுவையான கணிதம்



உற்சாகமூட்டிடும் நியூட்ரின் மில்க் பிஸ்கெட்டுகள்
இருக்கும் போது ஆனந்தத்திற்குக் குறைவேது!
வீட்டுப் பாடங்கள் கூட இனி ஜோராய் இனிக்கும்.
பால் புரதத்துடன் கூடிய மொறு மொறு
பிஸ்கெட்டுகள். உள்ளங்கவர் மழலைச் செல்வங்கள்
நாளும் சுவைத்து மகிழ்ந்திட.



nutrine
BISCUITS
MILK

nutrine

பால் நலம்.
சுவை வளம்.

Mudra:Blr:NB:176:89:TAM